## I. தேவனைப் போற்றி ஆராதித்தல்

### A-1 நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிதா

**(1)**

1. *அப்பா! பிதா! உம் பிரசன்னம்
வந்தோம் மீட்பர் நாமத்தில்;
உம் பிள்ளைகள் கூடினோம்,
உம் ஆசீர்வாதம் கோரினோம்.
அவர் இரத்தம் எம்மை மீட்டு
உம் சமுகம் சேர்த்ததே!
அப்பா! பிதா! என்றழைக்க
உம் ஆவி போதித்தாரே!*

2. *உம்மைவிட்டுத் தூரம் போனோம்,
ஊதாரிபோல் அலைந்தோம்;
உம் அருளால் பாவம் போக்கி
எம்மை மீட்டுக்கொண்டீரே;
இரட்சிப்பின் ஆடை அணிந்து,
உம் பந்தியில் அமர்ந்தோம்;
உம் அருள் செல்வங்களில் நாம்
சேர்ந்து களிகூருவோம்.*

3. *கெட்டோரெமை மன்னித்தீரே
அன்பின் முத்தம் தந்தீரே;
கொழுத்த கன்றைக் கொன்றெம்மை
உம் திட்டத்தில் இணைத்தீர்!
"தொலைந்த என் பிள்ளை கண்டேன்,
மரித்தவன் உயிர்த்தான்,
ஒன்றுகூடி மகிழ்வோமே,
ஆர்ப்பரிப்போம்" என்கிறீர்.*

4. *அப்பா! பிதா! பணிகின்றோம்,
அற்புதம் எம்மில் உந்தன்
ஞானம், அருள், அன்பு கண்டு
வானோர் வியக்கின்றாரே!
சீக்கிரமாய் சிங்காசனம்*

சூழ நின்று பாடுவோம்;
எம் மீட்பில் உம் அன்பு கண்டோம்
நீரே பரிபூரணர்.

1. "Abba, Father," we approach Thee
   In our Savior's precious name.
   We, Thy children, here assembling,
   Now the promised blessing claim.
   From our guilt His blood has washed us,
   'Tis through Him our souls draw nigh,
   And Thy Spirit too has taught us
   "Abba, Father," thus to cry.

2. Once as prodigals we wandered,
   In our folly, far from Thee;
   But Thy grace, o'er sin abounding,
   Rescued us from misery.
   Clothed in garments of salvation
   At Thy table is our place;
   We rejoice, and Thou rejoicest,
   In the riches of Thy grace.

3. Thou the prodigal hast pardoned,
   "Kissed us" with a Father's love;
   "Killed the fatted calf," and made us
   Fit Thy purpose to approve.
   "It is meet," we hear Thee saying,
   "We should merry be and glad;
   I have found My once-lost children,
   Now they live who once were dead."

4. "Abba, Father," we adore Thee,
   While the hosts in heaven above
   E'en in us now learn the wonders
   Of Thy wisdom, grace, and love.
   Soon before Thy throne assembled,
   All Thy children shall proclaim
   Abba's love shown in redemption,
   And how full is Abba's name!

**(2)**

1. என் தேவனே, உம் மகத்(து)வக் கிரியைகள்
   என் உள்ளத்தில் வியப்புண்டாக்குதே;
   மேல் வானமும், திரள் நட்சத்திரமும்
   மேலோனின் மாவல்லமை காட்டுமே.

   *என் உள்ளம் பொங்கிப் பொங்கிப் பாடுவேன்*
   *நீர் வல்லவர், மாவல்லவர்! (2)*

2. காடுகளும், கண்கொள்ளாச் சிகரமும்
   கவருதே, களிப்புண்டாக்குதே;
   பட்சிகளும், பாய்ந்தோடும் நீரோட்டமும்
   பாடுதே, பரவசமாக்குதே.

3. குமாரனை, ஒரேபேறானவரை
   குருசினில் குருதி வடிய
   அரூபியே! மா அன்பின் சொரூபியே!
   அறைந்தீர் எம் பாவத்தைத் தீர்த்திட.

4. பேர் எக்காள சத்தம் தொனித்திடவும்,
   என் மீட்பர் என்னை அழைத்திடவும்,
   ஏகுவேனே, எந்நாளும் பாடுவேனே,
   நீர் வல்லவர், மகா சிறந்தவர்!

1. O Lord my God, when I in awesome wonder,
   Consider all the worlds Thy Hands have made;

I see the stars, I hear the rolling thunder,
Thy power throughout the universe displayed.

*Then sings my soul, My Savior God, to Thee,*
*How great Thou art, how great Thou art.*
*Then sings my soul, My Savior God, to Thee,*
*How great Thou art, how great Thou art!*

2. When through the woods, and forest glades I wander,
And hear the birds sing sweetly in the trees.
When I look down, from lofty mountain grandeur
And see the brook, and feel the gentle breeze.

3. And when I think, that God, His Son not sparing;
Sent Him to die, I scarce can take it in;
That on the Cross, my burden gladly bearing,
He bled and died to take away my sin.

4. When Christ shall come, with shout of acclamation,
And take me home, what joy shall fill my heart.
Then I shall bow, in humble adoration,
And then proclaim: "My God, how great Thou art!"

**(3)**

1. கர்த்தாவே, அடியார்க்கென்றும்
அடைக்கலம் நீரே;
புயலில் எம் புகலிடம்,
நித்(தி)ய வீடும் நீரே.

2. சிங்காசன நிழலின்கீழ்
உம் தாசர் வசிப்பார்;
உம் கரம் போதுமானதே
எம் காவல் நிச்சயம்.

3. பர்வதங்கள் தோன்றி, பூமி
உருவாகுமுன்னும்
அநாதியான தேவரீர்
மாறாதிருப்பீரே.

4. ஆயிரம் ஆண்டுகள் உம்
அநாதிப் பார்வைக்கு
நேற்றுக் கழிந்த நாள்போலும்,
இராச்சாமம் போலுமாம்.

5. காலம் வெள்ளம்போல் மாந்தரை
வாரிக்கொண்டோடுது;
மறந்துபோம் சொப்பனம்போல்
மறைகிறார் மாந்தர்.

6. கர்த்தாவே, அடியார்க்கென்றும்
அடைக்கலம் நீரே;
இம்மையில் நீர் எம் காவலர்,
நித்திய வீடும் நீரே.

1. O God, our help in ages past,
our hope for years to come,
our shelter from the stormy blast,
and our eternal home.

2. Under the shadow of Thy throne,
still may we dwell secure;
sufficient is Thine arm alone,
and our defense is sure.

3. Before the hills in order stood,
or earth received her frame,
from everlasting, Thou art God,
to endless years the same.

4. A thousand Ages, in Thy sight,
   are like an evening gone;
   short as the watch that ends the night,
   before the rising sun.

5. Time, like an ever rolling stream,
   bears all who breathe away;
   they fly forgotten, as a dream
   dies at the opening day.

6. O God, our help in ages past,
   our hope for years to come;
   be Thou our guide while life shall last,
   and our eternal home.

**(4)**

1. தேவனே, ஜீவ ஊற்று நீர்,
   உம் ஜீவன் தெய்வீகம்!
   பாய்ந்தோடுதே நித்தியமாய்
   ஜீவத் தண்ணீராக!

2. அன்பால் பாய்ந்தீர் குமாரனில்
   மனிதர் மத்தியில்,
   கிருபையாய் நீர் பாய்கின்றீர்
   ஆவியாய் எம்முள்ளே.

3. பாவ அக்(கி)ரமத்தால் உம்மை
   விட்டுத் தூரமானோம்.
   ஜீவன் கிருபை பொழிந்து நீர்
   குமாரனில் மீட்டீர்.

4. உம் ஆவி புண்பட, நாங்கள்
   உம்மைத் தள்ளினாலும்
   உம்மை ஜீவனாய்ப் பெற்றிட
   ஆவியாய் வருகின்றீர்.

5. குமாரனில் நீர் ஆவியாய்
என்னுடன் கலந்தீர்.
ஐக்(கி)யத்தில் அபிஷேகித்து
நீர் மேலும் பெருகுவீர்.

6. தேவன்பு, கிறிஸ்துவின் கிருபை,
ஆவியின் பாய்தலும்.
தேவனின் செல்வங்களில் என்னைப்
பங்கடையச் செய்யும்.

7. பிதா, சுதன், ஆவி--ஒன்றாய்
விசாரிக்கின்றவர்.
ஒரு மனதோ(டு) உம் அன்பைப்
பாடிப் புகழுவோம்.

1. O God, Thou art the source of life,
Divine, rich and free!
As living water flowing out
Unto eternity!

2. In love Thou in the Son didst flow
Among the human race;
Thou dost as Spirit also flow
Within us thru Thy grace.

3. Though we in sin and wickedness
Went far from Thee apace,
Yet in the Son Thou didst redeem,
Bestowing life and grace.

4. Though we have often slighted Thee,
Thy Spirit often grieved,
Yet Thou does still as Spirit come
As life to be received.

5. Thou as the Spirit in the Son
   Hast mingled heretofore;
   Thou wilt thru fellowship anoint
   And increase more and more.

6. The love of God, the grace of Christ,
   The Spirit's flowing free,
   Enable us God's wealth to share
   Thru all eternity.

7. The Father, Son, and Spirit-one,
   So richly care for us;
   Thy love with one accord we sing
   And e'er would praise Thee thus.

**(5)**

1. மீட்பரின் விலைமிகு இரத்தத்தால்
   பிதாவே, உம்மண்டை வருகின்றோம்;
   விடுவித்தேற்றுக்கொண்டீர் கிருபையால்,
   தேவனே, பிதாவே, தொழுகின்றோம்.

2. நேச மகனின் சுகந்த நாமம்
   உம் சந்நிதியில் ஏறெடுக்கிறோம்;
   மரித்தீந்தவர் மட்டில்லாக் கிருபையால்
   விசுவாசத்தால் உம்மைக் காண்கின்றோம்.

3. உம்மோடவரில் களிகூர்கின்றோம்.
   அவரில் உம் இன்பம், எம் பூரிப்பு;
   ஆயிரத்தில் அழகு சிறந்தோர்,
   பங்கமில்லாதோர் மாட்சி மங்காது.

4. விண்ணனைமுன் பணிந்தாராதிப்போம்,
   விஸ்வாசத்தால் அன்பரைக் காண்கின்றோம்;
   சோதரரோடு பாடல் நடத்தும்
   இரட்சகருக்கே மகிமை என்றென்றும்.!

1. O God our Father, we would come to Thee
   In virtue of our Savior's precious blood;
   All distance gone, our souls by grace set free,
   We worship Thee, our Father and our God.

2. We would, O God, present before Thy face
   The fragrant name of Thy beloved Son;
   By faith we view Him through Thy boundless grace,
   Which, by His dying, He for us has won.

3. Thy joy in Him who is with Thee we share;
   Our hearts delight in Thy delight in Him;
   Chiefest of thousands, fairer than the fair;
   His glory nought can tarnish, nought can dim.

4. We bow in worship now before Thy throne,
   By faith the Object of Thy love would see;
   Who, in the midst, His brethren's song doth lead.
   To Him, our Savior, shall the glory be!

## A-2 நம் பிதாவாகிய தேவன்

**(6)**

*1.* தேவன் நீர் அன்பாக உள்ளீர்,
   உம் அன்பை எம்மேல் பொழிந்தீர்,
   பேரன்பின் பிரவாகம் கண்டோம்;
   பிதாவே, உம்மைத் தொழுகின்றோம்.

*2.* ஆதியில் திட்டம் தீட்டினீர்,
   நித்திய நோக்கம் காட்டினீர்,
   உம் நெஞ்சின் வாஞ்சை ஆகட்டும்;
   பிதாவே, உம்மைத் தொழுகின்றோம்.

3. நீசர் எம்மேல் கொண்ட அன்பால்,
உம் நேச மகனை ஈந்தீர்,
இரத்தத்தால் மீட்பினைத் தந்தீர்;
பிதாவே, உம்மைத் தொழுகின்றோம்.

4. பாவத்தில் மரித்திருந்தோம்,
தூய ஆவியால் பிறந்தோம்,
ஆவியின் முத்திரை பெற்றோம்;
பிதாவே, உம்மைத் தொழுகின்றோம்.

5. உம் ஜீவன் எமக்களித்தீர்,
நாங்கள் உம் பிள்ளைகளானோம்,
உம்மை 'அப்பா' என்றழைப்போம்;
பிதாவே, உம்மைத் தொழுகின்றோம்

6. உம் மகன் சாயலாய் மாற,
எம்மை நீர் நடத்துகின்றீர்,
மகிமைக்குள் கொணர்கின்றீர்;
பிதாவே, உம்மைத் தொழுகின்றோம்.

7. என்னே அன்பு! எம் பிதாவே!
நன்றியால் உம்மைத் துதிப்போம்,
என்றென்றும் உம்மைப் போற்றுவோம்,
பிதாவே, உம்மைத் தொழுகின்றோம்.

**(7)**

1. படைப்பின்முன்பே பிதாவே,
அன்பில் எம்மைத் தெரிந்தீர்;
ஆழ்ந்த, கனிந்த அவ்வன்பு
இயேசுவண்டை ஈர்க்குதே.
எம்மைக் காக்கும், எம்மைக் காக்கும்,
கிறிஸ்துவில் பொருத்துமே,
கிறிஸ்துவில் பொருத்துமே.

2. உலகின் மாயை மாறினும்
தேவன் நீர் மாறாதவர்;
உம் உடன்படிக்கை, தயை

யுகங்கள்தோறும் நிற்கும்.
யாம் உம் மக்கள், யாம் உம் மக்கள்,
உந்தன் நாமம் துதிப்போம்,
உந்தன் நாமம் துதிப்போம்.

3. உம் உருக்கம் எந்தன் கதை,
நாளும் அது என் மேன்மை;
மாறா தயை அசைக்கும் என்
சித்தம், வழிநடத்தும்.
தேவன் நம்மில் அன்புகூர்ந்தார்,
தம் ஒரே மகன் ஈந்தார்,
தம் ஒரே மகன் ஈந்தார்.

4. அன்பான பிதாவே, உம்முன்
உந்தன் அன்பைத் துதிப்போம்;
உம் மகனைக் காணும்வரை,
பாடல் பாடித் துதிப்போம்.
மாட்சி தந்தோம், மாட்சி தந்தோம்,
தேவ ஆட்டுக்குட்டிக்கு,
தேவ ஆட்டுக்குட்டிக்கு.

1. Father, long before creation,
Thou hadst chosen us in love;
And that love, so deep, so moving,
Draws us close to Christ above,
And will keep us, and will keep us,
Firmly fixed in Christ alone,
Firmly fixed in Christ alone.

2. Though the world may change its fashion,
Yet our God is e'er the same;
His compassion and His cov'nant
Through all ages will remain.
God's own children, God's own children,

Must forever praise His name,
Must forever praise His name.

3. God's compassion is my story,
Is my boasting all the day;
Mercy free and never failing
Moves my will, directs my way.
God so loved us, God so loved us,
That His only Son He gave,
That His only Son He gave.

4. Loving Father, now before Thee
We will ever praise Thy love;
And our song will sound unceasing
Till we meet Thy Son above,
Giving glory, giving glory,
To our God and to the Lamb,
To our God and to the Lamb.

## A-3 நம் இரட்சகராகிய தேவன்

**(8)**

1. ஆதி தொடக்கம் ஆதி பிதாக்கள்
ஆவலாய்த் தேடிய மருந்தே;
நீதிமான்கள் எல்லோரும் வேக
நேசமுடன் உண்ணும் விருந்தே.

*தேவனே, என் இயேசுவே, எழுந்தருளினீர்,*
*ஜீவன் தர வந்தீரே, என் பாவ நோயினை ஒழித்தீரே.*

2. மோட்சம் நிகரும் ஏதேன் தோப்பில்
நாட்டிய ஜீவிய தருவே;
மீட்டவர்களுக்குயிரை ஈயும்
விண்ணவரின் இன்ப உருவே.

3. கானகத்தின் இனிய மன்னாவே,
கல்லினின்றோடிய தண்ணீரே,
ஞான உணவே! கிருபை ஊற்றே!
நான் உம்மோடொன்றாகப் பண்ணினீர்.

4. தேவ சந்நிதியின் அப்பமே நல்,
மறைவான சாட்சிப் பெட்டியே,
துளிர்த்த கோலே, கிருபாசனமே,
நித்(தி)ய ஆவியே, ஜீவ ஊற்றே.

**(9)**

1. சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர் நீரே,
சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே,
எங்கள் இதயத்தில் உம்மைப் போற்றுகின்றோம்,
என்றென்றும் பணிந்து தொழுவோம்.
ஆ ஆ ஆ அல்லேலூயா (3) ஆமென்.

2. அநாதியாய் நீர் நேசித்தீரே,
அன்பால் என்னை முன்குறித்தீரே,
உம் இரத்தம் சிந்தி என்னை மீட்டீரே,
உம்மில் என்னை ஏற்றுக்கொண்டீரே.
ஆ ஆ ஆ அல்லேலூயா (3) ஆமென்.

3. எந்தன் ஆவியில் ஜீவனும் நீரே,
என்னில் வாழும் கிறிஸ்துவும் நீரே,
என்னை என்றும் உமக்கு அர்ப்பணித்தேன்,
என் வாழ்வும், எல்லாமுமே நீரே.
ஆ ஆ ஆ அல்லேலூயா (3) ஆமென்.

**(10)**

1. தந்தையின் மடியினிலே,
யுகங்கள் தோன்றும் முன்பே,
தந்தையின் மகிமையில் நீர்
தேவனின் ஒரே மகன்,
தந்தை உம்மைத் தந்தபோது,
நபரில் நீர் அவரே.

தந்தையின் பரிபூரணம்
ஆவியில் அறிவிக்க.

2. மரணம், உயிர்ப்பால் தேவனின்
முதல் மகனானீர்,
உம் ஜீவன் எம்முள் தந்ததால்
யாம் உந்தன் நகலானோம்,
மீண்டும் பிறந்து தேவனின்
பல மகன்களானோம்;
உம் பல சகோதரராய்,
உம் போன்றோரே யாம் மெய்யாய்.

3. மரணம், உயிர்ப்பின்மூலம்
ஜீவனில் நீர் பெருக,
நீர் மண்ணில் வீழ்ந்து மடிந்த
ஒரே கோதுமை மணி,
உம் சுபாவத்தில் பிறந்த யாம்
பல மணிகள் ஆனோம்;
உம் நிறைவை அறிவிக்க,
ஓர் அப்பமாய் இழைந்தோம்.

4. யாம் உந்தன் மறுஉற்பத்தி
உம் சரீரம், மணாளி,
என்றும் நீர் வசிக்க உந்தன்
பூரணம், வெளியாக்கம்,
உம் தொடர்ச்சி, உம் படர்ச்சி,
உம் ஜீவ விருத்தியாம்,
உம் வளர்ச்சி, மா திரட்சி,
எம் தலையோடொன்று யாம்.

1. In the bosom of the Father,
Ere the ages had begun,
Thou wast in the Father's glory,
God's unique begotten Son.
When to us the Father gave Thee,
Thou in person wast the same,

All the fullness of the Father
In the Spirit to proclaim.

2. By Thy death and resurrection,
Thou wast made God’s firstborn-Son;
By Thy life to us imparting,
Was Thy duplication done.
We, in Thee regenerated,
Many sons to God became;
Truly as Thy many brethren,
We are as Thyself the same.

3. Once Thou wast the only grain, Lord,
Falling to the earth to die,
That thru death and resurrection
Thou in life may multiply.
We were brought forth in Thy nature
And the many grains became;
As one loaf we all are blended,
All Thy fulness to proclaim

4. We’re Thy total reproduction,
Thy dear Body and Thy Bride,
Thine expression and Thy fulness,
For Thee ever to abide.
We are Thy continuation,
Thy life-increase and Thy spread,
Thy full growth and Thy rich surplus,
One with Thee, our glorious Head.

**(11)**

1. தேவன் உலகோரை நேசித்த அன்பால்
   தம் சுதனைத் தந்தே மகிமைப்பட்டார்;
   பாவ நிவிர்த்திக்காய்த் தம்முயிர் தந்து
   யாவர்க்கும் ஜீவ பாதையைத் திறந்தார்.

   *போற்றுவோம் கர்த்தரை!*
   *பூலோகம் முழங்க!*
   *போற்றுவோம் கர்த்தரை!*
   *மாந்தர் மகிழவே!*
   *வாரும் பிதாவிடம் இயேசுவழியாய்*
   *மகிமை தருவீர் வல்லவருக்கே.*

2. தேவன் தமின் மீட்பும் இரட்சிப்பும் எல்லா
   விசுவாசிகட்கும் நல்குவேன் என்றார்;
   இயேசுவை உண்மையாய் நம்பும் பாவிக்கும்
   மன்னிப்பு அக்கணமே கிட்டுது பார்.

3. தேவன் பெரும் போதனை சாதனையும்
   செய்ததினால் மகிழ்வோம் இயேசுவில் நாம்
   ஆனந்தம், ஆச்சரியம் சுத்தம் உயர்வும்
   அடைவோம் இயேசுவை நாம் காணும்போது.

1. To God be the glory, great things He hath done,
   So loved He the world that He gave us His Son,
   Who yielded His life our redemption to win,
   And opened the life-gate that all may go in.

   *Praise the Lord, praise the Lord,*
   *Let the earth hear His voice;*
   *Praise the Lord, praise the Lord,*
   *Let the people rejoice;*
   *Oh, come to the Father, through Jesus the Son,*
   *And give Him the glory; great things He hath done.*

2. Oh, perfect redemption, the purchase of blood,
To every believer the promise of God;
The vilest offender who truly believes,
That moment from Jesus a pardon receives.

3. Great things He hath taught us, great things He hath done,
And great our rejoicing through Jesus the Son;
But purer, and higher, and greater will be
Our wonder, our transport when Jesus we see.

**(12)**

1. யெஹோவா யீரே, உம்மையே தந்தீர்,
நீர் மாத்திரம் போதும் எனக்கு.
யெஹோவா ஷாலோம், என் உள்ளம் வந்தீர்,
நீரே திவ்ய சமாதானம்.
யெஹோவா ஷம்மா, கூடவே இருப்பீர்,
உம் சமுகம் போதும் எனக்கு.

*நீர் மாத்திரம் போதும், நீர் மாத்திரம் போதும்,*
*நீர் மாத்திரம் போதும் எனக்கு.*
*நீர் மாத்திரம் போதும், நீர் மாத்திரம் போதும்,*
*நீர் மாத்திரம் போதும் எனக்கு.*

2. இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்,
உம் அன்பிற்கு அளவேயில்லை!
உம்மையே ஈந்து என்னை இரட்சித்தீர்;
உம்மோடென்னை இணைத்துக்கொண்டீர்;
எந்நிலையிலும் நான் உம்மையே வாழ
உம் கிருபை போதும் எனக்கு.

3. எல் ஷடாய் நீரே, போதுமானவரே,
என்னை முற்றும் நிறைவாக்கினீர்;
ஆதியும் நீரே, அந்தமும் நீரே,
உம்மையல்லால் ஒன்றும் வேண்டேன்;
என் வாஞ்சையும் என் பரிசும் நீரே,
நீரே என்றென்றும் போதும்.

## A-4 கிறிஸ்துவுக்கு நன்றி சொல்லுதல்

**(13)**

நன்றியால் பாடிடுவோம்,
நல்லவர் இயேசு நல்கிய எல்லா
நன்மைகளை நினைத்தே.

1. செங்கடல்தனை நடுவாய்ப் பிரித்த
எங்கள் தேவனின் கரமே,
தாங்கியதே இந்நாள்வரைக்கும்
தயவாய் மா தயவாய்-ஆ
தயவாய் மா தயவாய்.

2. மரணத்தை நீக்கியே ஜீவனை அருளிய
மாபெரும் கிருபை,
மாநிலத்தோர்க்கு ஈந்தார் இயேசு
சுவிசேஷ ஒளியால்-ஆ
சுவிசேஷ ஒளியால்.

3. உயிர்ப்பித்தே உயர்த்தினார் உன்னதம்வரை
உடன்சுதந்தரராய் இருக்க,
கிருபையின் மகா தானம் அது வரும்
காலங்களில் விளங்க-ஆ
காலங்களில் விளங்க.

4. அழைக்கப்பட்டோரே நீர் உன்னத அழைப்பினை
அறிந்தே வந்திடுவீர்;
அளவில்லாத் திரு ஆக்கம் இதனை
அவனியோர்க்களிப்பீர்-ஆ
அவனியோர்க்களிப்பீர்.

5. சீயோனைப் பணிந்துமே கிறிஸ்தேசு இராஜனாய்
சீக்கிரம் வருவார்;
சிந்தை வைப்போம் சந்திக்கவே
சுந்தரன் முகமே-ஆ
சுந்தரன் முகமே

**(14)**

நானும், என் வீட்டாருமோவென்றால்
கர்த்தரையே சேவிப்போம்;
நீயும் சேவிப்பாயா? நீயும் சேவிப்பாயா?

1. கர்த்தரையே சேவிப்பது
ஆகாததென்று கண்டால்,
யாரை நீ சேவிப்பாய் என்பதை
இன்றே தீர்மானம் செய்வாய்.

2. அடிமையான நம்மையுமே
தேவாதி தேவன் மீட்டார்;
மாபெரும் அடையாளங்கள் செய்திட்ட
கர்த்தரைச் சேவிப்பாயா?

3. நம் பாதையில் காப்பாற்றியே
கர்த்தர் நடத்தினாரே;
கர்த்தர் தந்த ஆசீர் யாவும் கண்டு
நன்றியால் சேவிப்பாயா?

4. நன்மையான ஈவுகளை
தேவாதி தேவன் தந்தார்;
கீழ்ப்படிந்தே அவர் சத்தம் கேட்டு
சாட்சியாய் ஜீவிப்பாயா?

## A-5 கிறிஸ்துவைத் துதித்தல்

**(15)**

1. ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்
ஆசையவர் என் ஆத்துமாவிற்கே;
ஆசீகள் அருளும் அனந்தனந்தமாய்
ஆண்டவர் இயேசுபோல் யாரும் இல்லையே!

*இயேசுவல்லால், இயேசுவல்லால்*
*இன்பம் இகத்தில் வேறு எங்கும் இல்லையே!*
*இயேசுவல்லால், இயேசுவல்லால்*
*இன்பம் வேறெங்கும் இல்லையே!*

2. தந்தை தாயும் உன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுவேனோ!
தாங்கிடுவேன் என் நீதியின் கரத்தால்
தாபரமும் நல்ல நாதனும் என்றார்.

3. கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே
கிருபையும் வெளியாகினதே;
நீக்கியே சாவினை நற்சுவிசேஷத்தால்
ஜீவன் அழியாமை வெளியாக்கினார்.

4. அழுகையின் தாழ்வில் நடப்பவரே
ஆழிபோல் வான்மழை நிறைக்குமே;
சேர்ந்திட சீயோனில் தேவனின் சந்நிதி
ஜெயத்தின்மேல் ஜெயம் அடைந்திடுவோம்.

**(16)**

இயேசுவின் நாமமே திருநாமம்-முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்.

1. காசினியில் அதனுக் கிணையில்லையே--விசு
வாசித்தவர்களுக்குக் குறையில்லையே.

2. இத்தரையில் மெத்த அதிசய நாமம்--அதை
நித்தமும் தொழுபவர்க்கு ஜெயநாமம்.

3. உத்தம மகிமைப் பிரசித்த நாமம்--இது
சத்திய விதேய மனமொத்த நாமம்.

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம்--நமை
அண்டிடும் பேய் பயந்தோடும் தேவநாமம்.

5. பட்சமுள்ள இரட்சை செய்யும் உபகாரி--பெரும்
பாவப் பிணிகள் நீக்கும் பரிகாரி.

**(17)**

1. துதித்துப் பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே

துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்திரிப்போமே.

*ஆ! அற்புதமே அவர் நடத்துதலே*
*ஆனந்தமே, பரமானந்தமே,*
*நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே*
*நாம் அல்லேலுயா துதி சாற்றிடுவோம்.*

2. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்திரிப்போமே.

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியின் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிகப் பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்திரிப்போமே.

4. இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்,
போகையிலும், நம் வருகையிலும்
புகலிடமானதால் ஸ்தோத்திரிப்போமே.

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்,
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்திரிப்போமே.

**(18)**

1. போற்றிடு! ஆன்மமே, சர்வ வல்ல சிருஷ்டிகரை!
ஏற்றிடு! எந்தன் இரட்சிப்பும், சுகமும் ஆனோரை!
கூடிடுவோம், பாடித் துதித்திடுவோம்,
ஆவியில் ஓர் உள்ளத்தோடு.

2. போற்றிடு! யாவையும் அற்புதமாய் ஆள்பவரை!
காப்பாரே, கழுகின் செட்டையில் நம்மை உயர்த்தி
வாழ்வின் வழி யாவிலும் ஆண்டவராய்
வாஞ்சைகள் யாவும் ஈந்தாரே.

3. போற்றிடு! காத்துன் கைகளை ஆசீர்வதிப்போரை!
ஊற்றுவார் உன்னத ஈவுகளை உந்தன்மேலே!
போதுமான கர்த்தர் நட்பில் நடந்தால்
போதுமே அவர் தயவு.

4. போற்றிடு! ஆன்மமே, உந்தன் முழு பலத்தோடு!
போற்றட்டும் கர்த்தரை சுவாசமுள்ள எல்லாமும்!
தேவ மக்கள் கெம்பீரித்(து) ஆமென் என்று
கொண்டாடி ஆராதிப்போமே.

1. Praise to the Lord, the Almighty, the King of creation!
O my soul, praise Him, for He is thy health and salvation!
All ye who hear,
Now to His temple draw near;
Sing now in glad adoration!

2. Praise to the Lord, who o'er all things so wondrously reigneth,
Who, as on wings of an eagle, uplifteth, sustaineth.
Hast thou not seen
How thy desires all have been
Granted in what He ordaineth?

3. Praise to the Lord, who doth prosper thy work and defend thee,
Who from the heavens the streams of His mercy doth send thee.
Ponder anew
What the Almighty can do,
Who with His love doth befriend thee.

4. Praise to the Lord! Oh, let all that is in me adore Him!
All that hath life and breath, come now with praises before Him!
Let the Amen
Sound from His people again;
Gladly for aye we adore Him.

**(19)**

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை
புதிய இதயமுடனே
நேற்றும் இன்றும் என்றும் மாறா இயேசுவை நாம்
என்றும் பாடித் துதிப்போம்

*இயேசு என்னும் நாமமே-என்*
*ஆத்துமாவின் கீதமே,*
*என் நேசர் இயேசுவை நான் என்றும்*
*ஏற்றி மகிழ்ந்திடுவேன்.*

2. கோரப் பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில்
காக்கும் கரம் கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன்.

2. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந்தமிழ்ந்து மாளாதே
ஆர்ப்பின் ஜெயத்தொனியோடே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவேன்.

3. தாய் தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னை அவர் கையில் தந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவேன்.

4. பூமியகிலமும் சாட்சியாகவே
போங்கள் என்ற கட்டளையதால்
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவும் இன்று
தந்து தொண்டு செய்குவேன்.

**(20)**

1. ஸ்தோத்திரம் இயேசுநாதா, உமக்கென்றும்
ஸ்தோத்திரம் இயேசுநாதா,
ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திரு நாமத்தின் ஆதரவில்.

2. வானதூதர் சேனைகள் மனோகர
கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடித் துதிக்கப் பெறும்
மன்னவனே உமக்கு.

3. இத்தனை மகத்(து)வமுள்ள பதவி
இவ்வேழைகள் எங்களுக்கு
எத்தனை மா தயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்.

4. நின் உதிரமதினால் திறந்த
நின் ஜீவப் புது வழியாம்;
நின் அடியார்க்குப் பிதாவின் சந்நிதி
சேரவுமே சந்ததம்.

5. இன்றைத் தினமதிலும்
ஒருமித்துக் கூட உம் நாமத்தினால்,
தந்த நின் கிருபைக்காக உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே.

6. நீரல்லால் எங்களுக்குப்
பரலோகில் யாருண்டு ஜீவநாதா?
நீரேயன்றி இகத்தில் வேறொரு
தேட்டமில்லை பரனே.

## A-6 கிறிஸ்துவை நினைவுகூர்தல்

**(21)**

1. கர்த்தர் உம்மைத் தியானிக்கிறோம்,
உம்மை மெய்யாய்த் தொழுகிறோம்!
எம் செல்வம் நீர்! அற்புதம் நீர்!
எம் அன்பு நீர்! அனைத்தும் நீர்!

*நீரே எம் தேவை நிரப்பீடு!*
*நெஞ்சம் துதியால் பொங்குதே!*
*எம் வாஞ்சைக்கும் அதிகமாய்*
*என்றும் நிறைவாக்குகிறீர்!*

2. நீர் மெய்யாகவே தேவனே!
எம்மில் பேரன்பான தேவன்,
எம் ஜீவனாய் வந்த தேவன்,
எம்மைத் தேடும் தந்தை தேவன்!

3. நீர் மெய்யாக மனிதனே!
பூரண, தூய மனிதன்,
தேவன் பூரிக்கும் மனிதன்,
எம் உள்ளம் ஈர்க்கும் மனிதன்.

4. நீர் கீழ்ப்படிந்த அடிமை!
வெறுமையாக்கும் அடிமை!
எம்மை மீட்கச் சிலுவைக்கும்
உம்மைத் தாழ்த்திய அடிமை.

5. நீர் வென்றுயர்ந்த வேந்தரே!
உன்னதம் வீற்றுள்ள வேந்தர்,
அன்பில் ஆளும் ஜீவவேந்தர்,
விண் அரசில் உம்மோடாள்வோம்.

6. உம்மை உற்று நோக்குகிறோம்,
உம்மில் யாம் பங்குறுகின்றோம்,
உம்மில் அன்பில் இன்புறுகின்றோம்,
உந்தன் நேர்பாதியாய் ஆகின்றோம்.

1. O Lord, as we consider Thee,
We worship Thee for all Thou art;
Thou art so rich, so wonderful,
So dear and precious to our heart.

*What Thou art meets our every need!*
*Our hearts o'erflow with praise to Thee!*
*All our desires Thou dost exceed*
*And satisfy continually.*

2. Thou art the very God in truth,
The God who is both love and light;

The God who is to us our life,
The God in whom we all delight.

3. Thou art also a man indeed,
A man so fine, so good, so pure;
A man in whom our God delights,
A man who can our love secure.

4. Thou even art a lowly slave,
A slave of God to serve for us;
Obedient to the cross's death
That we might be delivered thus.

5. Thou art, beside all these, a King,
A King in life and love to reign,
By God anointed with His pow'r
To rule with us in His domain.

6. Dear Lord, as we remember Thee,
We thus partake of all Thou art;
As we enjoy Thyself in love,
We share Thee as Thy counterpart.

## II. கிறிஸ்து நமக்காக

### B-1 கிறிஸ்து மனுவுருவாதல்

**(22)**

உலகம் தராத அன்பை
தருவாய் இயேசு பாலா,
பலம் இல்லை எந்தன் நெஞ்சில்
அருள் கூரும் தேவ பாலா.

1. வானோர்கள் சேனை பாட
மேய்ப்பர்கள் தேடிச் சென்றார்;
மாமன்னர் பொன்னும் தந்தார்,

நான் என் செய்வேன் தேவ பாலா,
என் உள்ளம் உம் சொந்தம் பாலா.

2. கரை காணாத் துன்ப வெள்ளம்
புரண்டோடும் வேளை வந்தீர்,
திருக் கைகள் நீட்டி என்னை
உம் அருகில் அணைத்துக்கொண்டீர்
உம் அருகில் அணைத்துக்கொண்டீர்.

**(23)**

காரிருள் வேளையில் கடுங்குளிர் நேரத்தில்
ஏழைக் கோலமதாய்
பாரினில் வந்தது மன்னவனே உம்
மாதயவே தயவு.

1. விண்ணுலகில் சிம்மாசனத்தில்
தூதர்கள் பாடிடவே
வீற்றிருக்காமல் மானிடனானது
மாதயவே தயவு.

2. விண்ணில் தேவனுக்கே மகிமை
மண்ணில் சமாதானம்
மானுடரில் பிரியம் மலர்ந்தது உந்தன்
மாதயவே தயவு.

3. விந்தை விதந்தனில் வந்தவரே,
வானவரே, நாங்கள்
தந்தையின் அன்பைக் கண்டதும் உந்தன்
மாதயவே தயவு.

**(24)**

1. கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே!
அவர் பாவ நாசகர்,
சமாதான காரணர்;
மண்ணோர் யாரும் எழுந்து
விண்ணோர்போல் கெம்பீரித்து

பெத்லகேமில் கூடுங்கள்
ஜென்ம செய்தி கூறுங்கள்.

2. வானோர் போற்றும் கிறிஸ்துவே
லோகம் ஆளும் நாதரே
ஏற்ற காலம் தோன்றினீர்
கன்னியிடம் பிறந்தீர்,
வாழ்க நல் தேவனே!
அருள் அவதாரமே!
நீர் இம்மானுவேல், அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தனாய்.

3. வாழ்க, சாந்த பிரபுவே
வாழ்க, நீதி சூரியனே!
மீட்பராக வந்தவர்,
ஒளி, ஜீவன் தந்தவர்,
மகிமையை வெறுத்து
ஏழைக்கோலம் எடுத்து
சாவை வெல்லப் பிறந்தீர்
மறுஜென்மம் அளித்தீர்.

4. வாரும், எங்கள் வாஞ்சையே,
எம்மில் இல்லம் கொள்ளுமே!
பெண்ணின் வித்தே, காலின்கீழ்,
பாம்பின் தலை நசுக்குமே!
மண்ணோர் சாயல் நீக்கினீர்,
ஆதாம் இனம் முடித்தீர்,
உந்தன் சாயல் பதியும்,
உந்தன் அன்பில் நிறுத்தும்.

1. Hark! the herald angels sing,
"Glory to the new-born King;
Peace on earth, and mercy mild;
God and sinners reconciled."
Joyful, all ye nations, rise,

Join the triumph of the skies;
With angelic hosts proclaim,
"Christ is born in Bethlehem."

2. Christ, by highest heav'n adored,
Christ, the everlasting Lord:
Late in time behold Him come,
Offspring of a virgin's womb.
Veiled in flesh the Godhead see,
Hail th' incarnate Deity!
Pleased as man with man to dwell,
Jesus our Immanuel.

3. Hail the heav'n-born Prince of Peace!
Hail the Sun of righteousness!
Light and life to all He brings,
Ris'n with healing in His wings:
Mild He lays His glory by,
Born that man no more may die;
Born to raise the sons of earth;
Born to give them second birth.

4. Come, Desire of nations, come!
Fix in us Thy humble home:
Rise, the woman's conqu'ring seed,
Bruise in us the serpent's head;
Adam's likeness now efface,
Stamp Thine image in its place:
Final Adam from above,
Reinstate us in Thy love.

**(25)**

1. மாட்சி துறந்தார்,
பாரில் பிறந்தார்,
என் தேவன் இரட்சகர்
இயேசு அவர் பெயர்;
முன்னணை மீதினில்
அந்நியனாய் வந்தார்;
கண்ணீர், துக்கங்கள், பாடோடு வாழ்ந்தார்.

*என் நேச நாதா! நான் தொழும் தேவா!*
*என் மூச்சு, பேச்சு, எல்லாம் நீரே!*
*என் மீட்பரானார் சர்வ சிருஷ்டிகர்!*
*தேவ பூரணம் வாழ் வாசன் அவர்!*

2. என்னே மா தாழ்மை!
என்னை மீட்க அவர்
நம்பிக்கையேயில்லா
நடு ராவில் நுழைந்தார்;
மா கிருபையின் தேவன்
மா மேன்மை களைந்தார்
என்னை ஈர்த்து இரட்சிக்கத் தாழ்வுற்றார்.

3. தங்கு தடையின்றி
மாம்சம் இரத்தத்தோடு,
மனுரூபமாயினார்,
மறை திட்டம் காட்டினார்;
மகிமை இரகசியம்
மா பலி கல்வாரி
நீரே இருப்போராய் இருப்பவர்.

1. Down from His glory,
Ever living story,
My God and Savior came,
And Jesus was His name.
Born in a manger,

To His own a stranger,
A Man of sorrows, tears and agony.

*O how I love Him! How I adore Him!*
*My breath, my sunshine, my all in all!*
*The great Creator became my Savior,*
*And all God's fulness dwelleth in Him.*

2. What condescension,
Bringing us redemption;
That in the dead of night,
Not one faint hope in sight,
God, gracious, tender,

Laid aside His splendor,
Stooping to woo, to win, to save my soul.

3. Without reluctance,
Flesh and blood His substance
He took the form of man,
Revealed the hidden plan.
O glorious myst'ry,
Sacrifice of Calv'ry,
And now I know Thou art the great "I AM."

**B-2 கிறிஸ்துவின் மாதிரி வாழ்க்கை**

**(26)**

1. கம்பீரம்...சாந்தம்,
தெய்வீகம்...மானிடம்,
சேர்ந்திழைந்த ஓர்
மனிதன் தேவன்;
அநாதி ஆண்டவர்
மானிடம் தங்கினார்,

நம் தாள் கழுவிடத்
தாழ்ந்து குனிந்தார்.

*சாந்தம், கம்பீரம்!*
*சேர்ந்த பரம் புதிர்!*
*வீழ்ந்து தொழுவோம்*
*நம் தேவன் இதோ!*

2. தந்தையின் ஒளிர்வு,
தூய்மையின் பூரணர்,
கீழ்ப்படிந்து கற்றார்
சிலுவைச் சாவும்,
துன்புற்றார் பலியாய்,
ஈந்தார் நமக்குயிர்,
அறைந்தோர் மன்னிப்புப்
பெற வேண்டினார்.

3. காணரிய தேவன்,
வானுயர் அறிவு,
ஆழிபோல் பரிவு,
மனுவாய் வந்தார்;
நித்திய ஆண்டவர்,
தாழ்ந்தார் கனிவுடன்,
விண்ணுக்குயர்த்தினார்
நம் மானிடத்தை.

1. Meekness and majesty,
Manhood and Deity,
In perfect harmony
The Man who is God;
Lord of eternity
Dwells in humanity,
Kneels in humility,
And washes our feet.

*O what a mystery!*
*Meekness and majesty!*
*Bow down and worship;*
*For this is your God,*
*This is your God.*

2. Father's pure radiance,
   Perfect in innocence,
   Yet learns obedience
   To death on a cross.
   Suffering to give us life,
   Conquering through sacrifice,
   And as they crucify
   Prays: 'Father forgive.'

3. Wisdom unsearchable,
   God the invisible,
   Love indestructible
   In frailty appears.
   Lord of infinity
   Stooping so tenderly,
   Lifts our humanity
   To the heights of His throne.

**(27)**

பொங்கி வழியும் தேவ கிருபை
மண்ணில் வந்ததே;
இந்த மண்ணில் தேவ மறையைக் காக்க
தன்னை ஈந்ததே.

1. கருவில் உதித்த தூய கனியே,
   கவலை தீர்த்த கண்ணின் மணியே,

பெருகிடும் வெள்ளமே,
தேவனின் அன்பின் ஊற்றே.

2. உலகை மீட்க பழிகள், நிந்தை,
சிலுவை சுமந்த தெய்வ சிந்தை
உலகெல்லாம் தொழுதிடும்
உன்னதம் உந்தன் நாமம்.

3. தேவ நிறைவின் உண்மை உறைவு,
பரம வளங்கள் யாவின் மறைவு,
ஊனுருவாய் வந்தீர்,
கிருபைமேல் கிருபை தந்தீர்

4. சோதனை, துயர், பாடு, கண்ணீர்
கீழ்ப்படிந்தீர் மரணம்வரை நீர்;
சோர்ந்து நான் சாய்கையில்
சார்ந்திட கிருபை தந்தீர்.

5. உன்னத அரியணை என் ஊற்று,
உள்ளில் சுரக்கும், உயிரும் தழைக்கும்;
வறட்சியோ, வேனிலோ,
மறைப்பில் நீர் பாய்ச்சும் கிருபை.

6. என்னில் இல்லை வெல்லும் வலிமை,
என்மேல் தங்கும் பரம வலிமை;
ஏந்துமே ஆவியில்,
போதுமே பெருகும் கிருபை.

## B-3 கிறிஸ்துவின் பாடுகளும், மரணமும்

**(28)**

1. கல்வாரி மலையில் கோர, மா சிலுவை,
பாடுகள், நிந்தைகளின் சின்னம்!
பாவிகளை மீட்க பரன் மாண்டதினால்
மேவி சிலுவை நேசிப்பேன்.

*முற்றிலும் ஏற்றேன் சிலுவையை*
*வெற்றிகள் பலியாய்ப் படைப்பேன்!*

*பற்றுவேன் சிலுவையின் வழி,*
*பதிலாய் விண்முடி சூட்டுவீர்!*

2. நிந்தையாய் உலகம் கருதும் சிலுவை
   விந்தையாய்க் கவர்ந்தது என்னை!
   வந்தார் செம்மறியாய் மாட்சிமை துறந்து
   சுமந்தார் பாவச் சிலுவை!

3. இரத்தம் சிந்தும் தேவன் தொங்கும் வன் சிலுவை
   எத்தனை அற்புதம் இக்காட்சி!
   எத்தனை மன்னித்து, சுத்தமாக்கிடவே
   சித்தமாய் இயேசு மரித்தார்.

4. உண்மையாயிருப்பேன் சிலுவைச் செய்திக்கு
   இன்பமாய் நிந்தையைச் சகிப்பேன்;
   அழைப்பார் ஒருநாள், செல்லுவேன் என் இல்லம்
   அங்கு மகிமை என் பங்கு.

1. On a hill far away stood an old rugged cross,
   The emblem of suffering and shame;
   And I love that old cross where the dearest and best
   For a world of lost sinners was slain.

*So I'll cherish the old rugged cross,*
*Till my trophies at last I lay down;*
*I will cling to the old rugged cross,*
*And exchange it some day for a crown.*

2. O that old rugged cross, so despised by the world,
   Has a wondrous attraction for me;
   For the dear Lamb of God left his glory above
   To bear it to dark Calvary.

3. In that old rugged cross, stained with blood so divine,
   A wondrous beauty I see,

For 'twas on that old cross Jesus suffered and died,
To pardon and sanctify me.

4. To the old rugged cross I will ever be true;
Its shame and reproach gladly bear;
Then he'll call me some day to my home far away,
Where his glory forever I'll share.

**(29)**

தேவன்பே! திருவன்பே! தேடக்கிடையா திருவருளே!
தெவிட்டாத தேவமுதே!
தேவுலகோர் சுவைத்திடும் விருந்தே!

1. வெண்பனியைப் பழிக்கும் வெண்மன்னா
வந்து சிலுவையில் கறை பட்டதேன்?
எங்கள் பாவக் கறை போக்கிடவோ?

2. சிங்கார வனமதின் செங்கனியே
சிதைந்து சிலுவையில் மடிந்தது ஏன்?
சீரழிந்த எமை மீட்டிடவோ?

3. வானத்திலிருந்து வந்த மன்னா,
வந்து சிலுவையில் நொறுங்கியதேன்?
செத்த எமக்குயிர் தந்திடவோ?

**(30)**

தேவ திருவமுதே ஜீவ தரு கனியே
பாவ வினையகற்றும் பரம போஜனமே

1. விண்ணோர் வீடும் போதாதே
என்னே உமது தயை
மண்ணோர் உய்ந்திடவே
மாண்டீர் சிலுவைதனில்.

2. அன்னை தந்தை எவர்தானும்
உம்மைப்போல் உண்டோ

தன்னைப் பலியாக்கும்
பெலிக்கான் ஆனீரே.

3. என்பால் கொண்ட அன்பதுவே
அரசே நீருமது
என்பும் தசை யாவும்
ஈயச் செய்ததுமே.

4. நீவிர் என்னுள் எழுந்தருள
ஏழை தகுதியல்லேன்
பாவிக்கொரு மொழி நீர்
பகர சுகம் பெறுவேன்.

**(31)**

1. நான் உம்மைப்பற்றி இரட்சகா
வீண் வெட்கம் அடையேன்;
பேரன்பைப்பற்றி ஆண்டவா
நான் சாட்சி கூறுவேன்.

*சிலுவையண்டையில் நம்பி வந்து நிற்கையில்*
*பாவ பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்;*
*எந்த நேரமும் எனதுள்ளத்திலும்*
*பேரானந்தம் பொங்கிப்பாடுவேன்.*

2. ஆ! உந்தன் நல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்
நீர் கைவிடீர்! இவ்வேழையைக்
காப்பீர் தேவாவியால்.

3. மா வல்ல வாக்கின் உண்மையைக்
கண்டுணரச் செய்தீர்;
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்.

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்;
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய் பாக்யம் அடைவேன்.

1. I’m not ashamed to own my Lord,
Or to defend His cause;
Maintain the honor of His Word,
The glory of His cross.

*At the Cross, at the Cross where I first saw the light,*
*And the burden of my heart rolled away,*
*It was there by faith, I received my sight*
*And now I am happy all the way.*

2. Jesus, my God! I know His name,
His name is all my trust;
Nor will He put my soul to shame,
Nor let my hope be lost.

3. Firm as His throne His promise stands,
And He can well secure
What I’ve committed to His hands
Till the decisive hour.

4. Then will He own my worthless name
Before His Father’s face,
And in the new Jerusalem
Appoint my soul a place.

**(32)**

1. மாட்சியின் கர்த்தர் தொங்கி மாண்ட
அற்புத சிலுவை காண்கையில்
மண்ணுலக மேன்மை மண்ணே
ஆணவம், ஆங்காரம் வீணே.

2. என் மீட்பர் சிலுவையல்லால்
வேறொன்றில் மேன்மை பாராட்டேன்;

மாயையான சிற்றின்பம்
இயேசுவின் இரத்தத்தில் சங்கரிப்பேன்.

3. கை, தலை, காலிலும் இதோ,
பேரன்பும், துன்பும் கலந்தே,
பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ?
முட்கள் மகுடம் ஆனதோ?

4. சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்?
என் ஜீவன், சுகம், செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்.

1. When I survey the wondrous cross
On which the Prince of Glory died;
My richest gain I count but loss,
And pour contempt on all my pride.

2. Forbid it, Lord, that I should boast,
Save in the death of Christ, my God;
All the vain things that charm me most,
I sacrifice them to his blood.

3. See, from his head, his hands, his feet,
Sorrow and love flow mingled down.
Did e'er such love and sorrow meet,
Or thorns compose so rich a crown.

4. Were the whole realm of nature mine,
That were an offering far too small;
Love so amazing, so divine,
Demands my soul, my life, my all.

**(33)**

1. மாறிடா எம் மா நேசரே, ஆ!
மாறாதவர் அன்பெந்நாளுமே,
கல்வாரிச் சிலுவைமீதிலே,
காணுதே இம் மா அன்பிதே!

*ஆ! இயேசுவின் மகா அன்பிதே!*
*அதின் ஆழம் அறியலாகுமோ!*
*இதற்கிணையேதும் வேறில்லையே!*
*இணையேதும் வேறில்லையே!*

2. பாவியாக இருக்கையிலே-அன்பால்
பாரில் என்னைத் தேடி வந்தாரே,
நீசன் என்றெனைத் தள்ளாமலே
நேசனாக மாற்றிடவே.

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும்-தம்
உள்ளம்போல நேசித்ததினால்,
அல்லல் யாவும் அகற்றிடவே
ஆதி தேவன் பலியானாரே.

4. ஆவியால் அன்பைப் பகர்ந்திட-தூய
தேவனின் விண் சாயல் அணிய,
ஆவியாலே அன்பைச் சொரிந்தார்,
ஆவலாய் அவரைச் சந்திக்க.

**(34)**

விந்தைக் கிறிஸ்தேசு இராஜா
உந்தன் சிலுவை என் மேன்மை

*சுந்தரம் மிகும் இந்தப் பூவில்*
*எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்.*

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி,
செல்வாக்குகள் மிக இருப்பினும்,
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமை யாவும் அற்பமே.

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்,
ஊற்றாம், வற்றா ஜீவ நதியாம்;
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்து மேன்மையாகினேன்.

3. சென்னி, விலா, கைகானின்று
சிந்துதே! துயரோடன்பு;
மன்னா! இதைப்போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன்.

4. இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்?
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கின்றேன்.

## B-4 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

**(35)**

உயிர்த்தெழுந்தாரே அல்லேலுயா!
ஜெயித்தெழுந்தாரே!
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமானாரே.

1. கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே!
வல்ல பிதாவின் செயலிதுவே.

2. மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ?
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே!
நித்திய நம்பிக்கை பெருகிடுதே.

3. எம்மா ஊர் சீஷர்களின்
எல்லா மனஇருள் நீக்கினாரே
எம்மனக் கலக்கங்கள் நீக்கினதாலே
எல்லையில்லாப் பரமானந்தமே.

4. மரணமுன் கூர் எங்கே?
பாதாளமுன் ஜெயமெங்கே?
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்!
சபையோரே துதி சாற்றிடுவோம்.

5. ஆவியால் இன்றும் என்றும்
ஆ! எம்மையும் உயிர்ப்பிக்கவே
ஆவியின் அச்சாரம் எமக்களித்தாரே
அல்லேலுயா துதி சாற்றிடுவோம்.

6. பரிசுத்தமாகுதலை
பயத்தோடென்றும் காத்துக் கொள்வோம்
எக்காளம் தொனிக்கையில் மறுரூபமாக
எழும்புவோமே மகிமையிலே.

## B-5 கிறிஸ்துவின் பரமேறுதல்

**(36)**

1. கிருபை இரக்கம் நிறைந்த ஓர்
கிருபாசனம் ஆ தோன்றிடுதே!
தருணமேதும் எங்கிலும் நல்ல
சகாயம் பெற்றிட ஏற்றதுவே.

*கிருபையே பெருகுதே!*
*கல்வாரியினின்று பாய்ந்திடுதே;*
*என்னுள்ளம் நன்றியால் பொங்கி வழியுதே!*
*என்னயென் பாக்கியமிதே!*

2. நம்மைப்போலவே சோதிக்கப்பட்டும்
நாதன் ஓர் பாவமுமற்றவராய்
நாளும் நம் குறைகள் கண்டுருகும்
நல்ல ஆசாரியர் நமக்குண்டே.

3. நம் பெலவீனத்தில் அவர் பெலன்
நல்கிடுவார் பரிபூரணமாய்;
நாடுவோமே மாறா கிருபையை,
நமக்காயே அவர் ஜீவிப்பதால்.

4. வானங்களின் வழியாய்ப் பரத்தில்
தானே சென்ற இயேசுவாம் எமது
மா பிரதான ஆசாரியரைப்
பற்றிடுவோம் நோக்கி நம்பிக்கையாய்.

5. பிதாவண்டை சேரும் சுத்தர்கட்காய்
சதா பரிந்துபேசியே நிற்பார்;
இதோ நம்மையே முற்றுமுடிய
இரட்சிக்க வல்லமையுள்ளவரே.

## B-6 கிறிஸ்து மகிமையில்

**(37)**

1. எத்தனை இன்பமாய் இயேசுவே உம்மை
ஸ்தோத்திரம் பாடி பணிகிறோம்.
ஆசீர்வாதம் பெற்றானந்திக்கும் நாங்கள்
பாத்திரர் நீரென்று போற்றுகிறோம்.

*பாத்திரர் நீரே! பாத்திரர் நீரே!*
*இயேசுவே நீரேதான் பாத்திரர்!*
*ஆசீர்வாதம் பெற்றானந்திக்கும் நாங்கள்*
*பாத்திரர் நீரென்று போற்றுகிறோம்.*

2. தேவனேயாகிலும் மானிடனாகி
தூதர்க்கும் தாழ்ந்தோராய் மரித்தீரே!
வாக்குத்தத்தப்படி பெண்ணின் வித்தாகி
சர்ப்பத்தின் தலையை நசுக்கினீரே!

3. உம் படைப்பே உம்மை ஆணியறைய
எவ்வளவாய் உம்மைத் தாழ்த்தினீர்!
மாந்தர் பகைத்திட, தேவன் கைவிட
இருள், சாபம், பாவம் சகித்தீரே!

4. மரணத்தை வென்று, அலைகளைத் தள்ளி,
மகிமையாக வெற்றிச்சிறந்தீர்;
கர்த்தாவே, உம் புகழைப் பாடுவோமே,
மரணம், பாதாளம் ஜெயித்துவிட்டீர்.

1. Jesus, our Lord, with what joy we adore Thee;
Chanting our praise to Thyself on the throne,
Blest in Thy presence we worship before Thee,
Own Thou art worthy, and worthy alone.

*Lord, Thou art worthy: Lord, Thou art worthy;*
*Lord, Thou art worthy, and worthy alone!*
*Blest in Thy presence, we worship before Thee,*
*Own Thou art worthy, and worthy alone!*

2. Verily God, yet become truly human,
Lower than angels to die in our stead;
How has that long promised “Seed of the woman”
Trod on the serpent and bruised his head!

3. How didst Thou humble Thyself to be taken.
Led by Thy creatures and nailed to the cross.
Hated of men, and of God too forsaken,
Shunning not darkness, the curse, and the loss.

4. How hast Thou triumphed, and triumphed with glory,
Battled death's forces, rolled back every wave!
Can we refrain then from telling the story,
How Thou art victor o'er death and the grave?

**(38)**

1. கிறிஸ்துவில்தான் என் நம்பிக்கை,
என் ஒளி, என் பெலன், பாடல்;
என் மூலைக்கல், என் கற்பாறை,
புயலும், வறட்சியும் தாங்கும்;
ஆழ்ந்த அன்பு, அமரிக்கை
அச்சமில்லை, போர்களில்லை;
என் ஆறுதல், என் எல்லாமும்.
கிறிஸ்துவின் அன்பில் நிற்கிறேன்.

2. கிறிஸ்துவில்தான் ஊனுருவில்
தேவனின் பூரணம் உண்டு;
நீதியாம் இவ்வன்பின் ஈவை,
ஈனர் இகழந்து தள்ளினர்;
இயேசுவின் சிலுவைச் சாவால்
தேவ கோபம் (தணித்தாரே) தீர்த்தாரே;
பாவம் யாவும் சுமந்தாரே,
கிறிஸ்துவின் சாவால் வாழ்கிறேன்.

3. கிறிஸ்துவே உலகின் ஒளி
இருள் அவர் உடல் கொன்றதே;
கல்லறை திறந்து வந்தார்
மாட்சியாய் மரணம் வென்றார்;
பாவத்தின் தளை அவிழ்த்து
தம் உயிர்ப்பால் விடுவித்தார்;
விலைமிகு தம் இரத்தத்தால்
வாங்கித் தம் சொந்தமாக்கினார்.

4. வாழ்கையில் ஐயங்கள் இல்லை
சாகையில் அச்சமும் இல்லை;
கருமுதல் சாகும்வரை
என் விதி இயேசுவின் கையில்.
கையினின்றென்றைப் பறிக்க
பேயால், மாந்தனால் கூடாதே;
தம்மைச் சந்திக்கும் நாள்வரை
கிறிஸ்துவின் ஆற்றலால் நிற்பேன்.

1. In Christ alone my hope is found
He is my light, my strength, my song
This Cornerstone, this solid ground
Firm through the fiercest drought and storm
What heights of love, what depths of peace
When fears are stilled, when strivings cease
My Comforter, my All in All
Here in the love of Christ I stand

2. In Christ alone, who took on flesh
Fullness of God in helpless babe
This gift of love and righteousness
Scorned by the ones He came to save
'Til on that cross as Jesus died
The wrath of God was satisfied
For every sin on Him was laid
Here in the death of Christ I live

3. There in the ground His body lay
Light of the world by darkness slain
Then bursting forth in glorious Day
Up from the grave He rose again
And as He stands in victory
Sin's curse has lost its grip on me
For I am His and He is mine
Bought with the precious blood of Christ

4. No guilt in life, no fear in death
This is the power of Christ in me
From life's first cry to final breath
Jesus commands my destiny
No power of hell, no scheme of man
Can ever pluck me from His hand
Till He returns or calls me home
Here in the power of Christ I'll stand.

## B-7 கிறிஸ்துவின் மறுவருகை

**(39)**

*எக்காள சத்தம் வானில் தொனித்திடவே*
*எம் இயேசு மாராஜனே வந்திடுவார்.*

1. அந்த நாள் மிகச் சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனைச் சந்திப்போமே.

2. வானமும் பூமியும் மாறிடினும்
வல்லவர் வாக்குதான் மாறிடாதே
தேவதூதர் பாடல் தொனிக்க
தேவன் அவரையே தரிசிப்போமே.

3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்,
கண்ணீர் கவலை அங்கே இல்லை
கர்த்தர்தாமே வெளிச்சமாவார்.

4. கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவோம்.

**(40)**

மேகமீதில் இயேசு ராஜன்
வேகம் வருகிறாரே!
ஆயத்தமுள்ளோரை ஆகாயம் சேர்க்க
அவரே வருகிறாரே.

1. ஆண்டவர்தாமே ஆர்ப்பரிப்போடே
அவனியில் வருகிறாரே,
மீண்டவர்கள் மேலோகமே செல்ல
மேதினியை விடுவார்.

2. கிறிஸ்துவுக்குள்ளே மரித்தோரெல்லாம்
கிளம்பியே எழும்பிடுவார்,
மரிக்காமலிருக்கும் பரிசுத்தரெல்லாம்
மறைந்தேபோய்விடுவார்.

3. பாடுபட்டோர்க்குப் பலன் அளிப்பாரே
பாடுபட்டவர்தாமே,

கூடும் நமக்கோ குறைவில்லாப் பலனை
கூவியே கொடுத்திடுவார்.

4. அவர் உரைத்த அடையாளங்களெல்லாம்
தவறாமல் நடக்கின்றதே,
அவர் வரும் வேளையை எவருமே அறியார்
ஆண்டவரே அறிவார்.

5. ஆயிரம் வருடம் ஆளுகை செய்வார்
ஆண்டவர் இயேசுதாமே,
நீதி சமாதானம் நிறைந்தே இருக்கும்
ஆண்டவர் ஆளுகையில்.

6. அல்லேலூயா கீதம் பாடி
அகமகிழ்ந்தாடிடுவோம்,
ஆண்டவர் வரும் வேளையும் இதோ
மெல்லவே நெருங்கிற்றே.

## III. கிறிஸ்துவில் நாம்

### C-1 கிறிஸ்துவின் அன்பும், அழகும்

**(41)**

அன்பே! அன்பே! அன்பே!
அன்பே, ஆருயிர் உறவே!
ஆனந்தம் ஆனந்தமே!

1. ஒருநாள் உம் தயை கண்டேன் ஐயா,
அந்நாள் என்னை வெறுத்தேன் ஐயா,
உம் தயை பெரிதையா-என்மேல்
உம் தயை பெரிதையா.

2. பரலோகத்தின் அருமைப் பொருளே,
நரலோகரில் அன்பு ஏன் ஐயா?
ஆழம் அறிவேனோ-அன்பின்
ஆழம் அறிவேனோ!

3. அலைந்தேன் பலநாள் உமையும் அறியா,
மறந்தே திரிந்த துரோகியாம் என்னையும்;

அணைத்தீர் அன்பாலே-எனையும்
அணைத்தீர் அன்பாலே.

4. பூலோகத்தின் பொருளின் மகிமை,
அழிகின்ற புல்லின் பூவைப்போல்,
வாடாதே ஐயா-அன்பு
வாடாதே ஐயா.

**(42)**

1. இயேசுவே, உம்மைத் தியானித்தால்
உள்ளம் கனியுமே;
கண்ணார உம்மைக் காணுங்கால்
பரமானந்தமே.

2. மானிட மீட்பர் இயேசுவின்
சீர் நாமம்போலவே
இன் கீத நாதம் ஆய்ந்திடின்
உண்டோ இப்பாரிலே.

3. நீர் நொறுங்குண்ட நெஞ்சுக்கு
நம்பிக்கை ஆகுவீர்;
நீர் சாந்தமுள்ள மாந்தர்க்கு
சந்தோஷம் ஆகுவீர்.

4. கேட்போர்க்கும் தேடுவோர்க்கும் நீர்
ஈவீர் எந்நன்மையும்;
கண்டடைந்தோரின் பாக்ய சீர்
யார் சொல்ல முடியும்?

5. இயேசுவின் அன்பை உணர்ந்து
மெய் பக்தர் அறிவார்;
அவ்வன்பின் ஆழம் அளந்து
மற்றோர் அறிந்திடார்.

6. இயேசுவே, எங்கள் முக்தியும்
பேரின்பமும் நீரே;
இப்போதும் நித்ய காலமும்
நீர் எங்கள் மாட்சியே.

1. Jesus, the very thought of Thee
With sweetness fills the breast;
But sweeter far Thy face to see,
And in Thy presence rest.

2. Nor voice can sing, nor heart can frame,
Nor can the mem'ry find
A sweeter sound than Thy blest name,
O Savior of mankind!

3. O hope of every contrite heart,
O joy of all the meek,
To those who fall, how kind Thou art!
How good to those who seek!

4. But what to those who find? Ah, this
Nor tongue nor pen can show;
The love of Jesus, what it is,
None but His loved ones know.

5. O Jesus! light of all below!
Thou fount of life and fire!
Surpassing all the joys we know,
And all we can desire.

6. Jesus, our only joy be Thou,
As Thou our prize will be;
Jesus, be Thou our glory now,
And through eternity.

**(43)**

1. ஒப்பில்லாத திவ்ய அன்பே,
மோட்சானந்தா, தேவரீர்,
எங்கள் நெஞ்சில் வாசம் செய்தே
அருள் பூர்த்தியாக்குகிறீர்,
மா தயாள இயேசு நாதா
அன்புமயமான நீர்
நைந்த உள்ளத்தில் இறங்கி
உம் இரட்சிப்பால் சந்திப்பீர்.

2. உமது நல் ஆவி தாரும்
எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மில் சார நீரே வாரும்
சுத்த அன்பின் வடிவாம்
பாவ ஆசை எல்லாம் நீக்கி
அடியாரை இரட்சியும்
விசுவாசத்தைத் துவக்கி
முடிப்பவராய் இரும்.

3. வல்ல நாதா, எங்கள் பேரில்
மீட்பின் அன்பை ஊற்றுமே;
விரைவாய் உம் ஆலயத்தில்
வந்து என்றும் தங்குமே.
வானோர்போல நாங்கள் உம்மை
நித்தம் வாழ்த்திச் சேவிப்போம்;
ஓய்வில்லாமல் உமதன்பைப்
பூரிப்பாய்க் கொண்டாடுவோம்.

4. உந்தன் புதுப் படைப்பையும்
சுத்தத் தூய்மையாக்குமேன்.
உந்தன் திவ்ய இரட்சிப்பையும்
பூரணப்படுத்துமேன்.
எங்கள் கிரீடம் உம்முன் வைத்து
அன்பில் மூழ்கிப் போற்றியும்
மேன்மைமேலே மேன்மைபெற்று
விண்ணில் வாழச் செய்திடும்.

1. Love divine, all loves excelling,
   Joy of heaven to earth come down;
   Fix in us thy humble dwelling;
   All thy faithful mercies crown!
   Jesus, Thou art all compassion,
   Pure unbounded love Thou art;
   Visit us with Thy salvation;
   Enter every trembling heart.

2. Breathe, O breathe Thy loving Spirit,
   Into every troubled breast!
   Let us all in Thee inherit;
   Let us find that second rest.
   Take away our bent to sinning;
   Alpha and Omega be;
   End of faith, as its Beginning,
   Set our hearts at liberty.

3. Come, Almighty to deliver,
   Let us all Thy life receive;
   Suddenly return and never,
   Never more Thy temples leave.
   Thee we would be always blessing,
   Serve Thee as Thy hosts above,
   Pray and praise Thee without ceasing,
   Glory in Thy perfect love.

4. Finish, then, Thy new creation;
   Pure and spotless let us be.
   Let us see Thy great salvation
   Perfectly restored in Thee;

Changed from glory into glory,
'Til in heaven we take our place,
'Til we cast our crowns before Thee,
Lost in wonder, love, and praise.

**(44)**

1. என்னே ஆழம், என்னே நீளம்!
என்மேல் கொண்ட உம் அன்பு!
புத்திக்கெட்டா ஆழ்ந்த அன்பு,
ஆழ்கடலினும் ஆழம்!
இப்பேரன்பால் நீர் மரித்தீர்,
உம் ஜீவன் என்னுள் தந்தீர்:
செடியுடன் கொடி போல,
நான் உம்மோடு ஒன்றாக.

2. அன்பால் செய்த அற்புதங்கள்
யாரால் சொல்லி முடியும்?
அற்புதத்தில் மா அற்புதம்
நீரே என்னுள் வந்ததே.
உம்மையே என் நிரப்பீடாய்
உம் அன்பெனக்கீந்ததே:
பங்கடைவேன் உம் ஜீவனில்,
துய்ப்பேன் உம் ஐசுவரியங்கள்.

3. நேசிக்கும் உம் தெய்வீகத்தின்
வெளிப்பாடாம் உம் அன்பு.
வாழ்வை அர்த்தம் உள்ளதாக்கி
உம் திட்டத்தோடிசைக்கும்.
போதுமான ஜீவ கிருபை
நாள்தோறும் என் பங்காகும்:
உம் தயவு என் மேல், என்றும்
உம் இனிமை ருசிப்பேன்.

4. யார் பிரிப்பார் உம்மைவிட்டு?
அன்புகூர்வீர் என்றென்றும்!
என்னோடும்மைச் சேர்த்திணைக்க

வல்லதே உம் பேரன்பு!
நாம் என்றும் ஒன்றாயிருப்போம்:
நானுமக்கெனக்கு நீர்!
நாம் என்றும் ஒன்றே உம் அன்பில்
என்பதே என் சாட்சியாம்!

1. O how deep and how far-reaching
   Is Thy love, dear Lord, to me!
   Far beyond my pow'r to fathom,
   Deeper than the deepest sea!
   It has caused Thee death to suffer
   And to me Thyself impart,
   That in Thee I might be grafted
   And become of Thee a part.

2. Who can tell of all the wonders
   Which Thy love for me has wrought.
   Yet the greatest of these wonders
   Is that Thou to me art brought.
   Oh! to me Thy love has given
   All Thou art as my supply;
   As true life I now may share Thee
   And Thy riches e'er enjoy.

3. Lord, Thy love is the expression
   Of Thy loving self divine,
   Making life so full of meaning,
   Harmonized with God's design.
   Grace of life, how all-sufficient,
   Is my portion day by day;
   I'm the object of Thy favor
   And Thy sweetness taste always.

4. What from Thee can separate me?
Thou wilt love me to the end!
Oh! Thy love is so prevailing,
E'en Thyself with me to blend!
We two one will be for ever;
I am Thine and Thou art mine!
This will be my testimony:
In Thy love we'll ever twine!

**(45)**

1. நல் மீட்பர் இயேசு நாமமே
என் காதுக்கின்பமாம்;
புண்பட்ட நெஞ்சை ஆற்றவே
ஊற்றுண்ட தைலமாம்.

2. அந்நாமம் நைந்த ஆவியை
நன்றாகத் தேற்றுமே;
துக்கத்தால் தொய்ந்த உள்ளத்தைத்
திடப்படுத்துமே.

3. பசித்த ஆத்துமாவுக்கு
மன்னாவைப் போலாகும்;
இளைத்துப்போன ஆவிக்கு
ஆரோக்கியம் தந்திடும்.

4. என் இரட்சகா, என் கேடகம்,
என் கோட்டையும் நீரே;
நிறைந்த அருட் பொக்கிஷம்
அனைத்தும் நீர்தாமே.

5. மா நேசர், மேய்ப்பர், பர்த்தாவும்,
என் ஜீவனும் நீரே;
என் தீர்க்கரும், என் இராஜாவும்,
ஆசாரியருமே.

6. என் பிராண நாதா, ஆண்டவா,
நான் உம்மைப் போற்றுவேன்;
என் வாழ்நாளெல்லாம் இரட்சகா,
பேரன்பைச் சாற்றுவேன்.

1. How sweet the Name of Jesus sounds
In a believer's ear!
It soothes his sorrow, heals his wounds,
And drives away his fear.

2. It makes the wounded spirit whole,
And calms the troubled breast;
'Tis manna to the hungry soul,
And to the weary rest.

3. Dear Name! the Rock on which we build;
Our shield and hiding-place;
Our never-failing treasury, filled
With boundless stores of grace.

4. Jesus, our Savior, Shepherd, Friend,
Our Prophet, Priest, and King;
Our Lord, our Life, our Way, our End,
Accept the praise we bring.

5. Weak is the effort of our heart,
And cold our warmest thought;
But when we see Thee as Thou art,
We'll praise Thee as we ought.

6. Till then we would Thy love proclaim
With every fleeting breath;

And triumph in that blessed Name
Which quells the pow'r of death.

**(46)**

1. ஜீவ ஊற்றே, மெய் ஒளியே,
நேசரின் இன்ப இயேசுவே,
பூவின் இன்பம் நிறைவல்ல
சேர்ந்தோம் உம் பாதமே மீண்டும்.

2. பாதம் சேர்ந்தோரை மீட்பீரே,
இவ்வுண்மை என்றும் மாறாதே;
தேடுவோர்க்கு நீர் நல்லவர்,
பற்றுவோர்க்கு நீரே எல்லாம்.

3. விண் அப்பம் உம்மைச் சுவைப்போம்,
இன்னும் உட்கொள்ள ஆசிப்போம்;
ஜீவ ஊற்றும்மில் பருகி
தாகம் தீர ஆத்மா நாடும்.

4. மாறிடும் வாழ்க்கை யாவிலும்
என் ஆவி உம்மை வாஞ்சிக்கும்;
உம் அருட் பார்வை எம் இன்பம்
விஸ்வாசத்தால் கண்டோம் ஆசீர்.

5. எம் பலம், நங்கூரம் நீரே,
எக்காலும் ஓய்வும் ஒளியும்;
பாவக் காரிருள் ஓட்டுமே
உம் தூய ஜோதி வீசுமே.

1. Jesus, Thou Joy of loving hearts,
Thou Fount of life, Thou Light of men,
From the best bliss that earth imparts,
We turn unfilled to Thee again.

2. Thy truth unchanged hath ever stood;
Thou savest those that on Thee call;

To them that seek Thee, Thou art good,
To them that find Thee, all in all!

3. We taste Thee, O Thou living Bread,
And long to feast upon Thee still;
We drink of Thee, the Fountain-head,
And thirst our souls from Thee to fill!

4. Our restless spirits yearn for Thee,
Where'er our changeful lot is cast;
Glad when Thy gracious smile we see,
Blest, when our faith can hold Thee fast.

5. O Lord, be Thou our strength and stay!
Make all our moments calm and bright,
Chase all dark thoughts of sin away,
Shed o'er us here Thy holy light.

## C-2 கிறிஸ்துவே நமக்கு எல்லாம்

**(47)**

*1.* ஒப்பில்லாரைக் கண்டுகொண்டேன்,
உள்ளம் கொண்டாடுதே;
கிறிஸ்தெனக்குள்ளதால் மனம்
மகிழ்ந்து பாடுவேன்.

*2.* கிறிஸ்துவின் மானிடம் கோவில்,
கிறிஸ்து பலிபீடம்,
கிறிஸ்து என் பூரண பலி,
கிறிஸ்து என் ஆசாரியர்.

*3.* கிறிஸ்து வழி, உண்மை, உயிர்,
வானின் வாசல் அவர்,
நிழல் நன்மைகளின் மெய்மை,
வேதத்தின் நிறைவு..

4. கிறிஸ்து தேவ ஆட்டுக்குட்டி,
பூரண இரட்சகர்,
செட்டையின்கீழ் நலம்கொண்ட,
நீதியின் சூரியன்.

5. கிறிஸ்து உயிர் தரும் தரு,
நித்திய உயிர் அவர்,
ஈயும் கனி என் விருந்து,
இலைகள் மருந்து.

6. கிறிஸ்து என் பானம், உணவு,
ஆரோக்கியம், ஆறுதல்,
மகிழ்ச்சி, ஓய்வு, வல்லமை,
மகிமை, என் செல்வம்.

7. கிறிஸ்தென் கர்த்தர், சகோதரர்,
பரிவுடையவர்,
ஆலோசகர், வழித்துணை
என்னோடிருப்பவர்.

8. எல்லாம் தம்முள் கொண்டவரை
என்னென்று சொல்லுவேன்,
ஆதியோடந்தம் கிறிஸ்துவே,
எல்லார்க்கும் எல்லாமும்.

1. I've found the pearl of greatest price,
My heart doth sing for joy:
And sing I must, a Christ I have;
O what a Christ have I?

2. Christ is the Way, the Truth, the Life,
The way to God on high,
Life to the dead, the truth of types,
The truth of prophesy.

3. Christ is a prophet, priest and king,
   A Prophet full of light,
   A Priest that stands 'twixt God and man,
   A King that rules with might.

4. Christ's manhood is a temple, where
   The altar God doth rest;
   My Christ, he is the sacrifice,
   My Christ he is the priest.

5. My Christ he is the Lord of lords,
   He is the King of kings;
   He is the Sun of righteousness,
   With healing in his wings.

6. My Christ, he is the Tree of Life,
   Which in God's garden grows;
   Whose fruit does feed, whose leaves do heal;
   My Christ is Sharon's rose.

7. Christ is my meat, Christ is my drink,
   My physic and my health,
   My peace, my strength, my joy, my crown,
   My glory and my wealth.

8. Christ is my father, and my friend,
   My brother and my love;
   My head, my hope, my counselor,
   My advocate above.

9. My Christ, he is the Heaven of heavens,
   My Christ what shall I call?
   My Christ is first, my Christ is last,
   My Christ is all in all.

**(48)**

*உம்மையல்லாமல் எனக்கு யாருண்டு? (4)*
*என் இயேசையா, நீரே எல்லாம் (2)*

1. என் நீதியும் நீரே, பரிசுத்தமும் நீரே
   என் தேவைகள் எல்லாம் நீர்தானே.

2. உயர்வினிலும் நீரே, தாழ்வினிலும் நீரே,
   என் மகிமை எல்லாம் நீர்தானே.

3. நிறைவினிலும் நீரே, குறைவினிலும் நீரே,
   என் செல்வம், என் பெலன் நீர்தானே.

4. வாழ்வினிலும் நீரே, தாழ்வினிலும் நீரே,
   என் ஜீவனாய் என்றும் நீர்தானே.

5. இம்மையிலும் நீரே, மறுமையிலும் நீரே,
   என் இன்பம், என் சொந்தம் நீர்தானே.

*உம்மையல்லாமல் எனக்கு யார் வேண்டும்? (4)*
*என் இயேசையா நீரே போதும் (2)*

**(49)**

*எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்*
*நன்றியால் உம்மை நான் துதிப்பேன்;*
*இயேசுவே, உம்மை நான் துதிப்பேன், துதிப்பேன்*
*எந்த வேளையிலும் துதிப்பேன்.*

1. ஆதியும் நீரே, அந்தமும் நீரே,
   ஜோதியும் நீரே, என் சொந்தமும் நீரே.
2. தாய் தந்தை நீரே, தாதியும் நீரே,
   தாபரம் நீரே, என் தாரகம் நீரே.
3. வாழ்விலும் நீரே, தாழ்விலும் நீரே,
   வாதையில் நீரே, என் பாதையில் நீரே.
4. வானிலும் நீரே, பூவிலும் நீரே,
   ஆழியில் நீரே, என் ஆபத்தில் நீரே.
5. துன்ப நேரத்தில் இன்பமும் நீரே,
   இன்னல் வேளையில் என் நேசரும் நீரே.

6. ஞான வைத்தியராம் என் ஔஷதம் நீரே,
ஆத்ம நேசராம் என் நண்பரும் நீரே.

7. ஞானமும் நீரே, தானமும் நீரே,
நியாயமும் நீரே, என் நாதனும் நீரே.

8. ஆறுதல் நீரே, ஆதாரம் நீரே,
ஆசையும் நீரே, என் ஆனந்தம் நீரே.

9. மீட்பரும் நீரே, என் மேய்ப்பரும் நீரே,
மேன்மையும் நீரே, என் மகிமையும் நீரே.

10. தேவனும் நீரே், ஜீவனும் நீரே,
இராஜ இராஜனும் என் சர்வமும் நீரே.

**(50)**

1. என் தேவனே, பங்கே, அன்பே,
என் நித்திய ஆஸ்தியே,
வானில், பூவில் எனக்கென்று
நீரல்லால் யாருண்டு? நீரல்லால் யாருண்டு?

2. விண்ணும், தாழ்ந்த மண்ணுங்கூட
வெறுமைதான் அன்றோ!
மகிழ இங்கொன்றுமில்லை,
தேவன்போல் ஒன்றில்லை, தேவன்போல் ஒன்றில்லை.

3. க்ஷேமம், செல்வம், நண்பர், சுகம்
யாவும் நீர், ஈந்தீரே;
நன்றி! ஆனாலும் இவைகள்
என் தேவன் ஆகுமோ! என் தேவன் ஆகுமோ!

4. மின்னும் பொன்னும் வீண் பொம்மையே
உம்மோடொப்பிடும்போழ்;
என் க்ஷேமம், சுகம், நண்பர்கள்
உமக்கொப்பாகுமோ? உமக்கொப்பாகுமோ?

5. விரிந்த பூமி, விண்மீன்கள்
என் சொந்தமானாலும்,

நீரும், கிருபையும் இல்லையேல்
நிர்க்கதியானேன் நான், நிர்க்கதியானேன் நான்.

6. கடல்போல் கைவிரிப்பவர்
உலகைப் பற்றட்டும்;
உம் கிருபை என்னைச் சேரட்டும்,
நான் திருப்தியாகுவேன், நான் திருப்தியாகுவேன்.

1. My God, my Portion, and my Love,
My everlasting All,
I've none but Thee in heav'n above,
Or on this earthly ball, Or on this earthly ball.

2. What empty things are all the skies,
And this inferior clod!
There's nothing here deserves my joys,
There's nothing like my God, There's nothing like my God.

3. To Thee I owe my wealth, and friends,
And health, and safe abode;
Thanks to Thy name for meaner things,
But they are not my God, But they are not my God.

4. How vain a toy is glittering wealth,
If once compared to Thee!
Or what's my safety, or my health,
Or all my friends to me, Or all my friends to me.

5. Were I possessor of the earth,
And called the stars my own,
Without Thy graces and Thyself,
I were a wretch undone, I were a wretch undone.

6. Let others stretch their arms like seas,
And grasp in all the shore;

Grant me the visits of Thy grace,

And I desire no more,  And I desire no more.

**(51)**

1. என் நோக்கம் நீர், என் நோக்கும் நீர்,
என் ஏக்கமும் நீரே;
என் நாட்டம் நீர், என் ஈட்டம் நீர்,
கொண்டாட்டமும் நீரே.

*நீர் போதும் இயேசுவே!*
*நீரே எல்லாமுமே!*
*நீர் இல்லையேல் வாழ்வில்லையே!*
*நீர் போதும் என் வாழ்விலே!*

2. என் நாதம் நீர், என் நாதன் நீர்,
என் வேதமும் நீரே,
என் ஆதி நீர், என் அந்தம் நீர்,
என் பாதையும் நீரே.

3. என் உயிர் நீர், என் வழி நீர்,
என் உண்மையும் நீரே,
என் மையம் நீர், என் எல்லை நீர்,
என் மெய்மையும் நீரே.

4. என் வாழ்வு நீர், என் வளம் நீர்,
என் வல்லமை நீரே.
என் மீட்பு நீர், என் தூய்மை நீர்,
என் நீதியும் நீரே.

5. என் பானம் நீர், என் ஊணும் நீர்,
என் வான ஈவும் நீர்,
என் மீட்பர் நீர், என் மேய்ப்பர் நீர்,
என் மேய்ச்சலும் நீரே.

6. ஆலயம் நீர், ஆண்டவர் நீர்,
ஆசாரியரும் நீர்,
என் பலி நீர், என் விழா நீர்,
என் தொழுகை நீரே.

7. என் ஆவல் நீர், என் ஆசை நீர்,
என் ஆதரவும் நீர்,
ஆதாரம் நீர், ஆதாயம் நீர்,
ஆசீர் எல்லாம் நீரே.

8. என் சாய்வு நீர், என் ஓய்வு நீர்,
என் ஆய்வும், தீர்வும் நீர்,
என் வீடு நீர், என் நாடு நீர்,
என் தேடலும் நீரே.

**(52)**

1. நித்யரே! உம்மில் பதித்தேன்
என் உள்ளம்! என் உள்ளம்!
அழியாச் செல்வமாய்க் கொண்டேன்
கிறிஸ்துவே. கிறிஸ்துவே!
தீர்க்கர், குரு! ராஜாவே!
ஏழைக்கு இரட்சை தந்தீரே
பாடித் துதிப்பேன் என்றுமே
கிறிஸ்துவே, கிறிஸ்துவே

2. தேவத்துவத்தின் பூரணமே
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
தெய்வீக ராஜாதி ராஜாவே
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
பிதாவின் பிரிய மகன்,
சிங்காசனம் அமர் வேந்தர்
மானிட பாவம் சுமந்தோர்
கிறிஸ்துவே, கிறிஸ்துவே!

3. பொன் வெள்ளி மற்றோர் தனமே
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
மாறாத செல்வம் எனக்கே
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
உன் பொன் வெள்ளி அழிந்திடும்
உன் கீர்த்தியும் ஒழிந்திடும்
ஆனால், என் செல்வம் ஓங்கிடும்
கிறிஸ்துவே, கிறிஸ்துவே!

4. சுகமோ தீரா நோயிலும்
கிறிஸ்துதான், கிறிஸ்துதான்;
செல்வமோ ஏழ்மையிலும்
கிறிஸ்துதான்! கிறிஸ்துதான்!
இப்பூவை விடும் அந்நாளில்
சாவின் நதி கடக்கையில்
பரம லோகத்திற்கேகையில்
கிறிஸ்துதான்! கிறிஸ்துதான்

5. இராப்பகல் எவ்விடத்திலும்
கிறிஸ்துதான்! கிறிஸ்துதான்!
ஜெபம் கீதம் போதிப்பிலும்
கிறிஸ்துதான்! கிறிஸ்துதான்!
துன்பத்தில் என் இன்பமும்
ஆறுதலும் என் கீதமும்
ஆதி அந்தம் எந்நேரமும்
கிறிஸ்துதான், கிறிஸ்துதான்!

1. My heart is fixed, eternal God,
Fixed on Thee; Fixed on Thee;
And my unchanging choice is made,
Christ for me, Christ for me.
He is my prophet, priest and King,
Who did for me salvation bring,
And while I've breath I mean to sing:
Christ for me, Christ for me.

2. In Him I see the Godhead shine,
Christ for me, Christ for me;
He is the majesty divine,
Christ for me, Christ for me;
The Father’s well-beloved Son,
Co-partner of His royal throne,

Who bore the guilt of man alone,
Christ for me, Christ for me.

3. Let others boast of heaps of gold,
Christ for me, Christ for me.
His riches never can be told,
Christ for me, Christ for me.
Your gold will waste and wear away,
Your honors perish in a day,
My portion never can decay,
Christ for me, Christ for me.

4. In pining sickness or in health,
Christ for me, Christ for me.
In deepest poverty or wealth,
Christ for me, Christ for me.
And in that all-important day,
When I the summons must obey,
And pass from this dark world away,
Christ for me, Christ for me.

5. At home, abroad, by night, by day,
Christ for me, Christ for me.
Where'er I speak, or sing, or pray,
Christ for me, Christ for me.
Him first and last, him all day long,
My hope, my solace, and my song,
I'll send the ringing cry along:
Christ for me, Christ for me.

**(53)**

1. நீரே என் தரிசனமாயிரும்,
   நீரல்லால் வேறெல்லாம் மறையட்டும்;
   எப்போதும் என் தியானமாயிரும்,
   எந்நிலையிலும் என் கண்முன் இரும்.

2. என் வாக்கும், என் ஞானமுமாயிரும்,
   என்னோடிரும், நான் உம்மோடிருப்பேன்,
   என் தந்தையாய், நான் உம் மகனாய்,
   என் சொந்தமாயிரும், நான் உம் சொந்தம்.

3. என் கேடகமாய், என் வாளாய் இரும்,
   என் தஞ்சமாய், என் கோட்டையாய் இரும்,
   என் மேன்மையாய், பூரிப்பாய் இரும்,
   என்னை உயர்த்தும் விண்ணோனாய் வாழ.

4. நான் வேண்டும் நன்மை எல்லாமாய் இரும்,
   வான் பூவில் நீர் என் வேந்தராய் இரும்,
   என் நெஞ்சின் மா நேசமாயிரும்,
   நீரே, நீரல்லால் வேறாரும் மேவேன்.

5. பூவின் செல்வங்கள், வீண் புகழ் வேண்டேன்,
   நான் நாடும் சொத்தாய் என்றென்றும் இரும்,
   என் முதல் தேடலாய் நீர் இரும்,
   நான் தேடும் பொக்கிஷமாய் நீர் இரும்.

6. உம் அன்பால் என்னை நீர் முற்றும் கொள்ளும்,
   உம் அன்பை வெள்ளம்போல் என்னில் ஊற்றும்,
   என்ன நேர்ந்தாலும் அன்பின் தேவா,
   என் நெஞ்சின் தரிசனமாய் இரும்.

1. Be Thou my Vision, O Lord of my heart;
   Naught be all else to me, save that Thou art.
   Thou my best Thought, by day or by night,
   Waking or sleeping, Thy presence my light.

2. Be Thou my Wisdom, and Thou my true Word;
I ever with Thee and Thou with me, Lord;
Thou my great Father, I Thy true son;
Thou in me dwelling, and I with Thee one.

3. Be Thou my battle Shield, Sword for the fight;
Be Thou my Dignity, Thou my Delight;
Thou my soul's Shelter, Thou my high Tower:
Raise Thou me heavenward, O Power of my power.

5. Riches I heed not, nor man's empty praise,
Thou mine Inheritance, now and always:
Thou and Thou only, first in my heart,
High King of Heaven, my Treasure Thou art.

6. High King of Heaven, my victory won,
May I reach Heaven's joys, O bright Heaven's Sun!
Heart of my own heart, whatever befall,
Still be my Vision, O Ruler of all.

**(54)**

1. நீரே என் பலம் சோர்வினில்
நீரே நான் தேடும் பொக்கிஷம்
நீரே எனக்கெல்லாம்:
முத்தைப்போல் உம்மைத் தேடுவேன்
மூடனாய் உம்மைக் கைவிடேன்
நீரே எனக்கெல்லாம்.

*இயேசு, செம்மறி*
*உம் நாமம் வாழ்க:*
*இயேசு, செம்மறி*
*உம் நாமம் வாழ்க.*

2. என் சிலுவையை எடுத்து
உந்தன் நாமம் ஆராதிப்பேன்:

நீரே எனக்கெல்லாம்:
நான் வீழ்கையில் தூக்குகின்றீர்
என் பாத்ரம் நிரப்புகின்றீர்
நீரே எனக்கெல்லாம்.

1. You are my strength when I am weak;
   You are the treasure that I seek;
   You are my all in all.
   Seeking You as a precious jewel
   Lord, to give up I'd be a fool;
   You are my all in all.

   *Jesus, Lamb of God*
   *Worthy is Your name;*
   *Jesus, Lamb of God*
   *Worthy is Your name.*

2. Taking my sin, my cross, my shame
   Rising again, I bless Your name;
   You are my all in all.
   When I fall down, You pick me up;
   When I am dry, You fill my cup;
   You are my all in all.

**(55)**

1. முன்னறிந்தார், முன்குறித்தார், கிறிஸ்துவுக்குள் தீர்மானித்தார்! தேர்ந்தெடுத்தார், கிறிஸ்துவுக்குள் பேர்சொல்லி என்னை அழைத்தார்.

   *கிறிஸ்து பூரண மாந்தனும், முழுமையான தேவனும்*
   *கிறிஸ்துவில் நானும் பூரணன், கிறிஸ்துவில் நிறைவடைந்தேன்.*

2. மன்னித்தார், நீதிமான் ஆனேன், கிறிஸ்துவின் தூய இரத்தத்தால்! பிறப்பித்தார் தம் மகனாய் கிறிஸ்துவின் தூய ஆவியால்!

3. புது ஜீவன், புது இனம், கிறிஸ்துவில் புதுப் படைப்பு!
புது மாந்தன், புது வாழ்வு, கிறிஸ்துவில் எல்லாம் புதிது!

4. அறைந்தார், அடக்கம் செய்தார், கிறிஸ்துவுக்குள் எழுப்பினார்!
உயர்த்தினார், அமர்த்தினார், கிறிஸ்துவுக்குள் உன்னதத்தில்.

5. உன்னத ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவில் நம் சுதந்தரம்!
உன்னத நன்மை வளங்கள் கிறிஸ்துவுக்குள் நம் சம்பத்து.

6. தம் தன்மையில், தம் தூய்மையில், கிறிஸ்துவுக்குள் பங்களித்தார்;
தம் சாயலாய், தம் மாட்சிக்கு கிறிஸ்துவில் நம்மை மாற்றினார்.

7. காலங்களின் முடிவிலே கிறிஸ்துவின் தலைமைக்குள்ளே
சகலமும் கூட்டப்படும், கிறிஸ்துவே எல்லாமும் ஆவார்.

## C-3 இரட்சிப்பின் மகிழ்ச்சி

**(56)**

1. அருள்! அற்புதமாம் அருள்!
பாவியை மீட்டது!
என்னையும் தேடிக் கண்டது!
என் கண் திறந்தது!

2. தேவபக்தி ஈந்ததருள்!
அச்சங்கள் தீர்ந்தன!
நம்பும் கணம் தந்தார் அருள்!
அருள்மேலே அருள்!

3. கர்த்தர் நன்மை வாக்களித்தார்
நங்கூரம் அவர் சொல்!
வாழ்நாளெல்லாம் என் கேடகம்,
என் பங்கும் அவரே.

4. விண்ணரசில் விண்மீன்கள்போல்
என்றென்றும் ஒளிர்வோம்!
இன்றுபோல் அன்றும் ஓயாது
தேவனைப் புகழ்வோம்.

1. Amazing grace! How sweet the sound
   That saved a wretch like me!
   I once was lost, but now am found;
   Was blind, but now I see.

2. ’Twas grace that taught my heart to fear,
   And grace my fears relieved;
   How precious did that grace appear
   The hour I first believed

3. The Lord has promised good to me,
   His Word my hope secures;
   He will my Shield and Portion be,
   As long as life endures.

4. When we’ve been there ten thousand years,
   Bright shining as the sun,
   We’ve no less days to sing God’s praise
   Than when we’d first begun.

**(57)**

1. அற்புத அற்புதமான ஓர் நாள்
   நான் மறவாத நல் நாள்;
   இருளில் நான் அலைந்துபோனபின்
   இரட்சகரைச் சந்தித்தேன்;
   என்ன மா இரக்கமான நண்பர்,
   என் தேவை பூர்த்திசெய்தார்,
   நிழல், இருள் நீக்கி ஒளி கொடுத்தார்
   இன்பமாய் இதைச் சொல்வேன்.

   *பரத்தின் மகிமை உள்ளம் நிரப்பிற்றே*
   *சிலுவையண்டை இயேசு சுகமாக்கினார்,*
   *இரவைப் பகலாக்கினார், என் பாவத்தைக் கழுவினார்*
   *பரத்தின் மகிமை உள்ளம் நிரப்பிற்று.*

2. நான் பிறந்தது தேவ ஆவியால்
தெய்வீகக் குடும்பத்தில்;
கல்வாரி அன்பால் நீதிமானேன்,
என்னே மேன்மை என் நிலை!
காரியம் சீக்கிரமாய் நடந்தன
பாவியாய் வந்தபோது
கிருபையாய்க் கொடுத்தார், நான் அதை எடுத்தேன்
என்னை மீட்டார் தோத்திரம்.

3. நிலைக்கும் நம்பிக்கை என்னிலுண்டு
காலமும் கடந்தபின்;
பரத்தில் என்றென்றுமே வாழ்வேன்
வாசஸ்தலம் அங்குண்டு;
அற்புதமான அந்நாள்நிமித்தம்
குருசை விசுவாசித்தேன்
நித்திய வளங்கள், மேலான பாக்யங்கள்
அவர் கையாலே பெற்றேன்.

1. O what a wonderful, wonderful day,
Day I will never forget;
After I'd wandered in darkness away,
Jesus my Savior I met.
O what a tender, compassionate friend,
He met the need of my heart;
Shadows dispelling, with joy I am telling,
He made all the darkness depart.

*Heaven came down*
*And glory filled my soul,*
*When at the cross*
*The Savior made me whole;*
*My sins were washed away*
*And my night was turned to day,*
*Heaven came down*
*And glory filled my soul!*

2. Born of the Spirit with life from above
Into God's family divine,
Justified fully thru Calvary's love,
O what a standing is mine!
And the transaction so quickly was made,
When as a sinner I came,
Took of the offer, of grace He did proffer,
He saved me, O praise His dear name!

3. Now I've a hope that will surely endure
After the passing of time;
I have a future in heaven for sure
There in those mansions sublime.
And it's because of that wonderful day,
When at the cross I believed;
Riches eternal and blessings supernal,
From His precious hand I received.

**(58)**

1. இயேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவ குமாரன் இரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக்கொண்டார்.

*இது என் கதை! இதென் கீதம்!*
*மீட்பரைப் பாடிப் போற்றிடுவேன்.*
*இது என் கதை! இதென் கீதம்!*
*இயேசு என் நேசர் பாடிடுவேன்.*

2. அன்பு பாராட்டிக் காப்பவராய்
எந்தனைத் தாங்கிப் பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்,
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்.

3. மெய்ச் சமாதானம் இரம்மியமும்
தூய தேவாவி வல்லமையும்
புண்ணியநாதர் தந்துவிட்டார்
விண்ணிலும் சேர்த்து வாழச் செய்வார்.

1. Blessed assurance, Jesus is mine!
O what a foretaste of glory divine!
Heir of salvation, purchase of God,
born of his Spirit, washed in his blood.

*This is my story, this is my song,*
*Praising my Savior all the day long;*
*This is my story, this is my song,*
*Praising my Savior all the day long.*

2. Perfect submission, perfect delight,
Visions of rapture now burst on my sight;
Angels descending bring from above
Echoes of mercy, whispers of love.

3. Perfect submission, all is at rest;
I in my Savior am happy and blest,
Watching and waiting, looking above,
Filled with his goodness, lost in his love.

**(59)**

1. எந்தன் வாழ்வில் அற்புத மாற்றம் வந்ததே!
இயேசென் உள்ளத்தில் வந்ததால்;
நான் தேடின ஒளி உள்ளத்தில் வீசிற்றே
இயேசென் உள்ளத்தில் வந்ததால்.

*இயேசென் உள்ளத்தில் வந்ததால்,*
*இயேசென் உள்ளத்தில் வந்ததால்,*
*வெள்ளம்போல் ஆனந்தம்*

*உள்ளெல்லாம் பொங்குதே,*
*இயேசென் உள்ளத்தில் வந்ததால்.*

2. வழி தப்பி நான் இனி அலைவதில்லை,
இயேசென் உள்ளத்தில் வந்ததால்;
திரளான பாவமெல்லாம் கழுவினாரே.
இயேசென் உள்ளத்தில் வந்ததால்.

3. அசையா நங்கூரம்போல் நம்பிக்கையுண்டு,
இயேசென் உள்ளத்தில் வந்ததால்;
ஐய மேகங்கள் என் பாதை மறைப்பதில்லை,
இயேசென் உள்ளத்தில் வந்ததால்.

4. சாவின் பள்ளத்தாக்கில் எனக்கொளி உண்டு,
இயேசென் உள்ளத்தில் வந்ததால்;
அந்த நகரத்தின் வாயில்கள் காண்கின்றேன்,
இயேசென் உள்ளத்தில் வந்ததால்.

5. அந்த நகரத்தில் நான் வாழச் செல்கின்றேன்,
இயேசென் உள்ளத்தில் வந்ததால்;
முன்பே போகப்போகச் சந்தோஷம் சந்தோஷம்,
இயேசென் உள்ளத்தில் வந்ததால்.

1. What a wonderful change in my life has been wrought
Since Jesus came into my heart!
I have light in my soul for which long I had sought,
Since Jesus came into my heart!

*Since Jesus came into my heart!*
*Since Jesus came into my heart!*
*Floods of joy o'er my soul like the sea billows roll,*
*Since Jesus came into my heart!*

2. I have ceased from my wand'ring and going astray,
Since Jesus came into my heart!
And my sins which were many are all washed away,
Since Jesus came into my heart!

3. I'm possessed of a hope that is steadfast and sure,
Since Jesus came into my heart!
And no dark clouds of doubt now my pathway obscure,
Since Jesus came into my heart!

4. There's a light in the valley of death now for me,
Since Jesus came into my heart!
And the gates of the City beyond I can see,
Since Jesus came into my heart!

5. I shall go there to dwell in that City I know,
Since Jesus came into my heart!
And I'm happy, so happy as onward I go,
Since Jesus came into my heart!

**(60)**

எந்நாளுமே துதிப்பாய், என்னாத்துமாவே நீ
எந்நாளுமே துதிப்பாய்.

*இந்நாள்வரையிலே உன்னதனார் செய்த*
*எண்ணில்லா நன்மைகள் யாவும் மறவாது.*

1. பாவங்கள் எத்தனையோ நினையாதிருந்தார் உன்
பாவங்கள் எத்தனையோ;
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப் (2)
பாரினில் வைத்த மகா தயவை எண்ணி.

2. எத்தனையோ கிருபை, உன்னுயிர்க்குச் செய்தாரே
எத்தனையோ கிருபை;
நித்தம் உனை முடி சூட்டினதுமின்றி (2)
நித்தியமாக ஜீவனை மீட்டதால்.

3. பூமிக்கும் வானத்துக்கும் உள்ள தூரம்போலவே
பூமிக்கும் வானத்துக்கும்;
தேவ பயமுள்ளவர்மேல் அவர் அருள் (2)
சாலவும் தங்குமே சத்தியமேயிது.

4. மன்னிப்பு மாட்சிமையாம், மா தேவன் அருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்;
எண்ணுவாயோ கிழக்கு மேற்கின் தூரமே (2)
மண்ணில் உன் பாவம் அகன்ற தூரமே.

5. தந்தை தன் பிள்ளைகட்கு தயவோடிரங்கானோ
தந்தை தன் பிள்ளைகட்கு;
எந்த வேளையும் அவரோடு தங்கினால் (2)
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே.

**(61)**

1. என் இரட்சகா! என் தேவனே!
உம்மைச் சேர்ந்த நாள் இன்பமே!
அந்நாளில் பெற்ற ஈவையே
எங்கும் நான் பறைசாற்றுவேன்.

*இன்ப நாள்! இன்ப நாள்!*
*இயேசு என் பாவம் தீர்த்த நாள்!*
*காத்து, ஜெபிக்கக் கற்பித்தார்;*
*என்றும் மகிழ்ந்திடச் செய்தார்;*
*இன்ப நாள்! இன்ப நாள்!*
*இயேசு என் பாவம் தீர்த்த நாள்.*

2. அர்ப்பணம் நான் செய்திடுவேன்,
அன்புள்ள என் ஆண்டவர்க்கே;
அவரண்டை இருக்கையில்
ஆனந்த கீதம் ஏறெடுப்பேன்.

3. கர்த்தரின் வல்ல செயலால்
கர்த்தரும் நானும் ஒன்றானோம்;
பின்சென்றிட அழைத்திட்டார்
கீழ்ப்படிந்தேன் ஆனந்தமாய்.

4. தத்தளிக்கும் என் மனமே,
கர்த்தரில் இளைப்பாறுவாய்;
ஆருயிர் தந்த மீட்பரை
ஓர்காலும் விட்டு நீங்கிடாய்.

5. ஆட்கொண்ட நாதா! எந்தனை
நாடோறும் தத்தம் செய்குவேன்!
மூச்சுள்ளவரை உம் பேரன்பை
நான் பணிந்து போற்றிடுவேன்.

1. O happy day, that fixed my choice
On Thee, my Savior and my God!
Well may this glowing heart rejoice,
And tell its raptures all abroad.

*Happy day, happy day,*
*When Jesus washed my sins away!*
*He taught me how to watch and pray,*
*And live rejoicing every day:*
*Happy day, happy day,*
*When Jesus washed my sins away!*

2. O happy bond, that seals my vows
To Him Who merits all my love!
Let cheerful anthems fill His house,
While to that sacred shrine I move.

3. It’s done: the great transaction’s done!
I am the Lord’s and He is mine;
He drew me and I followed on;
Charmed to confess the voice divine.

4. Now rest, my long-divided heart,
Fixed on this blissful center, rest;
Here have I found a nobler part;
Here heav’nly pleasures fill my breast.

5. High heav’n, that heard the solemn vow,
That vow renewed shall daily hear,

Till in life's latest hour I bow

And bless in death a bond so dear.

**(62)**

1. என் இரட்சகா, என் இயேசுவே
என்னை அழைத்த நல் மீட்பரே!
என் உள்ளத்தில் சந்தோஷத்தைத்
தந்தவர் உம்மை ஸ்தோத்திரிப்பேன்.

*பாக்கிய நாள், பாக்கிய நாள்*
*இயேசு என் பாவம் தீர்த்த நாள்*

2. தூரமாய் நானும் சென்றபோது
அன்பாய் என்னை அழைத்தீரே,
காலமெல்லாம் நான் உந்தன் ஒளியில்
என்றும் நிலைத்து வாழ்ந்து சுகிப்பேன்.

3. சத்தியம் ஜீவன் வழியும் நீரே,
கிருபை கூர்ந்து தெரிந்தீரே,
தேவனே, உம்மில் இணைந்து இருக்க
இன்றும் என்றும் அருள் செய்வீரே.

4. இருளினின்று ஒளியினிடமாய்
அழைத்த தேவனைப் போற்றுவேன்,
உந்தனின் புண்ணியம் யாவும் சொல்லி
சாட்சியாகப் பூவில் திகழ்வேன்.

5. எந்தன் கால்கள் தளரும்போது
தாங்கி என்னை மீட்டவர்,
உந்தனின் வாக்கு வெளிச்சம் தந்து,
காத்து என்றும் நடத்துவீரே.

**(63)**

1. தேவனின் ஈவே நான் பெற்றதெல்லாம்;
ஈந்தது கிருபை, நான் விசுவாசித்தேன்;
பெருமை பாராட்ட இடமேயில்லை;
கிருபையால் மீட்கப்பட்ட பாவியே.

*கிருபையால் மீட்கப்பட்ட பாவி!*
*கிருபையால் மீட்கப்பட்ட பாவி!*
*இது என் சாட்சி, தேவனுக்கு மாட்சி,*
*கிருபையால் மீட்கப்பட்ட பாவி!*

2. மதியீனன், என்னைப் பாவம் ஆண்டது,
பரனை விட்டென் கால்கள் தூர ஓடிற்று;
இயேசென்னைக் கண்டார், ஆ! ஆனந்தமே!
நான் கிருபையால் மீட்கப்பட்ட பாவி!

3. என் தகுதியோ, கண்ணீரோ இல்லை,
இரக்கமே சாகாமல் எனை மீட்டது;
பாவ பயம் என்னைச் சூழ்ந்துகொண்டது;
கிருபையால் மீட்கப்பட்ட பாவி!

4. பொங்கி வழிகின்றதென் இதயம்,
என் இரட்சகரை நான் நேசிப்பதால்;
எங்கும் அவரைக் கூறி அறிவிப்பேன்,
நான் கிருபையால் மீட்கப்பட்ட பாவியே!

1. Naught have I gotten but what I received;
Grace hath bestowed it since I have believed;
Boasting excluded, pride I abase;
I'm only a sinner saved by grace!

*Only a sinner saved by grace!*
*Only a sinner saved by grace!*
*This is my story, to God be the glory,*
*I'm only a sinner saved by grace!*

2. Once I was foolish, and sin ruled my heart,
Causing my footsteps from God to depart;
Jesus hath found me, happy my case;
I now am a sinner saved by grace!

3. Tears unavailing, no merit had I;
Mercy had saved me, or else I must die;

Sin had alarmed me, fearing God's face;
But now I'm a sinner saved by grace!

4. Suffer a sinner whose heart overflows,
Loving his Savior to tell what he knows;
Once more to tell it, would I embrace—
I'm only a sinner saved by grace!

**(64)**

1. மீட்டார் தம் உதிரத்தால், பாவம் சாபம் நீக்கினார்;
மன்னித்தார் தம் தயவால், பெலவீனம் தாங்கினார்;
கழுவினார் தம் வார்த்தையால், ஜீவன் தந்து இரட்சித்தார்;
பூரணர் தம் சுபாவத்தால் தூய்மையாக மாற்றுவார்;
மாற்றுவார் என்னை மாற்றுவார் தம்மைப்போல் மாற்றுவார்;
மாறுவேன் நான் மாறுவேன் இயேசுவைப்போல் மாறுவேன்.

2. நம்போல் மாம்சம் இரத்தத்தில் தம்மை வெளியாக்கினார்;
நம்மேல் அன்புகூர்ந்ததால் தம்மைப் பலியாக்கினார்;
தம் ஆவி பொழிந்ததால் நம்மில் வாசம் செய்கிறார்;
நம்மில் பாய்ந்தோடுவதால் தம் சாயலாய் ஆக்குவார்;
ஆக்குவார் என்னை ஆக்குவார், தம்மைப்போல் ஆக்குவார்,
ஆகுவேன் நான் ஆகுவேன், இயேசுவைப்போல் ஆகுவேன்.

3. தேவ ரூபமானவர், அடிமை ரூபமானார்;
தேவனுக்கொப்பானவர் சிலுவைவரை தாழ்ந்தார்;
பிதாவின் வார்த்தையே பேசி, பிதாவின் மகிமைக்காய்,
பிதாவின் வேலை செய்தார், தேவ திட்டம் சேவித்தார்;
சேவித்தார் அவர் சேவித்தார் அடிமையாய் சேவித்தார்,
சேவிப்பேன் நான் சேவிப்பேன் இயேசுவைப்போல்சேவிப்பேன்.

4. இராஜாவாய் ஆண்டவராய், சரீரத்தின் தலையாய்,
பரிந்துரைப்பவராய், நியாயாதிபதியுமாய்,
தாவீதின் வேர் வம்சமாய், ஆதியும் அந்தமுமாய்,
செம்மறி மணாளனாய், இருப்போரைச் சாற்றுவேன்;
சாற்றுவேன் பறை சாற்றுவேன் உலகெங்கும் சாற்றுவேன்,
பாடுவேன் நான் பாடுவேன், இயேசு புகழ் பாடுவேன்.

**(65)**

வருவாய் தருணமிதுவே, அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசுவண்டை.

1. வாழ்நாளையெல்லாம் வீண்நாளாய்
வருத்தத்தோடே கழிப்பது ஏன்?
வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக்கொள்வார்.

2. கட்டின வீடும் நிலம் பொருளும்
கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடுவிட்டு உன் ஆவி போனால்
கூட உன்னோடு வருவதில்லை.

3. அழகும் மாயை நிலைத்திடாதே
அந்தஸ்தும் வீணே, மயங்கிடாதே
மரணம் ஓர்நாள் சந்திக்குமே
மறவாதே இயேசு ஆண்டவரை.

4. வானத்தின்கீழே பூமிமேலே
வானவர் இயேசு நாமம் அல்லால்
இரட்சிப்படைய வழியில்லையே
இரட்சகர் இயேசு வழி அவரே.

5. தீராத பாவம் வியாதியையும்
மாறாத உந்தன் பெலவீனமும்
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார்
காயங்களால் நீ குணமடைய.

6. சத்திய வாக்கை நம்பியே வா
நித்திய ஜீவன் உனக்களிப்பார்,
உன் பேரை ஜீவ புத்தகத்தில்
உண்மையாய் இன்றே எழுதிடுவார்.

## C-4 கிறிஸ்து நம் அடைக்கலமும், பலமும் (66)

1. இரட்சகா, மேய்ப்பன்போல் முன்சென்றும்,
   பாதுகாத்தும் வருவீர்;
   பசும்புல் மேய்ச்சலில் என்றும்
   பசி தாகம் தீர்ப்பீர்.
   இன்ப இயேசு, இன்ப இயேசு,
   எம்மை வாங்கினீர் விலையாய்
   இன்ப இயேசு, இன்ப இயேசு,
   நாங்கள் உம் சொந்தமானோம்.

2. உம் சொந்தம் எம் பாதை காரும்,
   பாதுகாப்பும் தாரும்;
   எம் பாதை மாறுங்கால் நீரும்
   நேர் வழியில் சேரும்.
   இன்ப இயேசு, இன்ப இயேசு,
   எம் ஜெபத்தைக் கேட்பீரே;
   இன்ப இயேசு, இன்ப இயேசு,
   எம் ஜெபத்தைக் கேட்பீரே.

3. ஆவலாய் உம்மைத் தேடுவோம்,
   உந்தன் சித்தமே செய்வோம்;
   இயேசுவே, அன்பால் நிரப்பும்,
   உம்மை என்றும் சேவிப்போம்.
   இன்ப இயேசு, இன்ப இயேசு,
   எம்மை நீர் நேசித்தீரே;
   இன்ப இயேசு, இன்ப இயேசு,
   இன்னும் நேசிக்கின்றீரே.

1. Savior, like a shepherd lead us,
   Much we need Thy tender care;
   In Thy pleasant pastures feed us,
   For our use Thy folds prepare.
   Blessèd Jesus, blessèd Jesus!

Thou hast bought us, Thine we are.
Blessèd Jesus, blessèd Jesus!
Thou hast bought us, Thine we are.

2. We are Thine, Thou dost befriend us,
Be the guardian of our way;
Keep Thy flock, from sin defend us,
Seek us when we go astray.
Blessèd Jesus, blessèd Jesus!
Hear, O hear us when we pray.
Blessèd Jesus, blessèd Jesus!
Hear, O hear us when we pray.

3. Early let us seek Thy favor,
Early let us do Thy will;
Blessèd Lord and only Savior,
With Thy love our bosoms fill.
Blessèd Jesus, blessèd Jesus!
Thou hast loved us, love us still.
Blessèd Jesus, blessèd Jesus!
Thou hast loved us, love us still.

**(67)**

1. உன்னதமானவரின் உயர் மறைவில் இருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே.

*அவர் செட்டையின்கீழ் அடைக்கலம் புகவே*
*தம் சிறகுகளால் மூடுவார்.*

2. தேவன் என் அடைக்கலமே, என் கோட்டையும், அரணுமவர்,
அவர் சத்தியம் பரிசயம் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே.

3. இரவின் பயங்கரத்திற்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,
இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும்,
நான் பயப்படவே மாட்டேன்.

4. ஆயிரம் பதினாயிரம் பேர்கள் என் பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் என்னை அணுகிடாதே,
என் தேவன் என் தாபரமே.

5. தேவன் என் அடைக்கலமே, ஒரு பொல்லாப்பும் என்னைச் சேருமோ?
ஒரு வாதையும் என் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார்.

6. என் வழிகளிலெல்லாம் என்னைத் தூதர்கள் காத்திடுவார்
என் பாதம் கல்லில் இடறாதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார்.

7. சிங்கத்தின்மேலும் நடந்து, வலுசர்ப்பத்தையும் மிதிப்பேன்
அவர் நாமத்தை நான் முற்றும் நம்பினதால்
என்னை விடுவித்துக் காத்திடுவார்.

8. ஆபத்திலும் அவரை நான் நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே, முற்றும் இரட்சித்தாரே
என் ஆத்தும நேசரவர்.

**(68)**

1. எப்போதும் நீர் வேண்டும், கிருபையின் கர்த்தரே
உம் அன்பின் சத்தத்தால் என் ஏக்கம் நீக்கிடும்.

*எந்நாளும் நீரே வேண்டும், இந்த நாளும் வேண்டும்*
*உம்மிடம் வருகின்றேன், ஆசீர் தாரும்.*

2. எப்போதும் நீர் வேண்டும், என்னோடு தங்கிடும்.
தீயோனின் சோதனை உம்மால்தான் மாய்ந்திடும்.

3. எப்போதும் நீர் வேண்டும் இன்பத்தில் துன்பத்தில்
அன்பாகத் தங்குவீர் இல்லையேல் வாழ்க்கை வீண்.

4. எப்போதும் நீர் வேண்டும் உம் சித்தம் போதியும்.
உம் வாக்குத்தத்தங்கள் என்னில் நிறைவேற்றும்.

*5.* எப்போதும் நீர் வேண்டும், மா பரிசுத்தரே!
ஓ! நேச கர்த்தரே என்னை உமதாக்கும்.

1. I need Thee every hour, most gracious Lord;
No tender voice like Thine can peace afford.

*I need Thee, O I need Thee; Every hour I need Thee;*
*O bless me now, my Savior, I come to Thee.*

2. I need Thee every hour, stay Thou nearby;
Temptations lose their power when Thou art nigh.

3. I need Thee every hour, in joy or pain;
Come quickly and abide, or life is in vain.

4. I need Thee every hour; teach me Thy will;
And Thy rich promises in me fulfill.

5. I need Thee every hour, most Holy One;
O make me Thine indeed, Thou blessed Son.

**(69)**

*1.* என் முன்னே மேய்ப்பர் போகிறார்,
நல் மேய்ப்பராகக் காக்கிறார்;
ஓர்காலும் என்னைக் கைவிடார்,
நேர் பாதைக் காட்டிப் போகிறார்.

*முன்செல்கிறார்! முன்செல்கிறார்:*
*என்முன்னே சென்று போகிறார்:*
*நல்மேய்ப்பர் சத்தம் அறிவேன்*
*அன்போடு பின்சென்றேகுவேன்.*

*2.* கார்மேகம் வந்து மூடினும்,
சீர்ஜோதி தோன்றி வீசினும்,
என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்;
என்றைக்கும் முன்னே போகிறார்.

3. மெய் பாதை காட்ட, பின்செல்வேன்,
தெய்வீகக் கையால் தாங்குமேன்;
எவ்விக்கினம் வந்தாலும் நீர்,
இவ்வேழை முன்னே போகிறீர்.

4. ஒப்பற்ற உம் காருண்யத்தால்,
இப்பூமி பாடு தீருங்கால்,
நீர் சாவை வெல்லச் செய்குவீர்,
பேரின்பம் காட்டி முன்செல்வீர்.

1. He leadeth me! O blessed thought,
O words with heav'nly comfort fraught;
Whate'er I do, where'er I be,
Still 'tis Christ's hand that leadeth me.

*He leadeth me! He leadeth me!*
*By His own hand He leadeth me;*
*His faithful follower I would be,*
*For by His hand He leadeth me.*

2. Sometimes 'mid scenes of deepest gloom,
Sometimes where Eden's bowers bloom,
By waters still, o'er troubled sea,
Still 'tis His hand that leadeth me.

3. Lord, I would clasp Thy hand in mine,
Nor ever murmur or repine;
Content, whatever lot I see,
Since it is Thou that leadest me.

4. And when my task on earth is done,
When, by Thy grace, the vict'ry's won,
E'en death's cold wave I will not flee,
Since Thou in triumph leadest me.

**(70)**

கன்மலைமீதென் கால்கள் நிறுத்தி
அடிகள் உறுதிப்படுத்தும் எங்கள் தேவா, இயேசு தேவா
கன்மலையானவர் கோட்டை துருகமானவர்
எனக்கொத்தாசை வரும் பர்வதமாகி பாதுகாப்பவர்.

1. உத்தமமான வழியில் என்னை நித்தமும் நடத்தினீர்,
விடாய்த்துப்போன ஆத்துமாவை ஆற்றித்தேற்றினீர்;
உலர்ந்துபோன எலும்பை உயிர்கொடுத்து எழுப்பினீர்,
வற்றாத நீரூற்றைப்போல வளமாக்கினீர்.

2. கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேனே,
அவர் என்னிடமாகச் சாய்ந்து எந்தன் கூக்குரல் கேட்டார்;
குழியில் விழுந்து அழிந்திடாமல் வலக்கரம் பிடித்தார்
அவர் துதியைப் பாடும் பாடல் எந்தன் வாயினில் கொடுத்தார்.

3. வறட்சியான காலம் என்னைத் திருப்தியாக்கினீர்,
நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போல செழிப்பாக்கினீர்:
உருக்கமான இரக்கங்களால் முடிசூட்டினீர்
மனக்கலக்கம் மாற்றி உமக்குள் புதுசிருஷ்டியாக்கினீர்.

**(71)**

1. பாதை காட்டும் மா யெஹோவா
பரதேசியான நான்
பலவீனன், அறிவீனன்
இவ்வுலோகம் காடுதான்
வானாகாரம்
தந்து என்னைப் போஷியும்.

2. ஜீவத் தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்;
தீப மேகத் தூண்கள் காட்டும்
வழியில் நடத்துமேன்;
வல்ல மீட்பா!
என்னைத் தாங்கும் இயேசுவே.

3. சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்
சாவின்மேலும் வெற்றி தந்து
என்னைச் சேர்ப்பீர் உம்மோடு
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்.

1. Guide me, O thou great Jehovah,
pilgrim though this barren land;
I am weak, but thou art mighty;
hold me with thy powerful hand;
Bread of heaven, Bread of heaven,
feed me till I want no more,
feed me till I want no more.

2. Open now the crystal fountain,
whence the healing stream doth flow;
let the fire and cloudy pillar
lead me all my journey through;
strong Deliverer, strong Deliverer.
be thou still my Strength and Shield,
be thou still my Strength and Shield.

3. When I tread the verge of Jordan,
bid my anxious fears subside;
bear me through the swelling current,
land me safe on Canaan's side;
songs of praises, songs of praises,
I will ever give to thee,
I will ever give to thee.

## C-5 கிறிஸ்துவின்மேல் விசுவாசமும், நம்பிக்கையும் (72)

1. ஆண்டவரே, உம்மையே சார்ந்துள்ளேன்,
அடைக்கலப் பாறைமேல் சாய்ந்துள்ளேன்,
அரணான கோட்டையை நம்பியுள்ளேன்,
அணைத்து என்னைக் காத்திடுவீர்.

*நீரே எந்தன் ஆண்டவர் என்பேன்!*
*நீரேயல்லால் செல்வம் வேறில்லை!*
*நீரே என் பங்கு, சுதந்தரம்!*
*நீரே என் பங்கைக் காக்கிறவர்!*

2. இனிதான நிலங்கள் என் பங்கு,
வளமான சொத்துக்கள் என் சொந்தம்,
பங்கும், சொத்தும், சுதந்தரமும் நீரே,
மங்காத செல்வம் எல்லாம் நீரே.

3. ஆலோசனை ஆண்டவர் அருள்கிறார்,
அகத்தினுள் அறிவை உணர்த்துவார்,
அவர் குரல் இராக்காலமும் தொனிக்கும்,
ஆராதிப்பேன், அமர்ந்திருப்பேன்.

4. ஆண்டவரை என்முன்னே வைத்துள்ளேன்,
அவர் எந்தன் வலப்பக்கம் உள்ளார்,
ஆகவே நான் கலங்கேன், அசைவுறேன்,
ஆனந்தத்தால் நெஞ்சம் பூரிக்கும்.

5. என் ஆன்மாவைப் பாதாளத்தில் விடீர்,
உம் சுத்தனை அழிவைக் காணவொட்டீர்,
என் உடலும் உம் பாதுகாப்பில் தங்கும்,
நான் களிகூர்ந்து கெம்பீரிப்பேன்.

6. ஜீவ வழி எனக்குத் தெரிவித்தீர்,
உம் சமுகம் பூரண ஆனந்தமே,
உம் வலது பக்கத்தில் என்றென்றுமாய்
உண்டு நித்திய பேரின்பமே.

**(73)**

1. என் நீதி இயேசு கிறிஸ்துவே,
   வேறொன்றையும் நான் நம்பிடேன்;
   என்னில் நம்பிக்கை கொண்டிடேன்,
   இயேசுவை முற்றும் சார்ந்துள்ளேன்.

   *நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்,*
   *வேறஸ்திபாரம் மணல்தான்,*
   *வேறஸ்திபாரம் மணல்தான்.*

2. கார்மேகம் அவர் முகத்தை
   மறைப்பினும், மாறிடாத
   அவர் கிருபை என் தஞ்சம்,
   என் அசையாத நங்கூரம்.

3. பெருவெள்ளம் பொங்கிடினும்,
   என் ஆத்மா சோர்ந்துபோயினும்,
   அவர் வாக்கு, அவர் இரத்தம்
   என் ஆறுதல், என் நம்பிக்கை.

4. அவர் மீண்டும் வருகையில்
   அவரில் இருப்பேனாக;
   என் நீதியாம் அவருக்குள்
   மாசின்றி நான் நிற்பேனாக.

1. My hope is built on nothing less
   Than Jesus Christ, my righteousness;
   I dare not trust the sweetest frame,
   But wholly lean on Jesus' name.

   *On Christ, the solid Rock, I stand;*
   *All other ground is sinking sand,*
   *All other ground is sinking sand.*

2. When darkness veils His lovely face,
   I rest on His unchanging grace;

In every high and stormy gale,
My anchor holds within the veil.

3. His oath, His covenant, His blood,
Support me in the whelming flood;
When all around my soul gives way,
He then is all my hope and stay.

4. When He shall come with trumpet sound,
Oh, may I then in Him be found;
In Him, my righteousness, alone,
Faultless to stand before the throne.

**(74)**

1. கர்த்தரின் கை குறுகவில்லை,
கர்த்தரின் வாக்கு மாறிடாதே,
சுத்தர்களாய் மாறிடவே,
சுதன் அருள் புரிந்தனரே.

*விசுவாசியே நீ பதறாதே!*
*விசுவாசியே நீ கலங்காதே!*
*விசுவாசத்தால் நீதிமான்*
*இன்றும் என்றும் பிழைப்பான்.*

2. பரிசுத்த ஆவியானவரே
பரிசுத்த பாதையில் நடத்திடுவார்;
கிருபையில் நாம் வளர்ந்திடுவோம்,
வரங்களை நாடிடுவோம்.

3. திருச்சபையே கிரியை செய்வாய்,
திவ்ய அன்பில் பெருகிடுவாய்;
தலைமுறையாய் தலைமுறையாய்
தழைத்திட அருள் புரிவார்.

4. நெஞ்சமே நீ அஞ்சிடாதே!
தஞ்சம் இயேசு உன் அரணே;

தம் ஜனத்தைச் சீக்கிரமாய்த்
தம்முடன் சேர்த்துக்கொள்வார்.

5. மேகம்போன்ற வாக்குத்தத்தம்
சூழ நின்றே காத்திருக்க,
விசுவாசத்தால் உரிமைகொள்வாய்
விரைந்து முன் ஏகிடுவாய்.

**(75)**

1. கர்த்தரோடு நாமும்
நித்தமும் நடந்தால்
எத்தனை மகிமை அருள்வார்;
நம்மில் வசிப்பாரே
அவர் சித்தம் செய்து
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால்.

*நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால்*
*இயேசுவில் மகிழ்ந்திட வேறு வழி இல்லை.*

2. நிழலோ மேகமோ
திகிலோ பயமோ
அவர்முன்னே அணுகிடாதே;
சந்தேகம் நீங்கிடும்
கண்ணீரொழிந்திடும்
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால்.

3. துக்கம் பாரமும் நாம்
சகித்திடும் வேளை
ஈவாரே பலம் நம் வேலைக்கு
கண்ணீர் கவலையும்
திண்ணம் மாற்றிடுவார்
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால்.

4. பலிபீடத்தின்மேல்
படைத்திடும்வரை
அறிந்திடோம் நாம் அவரன்பை
கிருபை மகிழ்ச்சி

கிடைத்திடச் செய்வார்
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால்.

5. அவர் பாதத்திலே
அமர்ந்திருப்போமே,
அவரோடு வழி நடப்போம்;
சொல்வதையே செய்வோம்
பயமின்றிச் செல்வோம்
நம்பியே நாமும் கீழ்ப்படிந்தால்.

1. When we walk with the Lord
In the light of His Word,
What a glory He sheds on our way;
While we do His good will,
He abides with us still,
And with all who will trust and obey.

*Trust and obey,*
*For there's no other way*
*To be happy in Jesus,*
*But to trust and obey.*

2. Not a shadow can rise,
Not a cloud in the skies,
But His smile quickly drives it away;
Not a doubt or a fear,
Not a sigh or a tear,
Can abide while we trust and obey.

3. Not a burden we bear,
Not a sorrow we share,
But our toil He doth richly repay;
Not a grief or a loss,

Not a frown or a cross,
But is blest if we trust and obey.

4. But we never can prove
The delights of His love,
Until all on the altar we lay;
For the favor He shows,
And the joy He bestows,
Are for them who will trust and obey.

5. Then in fellowship sweet
We will sit at His feet,
Or we'll walk by His side in the way;
What He says we will do;
Where He sends, we will go,
Never fear, only trust and obey.

**(76)**

கிருபையிதே, தேவ கிருபையிதே,
தாங்கி நடத்தியதே;
இயேசுவிலே பொன் நேசரிலே,
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே,
ஜீவியப் பாதையிலே-இயேசு பரன்
அனுதினமும் வழிநடந்தே
அவரது நாமத்தில் காத்தனரே

2. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும், வேதனையும்-வைத்தியராய்
இயேசுவல்லால் சார்ந்திடவோ
இகமதில் வேறெமக்காருமில்லை.

3. அன்பின் அகலமும் நீளம் உயரமும்
ஆழமும் அறிந்துணர அனுக்கிரகித்தார்;

கிறிஸ்துவிலே ஒரு வீடாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதனாய்.

4. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் பற்றிடவே,
விசுவாசத்தில் நிலைத்திடுவோம்,
அசையாது அழைப்பினைக் காத்துக்கொள்வோம்.

**(77)**

சீயோனிலே என் திட அஸ்திபாரம் கிறிஸ்துவே, அவர்
நான் என்றும் நம்பும் கன்மலை.

1. கலங்கிடுவேனோ? பதறிடுவேனோ?
கர்த்தரில் விசுவாசம் இருக்கையிலே;
அசையா என் நம்பிக்கை நங்கூரமே!
இயேசுவில் மாத்திரமே.

2. புயல் அடித்தாலும், அலை மோதினாலும்,
எவர் எனக்கெதிராய் எழும்பினாலும்,
எனக்கு எட்டாத உயரத்திலே
எடுத்தவர் நிறுத்திடுவார்.

3. வியாதியினாலே காயம் வருந்தி,
வாடியே மரண நிழல் சூழினும்,
விசுவாசத்தின் கரத்தால் அவர்
வாக்கை நான் பற்றிடுவேன்.

4. மா பரிசுத்த விசுவாசத்தாலே
மா பரிசுத்த ஸ்தலம் ஏகிடவே,
திரைவழியாம் தம் சரீரத்தினால்
திறந்தாரே தூய வழி.

5. நான் விசுவாசிப்போர் இன்னார் என்றறிவேன்,
என்னையே படைத்திட்டேன் அவர் கரத்தில்;
முடிவுவரை என்னை நடத்திடுவார்,
முற்றுமாய் இரட்சிப்பாரே.

**(78)**

1. மேன்மேலும் அருகில்,
இன்னும் அருமையாய்,
மெய்யாய் எனக்குள்ளார்
என்னில் வாழும் கிறிஸ்து;
அன்பால் இரட்சிக்கின்றார்,
ஆற்றித் தேற்றுகின்றார்,
ஆண்டவர் இயேசுவே! எனக்கெல்லாம்.

2. நம்ப ஏதும் இல்லை,
பற்ற பெலன் இல்லை;
"நம்பு என்னை, காண்பாய்,
நான் போதும், எப்போதும்;
விசுவாசி போதும்;
அச்சம், ஐயம் போகும்,"
என்றழைக்கும் அன்பர் சத்தம் கேட்டேன்.

1. Nearer each day to me,
Dearer each day to me,
This Person inside me is
Becoming reality.
Saving me, loving me,
Faith and hope giving me.
You're all the world to me Jesus, my Lord.

2. Even when faith is small,
When there's no hope at all,
I hear Him say to me,
Trust in Me and you'll see,
That I'll supply all your needs,
If only you will believe.
All anxious doubts will cease,
While trusting in Me.

**(79)**

விசுவாசி ஒருபோதும் பதறான், *(2)*
நிலை நங்கூரம் இயேசுவில் நிற்பான்,
அலைமோதக் கண்டென்றும் அஞ்சான்,
அசையாத நம்பிக்கை கொள்வான்,
இயேசுவை நோக்கி, முன்செல்வான்.

1. ஆபிரகாம் விசுவாசித்தான்,
ஒன்றான மகனையே பலியாய்த் தந்தான்,
'இறந்தாலும் நீர் உயிர்ப்பிப்பீரே!
இல்லாததை அழைப்பீர், உண்டாகுமே!'

2. பழைய இனம் அறையுண்டதே,
பாவம் இனி உன்னை மேற்கொள்ளாதே,
விசுவாசித்தால் மகிமை காண்பாய்,
பரன் ஆவி நடத்தி மெய்யாக்குவார்.

3. போராட்டங்கள் எப்பக்கமும்,
அன்புகூர்ந்தார்! முற்றும் வெற்றி எங்கும்!
விசுவாசத்தால் வாழ்வடைவேன்,
நம்பும் என் தேவனை நான் அறிவேன்.

## C-6 கிறிஸ்துவில் பூரண திருப்தி

**(80)**

அநாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே.

*இந்த தேவன் என்றென்றுமுள்ள*
*சதாகாலமும் நமது தேவன்*
*மரணபரியந்தம் நம்மை நடத்திடுவார்.*

1. காருண்யத்தாலே இழுத்துக்கொண்டார்
தூய தேவ அன்பே;
இவ்வனாந்திரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார்.

2. கானகப் பாதை காரிருளில்
தூய தேவ ஒளியே;
அழுகை நிறைந்த பள்ளத்தாக்குகளை
அரும் நீரூற்றாய் மாற்றினாரே.

3. கிருபை கூர்ந்து மனதுருகும்
தூய தேவ அன்பே;
உன் சமாதானத்தின் உடன்படிக்கைகளை
உண்மையாய்க் கர்த்தர் காத்துக்கொள்வார்.

4. இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால்;
கடும் கானகத்தில் கர்த்தர் மார்பினிலே
கிடைக்கும் இளைப்பாறுதலே.

5. வறண்ட வாழ்க்கை செழித்திடுமே
தூய தேவ அருளால்;
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம்.

6. ஆனந்தம் பாடி திரும்பியே வா
தூய தேவ பலத்தால்;
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சந்ததம் மகிழ்ச்சி அடைவாய்.

**(81)**

1. கண்டுகொண்டேன் நண்பர் இயேசு, எனக்கெல்லாம் அவர்!
ஆயிரங்களில் அழகுசிறந்தோர்;
அவர் பள்ளத்தாக்கின் லீலி, ஒன்றான இரட்சகர்
என்னைக் கழுவிச் செம்மையாக்குபவர்;
என் ஆறுதல் துக்கத்தில், என் இன்பம் துன்பத்தில்
என் கவலைகளெல்லாம் தாங்குவார்.

*அவர் பள்ளத்தாக்கின் லீலி, காலை விடிவெள்ளி*
*ஆயிரங்களில் அழகுசிறந்தோர்!*

2. சஞ்சலங்கள், வருத்தங்கள் சுமந்து தீர்த்தாரே
சோதனையில் காக்கும் வல்ல துருகம்;

நெஞ்சின் சிலைகள் தகர்த்தேன், யாவையும் வெறுத்தேன்
நேசர் வல்லமையால் என்னைக் காக்கிறார்.
உலகம் வெறுத்தாலும், சாத்தான் சோதித்தாலும்
இயேசு நிச்சயம் சேர்ப்பார் தம் இலக்கு.

3. வாழ்வோம் விசுவாசத்தால், செய்வோம் அவர் சித்தம்
நம்மைக் கைவிடவோ, தள்ளவோ மாட்டார்.
தழல் சுவராகச் சூழ்வார், ஒன்றிற்கும் அஞ்சேனே
தாமே மன்னாவாய் எம் பசி தீர்ப்பாரே.
ஜீவ நதிகள் பாயும் மகிமைக்குள் செல்வேன்
நேசர் முகம் அங்கு தரிசிப்பேன்.

1. I have found a friend in Jesus, He's everything to me,
He's the fairest of ten thousand to my soul;
The Lily of the Valley, in Him alone I see
All I need to cleanse and make me fully whole.
In sorrow He's my comfort, in trouble He's my stay;
He tells me every care on Him to roll.

*He's the Lily of the Valley, the Bright and Morning Star,*
*He's the fairest of ten thousand to my soul.*

2. He all my grief has taken, and all my sorrows borne;
In temptation He's my strong and mighty tow'r;
I have all for Him forsaken, and all my idols torn
From my heart and now He keeps me by His pow'r.
Though all the world forsake me, and Satan tempt me sore,
Through Jesus I shall safely reach the goal.

3. He will never, never leave me, nor yet forsake me here,
While I live by faith and do His blessed will;
A wall of fire about me, I've nothing now to fear,
From His manna He my hungry soul shall fill.

Then sweeping up to glory to see His blessed face,
Where rivers of delight shall ever roll.

**(82)**

ஆண்டவர் எனது நல்லாயன்,
ஆகவே எனக்கொரு குறையுமிராது,
நீண்ட பசும்புல் தரை சேர்ப்பார்-குளிர்
நீர்நிலைக் கெனை அவர் நடத்திச்செல்வார்.

1. ஆன்ம வாழ்வுக்குயிர் தந்திடுவார்,
அறநெறி தனிலே ஒளிரச் செய்வார்,
நானிருள் சூழும் பள்ளத்தாக்கில்
நடக்க நேர்ந்தாலும் பயமே இல்லை,
ஏனெனில் என்னுடன் நீர் இருக்கின்றீர்,
எனை நின் கோலும் கழியும் தேற்றும்.

2. என் பகையாளர் முன் எனக்காக
இனிய நல் விருந்தை ஒழுங்கு செய்தீர்,
என் தலைமீது எண்ணெய் பூசி,
எனை அபிஷேகம் செய்தே வைத்தீர்,
என்னே எனது பாத்திரம் நிரம்பி,
எத்துணை இன்பம் வழியுது பொங்கி.

3. என் புவி வாழ்வின் ஒவ்வொரு நாளும்
எனைப் பின்தொடரும் உம் பேரன்பு
என்றும் ஆண்டவர் வீட்டினில் உறைவேன்.

**(83)**

1. இயேசுவின் தேவ பிரசன்னம்
நெஞ்சை நிரப்பும் இன்பம்
தூயர், சத்யர், இனியவர்
அன்பர் இயேசு என்னவர்.

*எந்தன் ஆத்ம நேசர் இயேசு!*
*ஜீவனிலும் அருமை!*
*ஆயிரம் பத்தாயிரத்தில்*
*நேசர் அழகானவர்!*

2. கிறிஸ்துவின் அன்பு தாராளம்,
தேவ கிருபை ஏராளம்!
அருள், வானிலும் உயர்வு,
ஆழ்கடலினும் ஆழம்.

3. மானிட புத்திக்கெட்டாத
என்னே அற்புத மீட்பு!
இரத்தச் சிவப்பான பாவம்
வெண்பனிபோல் ஆகுதே!

4. தேவை யாவும் பூர்த்திசெய்தார்,
நன்மை யாவும் நல்கினார்,
தெய்வ பலம் தந்து தாங்கும்
எனக்கெல்லாம் அவரே.

5. மகிமையில் மறுமையில்
மீட்கப்பட்டவரோடு,
இயேசு ராஜனை நித்யமாய்
போற்றிப் புகழ்ந்திடுவேன்.

1. Who can cheer the heart like Jesus,
By His presence all divine?
True and tender, pure and precious,
O how blest to call Him mine!

*All that thrills my soul is Jesus;*
*He is more than life to me;*
*And the fairest of ten thousand,*
*In my blessed Lord I see.*

2. Love of Christ so freely given.
Grace of God beyond degree,
Mercy higher than the heaven,
Deeper than the deepest sea.

3. What a wonderful redemption!
Never can a mortal know
How my sin, tho' red like crimson,
Can be whiter than the snow.

4. Every need His hand supplying,
Every good in Him I see;
On His strength divine relying,
He is all in all to me.

5. By the crystal flowing river
With the ransomed I will sing,
And forever and forever
Praise and glorify the King.

**(84)**

எங்கள் ஆத்மாவின் போஜனமே
உமக்காராதனை ஸ்தோத்திரம்.

1. துங்க வானோர்களே எங்கும் புகழ்ந்திடும்
தூய நல் போஜனமே-அருள்
பொங்கிட எங்களைப் புங்கவர் சேர்த்திட
இங்கு வந்தாய் எழுந்து.

2. தாய் தன் பிள்ளை பசி தாங்கிட தன் சதை
தந்திடல் எங்கும் உண்டோ-அருள்
நீயோ அன்பேக்கத்தால் நின் உடலைத் தந்தாய்
நீசர்க்குப் போஜனமாய்.

3. நன்மைப் பிரவாகமாய் உன் அருள் பெய்திடும்
உன்னத பேரமுதே-உந்தன்
பொன்மலர்ப் பாதத்தில் என் வினை தீர்ந்திட
போற்றி அமர்ந்திடுவேன்.

4. போஜனம் நீர், போஜனம் ஈபவரும் நீர்,
போதுமானவரும் நீர்-எங்கள்

தேவனே! உம் மகிமை அருள் செல்வத்தால்
நாளும் நிறைவடைவோம்.

5. சிங்காரத் தோப்பிலே ஜீவியமே தரச்
செழித்தோங்கும் தருவே-உந்தன்
ஜீவ கனி எங்கள் பாவநோய் தீர்த்துவான்
வாழ்வை எமக்களிக்கும்.

**(85)**

1. எந்தன் ஆத்ம நேசரே,
சார்வேன் உந்தன் மார்பிலே,
கொந்தளிக்கும் அலைகள்
பொங்கிவரும் வேளையில்
மறைப்பீர் உம் ஒதுக்கில்,
வாழ்வின் கொடும் புயல்
சீறி அழிக்காமலே
சேரும் ஆத்மா உம்மில்.

2. அடைக்கலம் வேறில்லை
அடைந்தேன் நீர்தான் தஞ்சம்
விடாதீர் தனியாக
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்
நீரே எந்தன் நம்பிக்கை
நீர் சகாயம் செய்குவீர்
வாடும் எந்தன் சிரசை
மூடுவீர் உம் செட்டையால்.

3. வற்றாக் கிருபைக் கடலே!
முற்றாய் என்னைக் கழுவும்,
ஜீவ நதி பாய்ந்தென்னில்
சுத்தம் செய்து காக்கட்டும்,
ஜீவ ஊற்றின் தோற்றமே!
எந்தன் தாகம் தீருமேன்
நித்திய காலமாய் என்னில்
உந்தன் அருள் பொங்கட்டும்.

4. நீரே என் ஒரே தேவை
குறை நீக்கும் பூரணர்
வீழ்ந்தேன், தாழ்ந்தேன் கைதூக்கும்,
சுகவீனன், குருடன்
நீதிபரர், தூயர் நீர்
நான் அநீதி கேடுள்ளோன்
அசுத்தப் பாவி நான்
நீரோ சத்யம் கிருபை.

1. Jesus, lover of my soul,
Let me to Thy bosom fly,
While the nearer waters roll,
While the tempest still is high.
Hide me, O my Savior, hide,
Till the storm of life is past;
Safe into the haven guide;
Oh, receive my soul at last.

2. Other refuge have I none,
Hangs my helpless soul on Thee;
Leave, ah! leave me not alone,
Still support and comfort me.
All my trust on Thee is stayed,
All my help from Thee I bring;
Cover my defenseless head
With the shadow of Thy wing.

3. Thou, O Christ, art all I want,
More than all in Thee I find;
Raise the fallen, cheer the faint,
Heal the sick, and lead the blind.
Just and holy is Thy Name,

Source of all true righteousness;
Thou art evermore the same,
Thou art full of truth and grace.

4. Plenteous grace with Thee is found,
Grace to cover all my sin;
Let the healing streams abound;
Make and keep me pure within.
Thou of life the fountain art,
Freely let me take of Thee;
Spring Thou up within my heart;
Rise to all eternity.

**(86)**

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்
கென்ன குறையுண்டு நீ சொல் மனமே.

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுலகுயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்,
மித்திரனே சுகபத்திரமருளும்.

2. பாவமோ, மரணமோ, நரகமோ, பேயோ
பயந்து நடுங்கிட ஜெயம் சிறந்தோர்;
சாபமே தீர்த்தோர் சற்குணநாதன்,
சஞ்சலமினியேன்? நெஞ்சமே மகிழ்வாய்.

3. ஆசி செய்திடுவார், அருள் மிக அளிப்பார்,
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்,
மோட்ச வழி சத்யம் வாசல் உயிரெனும்.

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,
கடைசி மட்டும் கைவிடாதிருப்பார்;
பாவ மன்னிப்பளிப்பார், பாக்கியம் கொடுப்பார்,
பரம பதவியினுள் என்றனை எடுப்பார்.

5. போனது போகட்டும், புவி வசை பாடட்டும்,
பொல்லான் அம்புகள் எய்திடட்டும்;
ஆனது ஆகட்டும், அருள் மழை பெய்திடும்,
அன்பு மிகும் பேரின்பம் எனக்கருள்.

**(87)**

1. என்றும் வற்றா ஊற்று தேடி அலைந்தேன்,
ஆண்டு பல வீணாக;
உலகம் கொண்டு வந்ததெல்லாம் மாயையே,
உள்ளம் நிறைவாக்கவில்லை.

*என்றும் வற்றா ஊற்றிலே பருகுகின்றேன்,*
*ஜீவ ஊற்றிலே நான் பருகுகின்றேன்;*
*பெருகுகின்ற இன்பம்,*
*மகிழ்ச்சியும் காண்கின்றேன்,*
*ஜீவ ஊற்றிலே நான் பருகுகின்றேன்.*

2. பாவ பாலைவனத்தில் நான் அலைவதில்லை,
ஜீவ ஊற்று காண்கின்றேன்;
சந்தோஷப் பாத்திரம் பொங்கி வழியுதே,
இயேசுவே என் கர்த்தர், என் இராஜா.

3. நாளும் இங்கே இன் நிறைவு, இளைப்பாறுதல்,
தூய சமாதானமும் இங்கே;
ஆறுதலும் இங்கே, ஆசீர்வாதமும் இங்கே,
என்றும் காணுதே என் இதயம்.

4. முடிவில்லா யுகங்கள் ஓடும், என்றும் முடியா
நிரப்பீடு நிச்சயம் இங்கே;
சோர்ந்த ஆத்துமாவைத் தேற்றிக் களைப்பாற்ற
சுகமளிக்கும் ஊற்று வருவேன்.

1. Many weary years I vainly sought a spring,
One that never would run dry;
Unavailing all that earth to me could bring,
Nothing seemed to satisfy.

*Drinking at the Fountain that never runs dry,*
*Drinking at the Fountain of life am I;*
*Finding joy and pleasure*
*In abounding measure,*
*I am drinking at the Fountain of life.*

2. Through the desert land of sin I roam no more,
   For I find a living Spring
   And my cup of gladness now is running o'er,
   Jesus is my Lord and King.

3. Here is sweet contentment as the days go by,
   Here is holy peace and rest;
   Here is consolation as the moments fly,
   Here my heart is always blest.

4. Here I find a never ending, sure supply,
   While the endless ages roll;
   To this healing Fountain I would ever fly,
   There to bathe my weary soul.

**(88)**

காலை மாலையும் எவ்வேளையும் கர்த்தரைக்
கருத்துடன் பாடிடுவேன்.

*பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என தூதர்*
*பாடிடும் தொனி கேட்குதே.*

1. கர்த்தர் என் வெளிச்சம். ஜீவனின் பெலனும்
   கிருபையாய் இரட்சிப்புமானார்
   அஞ்சிடாமல், கலங்காமல், பயமின்றித் திகிலின்றி
   அனுதினம் வாழ்ந்திடுவேன்.

2. எனக்கெதிராய் ஓர் பாளயமிறங்கி
   என்மேல் ஓர் யுத்தம் வந்தாலும்

பயப்படேன்; எதிராளி நிமித்தமாய்ச் செவ்வையான
பாதையில் நடத்திடுவார்.

3. ஒன்றை நான் கேட்டேன். அதையே நாடுவேன்,
என்றும் உம் மகிமையைக் காண
ஜீவனுள்ள நாளெல்லாம் உம் ஆலயத்தில் தங்குவதை
வாஞ்சித்து நாடுவேன்.

4. தீங்கு நாளில் தம் கூடார மறைவில்
தேடிச் சேர்த்தென்னை மறைப்பார்;
உன்னதத்தில் மறைவாக ஒளித்தென்னைப் பாதுகாத்து
உயர்த்துவார் கன்மலைமேல்.

5. எந்தன் முகத்தைத் தேடுங்கள் என்று
என் கர்த்தர் சொன்னதினாலே
உம் முகத்தைத் தேடுவேனே, கூப்பிடும் என் சத்தம் கேட்டு
தயவாகப் பதிலளிப்பார்.

6. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்
கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்;
எந்தன் உள்ளம் ஸ்திரமாகத் திடமாகக் கர்த்தருக்கே
என்றென்றும் காத்திருக்கும்.

7. எனக்காக யாவும் செய்து முடிப்பார்
என் கர்த்தர் வாக்குமாறிடார்;
தமக்கென்றும் பயந்திடும் பக்தர் யாவர் விருப்பமும்
தவறாமல் நிறைவேற்றுவார்.

**(89)**

தேவ பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ!
சிறுமை தாழ்ச்சி அடைகிலேனே.

*ஆவலதாய் எனைப் பைம்புல்மேல்*
*அவர் மேய்த் தமர் நீர் நடத்துகின்றார்.*

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதியென்னும்

நேர்த்தியாம் பாதையில் அவர்நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார்.

2. சா நிழல் பள்ளத்திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே;
வானபரன் என்னோடிருப்பார்
வளைதடியும், கோலுமே தேற்றும்.

3. பகைவர்க்கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென்றேற்படுத்தி,
சுக தைலம் கொண்டென் தலையை
சுகமாய் அபிஷேகம் செய்குவார்.

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்;
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன்.

**(90)**

1. உம் குரல் கேட்டேன், உம் அன்பறிந்தேன்
ஆண்டவா, நான் உம் சொந்தம்;
இன்னும் அருகில் வர வாஞ்சித்தேன்
விசுவாசத்தால் வந்தேன்.

*இன்னும் அருகருகில் ஈர்த்துக்கொள்ளும், நீர் மாண்ட குருசண்டை,*
*இன்னும் அருகருகில் சேர்த்துக்கொள்ளும், இரத்தம் சிந்தின பக்கம்*

2. தெய்வ அருளின் வல்லமையினால்
உம் பணிக்கென்னைக் கொள்ளும்;
என் சித்தம் வேண்டாம், உம் சித்தம் செய்ய
உம்மை நோக்கிப் பார்க்கின்றேன்.

3. உம் அரியணைமுன் முழுங்காலில்
தங்கும் நேரம் என் இன்பம்;
நண்பன்போல் உம்மோடுறவாடி
உம் சந்நிதி பேரின்பம்.

4. அளக்கரிய உம்மன்பின் ஆழம்
அங்கு கண்டு களிப்பேன்;
விளக்கரிய அகலம், நீளம்
என்றென்றுமாய் அறிவேன்.

1. I am Thine, O Lord, I have heard Thy voice,
And it told Thy love to me;
But I long to rise in the arms of faith
And be closer drawn to Thee.

*Draw me nearer, nearer, nearer blessed Lord,*
*To the cross where Thou hast died.*
*Draw me nearer, nearer, nearer, blessed Lord,*
*To Thy precious, bleeding side.*

2. Consecrate me now to Thy service, Lord,
By the power of grace divine;
Let my soul look up with a steadfast hope,
And my will be lost in Thine.

3. O the pure delight of a single hour
That before Thy throne I spend,
When I kneel in prayer, and with Thee, my God,
I commune as friend with friend!

4. There are depths of love that I cannot know
Till I cross the narrow sea;
There are heights of joy that I may not reach
Till I rest in peace with Thee.

**(91)**

1. நான் கர்த்தருக்கே! என் உள்ளம் கொண்டாடும்,
நெஞ்சாரக் கேட்டேன் நேசரின் சத்தம்;

“அஞ்சாதே! நான் உன்னை மீட்டுக்கொண்டேன்;
எனக்கே,” என்றார் என் செவியில்.

2. நான் கர்த்தருக்கே! எங்கும் சாற்றுவேன்,
எண்ணி மகிழ்வேன் அந்த மணநாள்;
அன்பரை என்றென்றுமாய் ஏற்றுக்கொண்டேன்,
அன்பும், கனமும், பணிவும் தந்தேன்.

3. நான் கர்த்தருக்கே! இன்னும் இன்னும் தாரும்,
அன்பு, உத்தமம், தூய சேவையும்,
தங்கு தடையில்லா கீழ்ப்படிவு,
முற்றும் முடிவான அர்ப்பணிப்பு.

4. நான் கர்த்தருக்கே! ஆவி, ஆன்மா, உடல்
உம் சொந்தம் என்று முத்திரையிடும்:
நேசர் உம் பூரணர் உம் கிருபையால்
என்றென்றுமாக எனதாக்கினீர்.

1. I am the Lord’s! O joy beyond expression,
O sweet response to voice of love Divine;
Faith’s joyous “Yes” to the assuring whisper,
“Fear not! I have redeemed thee; thou art Mine.”

2. I am the Lord’s! It is the glad confession
Wherewith the Bride recalls the happy day,
When love’s “I will” accepted Him forever,
“The Lord’s,” to love, to honor and obey.

3. I am the Lord’s! Yet teach me all it meaneth,
All it involves of love and loyalty,
Of holy service, absolute surrender,
And unreserved obedience unto Thee.

4. I am the Lord’s! Yes; body, soul, and spirit,
O seal them irrecoverably Thine;

As Thou, Beloved, in Thy grace and fulness
Forever and forevermore art mine.

### C-7 பாடுகளில் ஆறுதல்

**(92)**

1. திருக்கரத்தால் தாங்கி என்னை
திருச் சித்தம் போல் நடத்திடுமே,
குயவன் கையில் களிமண் நான்
அனுதினமும் வனைந்திடுமே.

2. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே,
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழிநடத்தும்.

3. ஆழ்கடலில் அலைகளினால்
அசையும்போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு
சேர்ந்திடுவேன் அவர் சமுகம்.

4. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்பக் கானான் தேசமதை.

**(93)**

1. துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக்கழித்தாலும்
இன்பம் இகழ்ந்தேன் என்றெண்ணிச் சோர்ந்தாலும்
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.

*எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்*
*கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்*
*ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்*
*கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.*

2. கவலை சுமை நீ சுமக்கும்போது
சிலுவை உனக்குப் பளுவாகும்போது
எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.

3. நிலம் பொன்னுள்ளோரை நீ பார்க்கும்போது
நினை, கிறிஸ்துவின் ஐசுவரியம் உனக்குண்டு,
பணங்கொள்ளா பேராசீர்வாதத்தைப் பார்
பரலோகப் பொக்கிஷமும் வீடும் பார்.

4. அகோர துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும்
அதைரியப்படாதே கர்த்தர் உன் பக்கம்
அநேகமாய் நீ பெற்ற சிலாக்கியங்கள்
தூதர் உன்னைத் தேற்றுவார் பிரயாணத்தில்.

1. When upon life's billows you are tempest-tossed,
When you are discouraged, thinking all is lost,
Count your many blessings; name them one by one,
And it will surprise you what the Lord has done.

*Count your blessings; Name them one by one.*
*Count your blessings; See what God hath done.*
*Count your blessings; Name them one by one.*
*And it will surprise you What God hath done.*

2. Are you ever burdened with a load of care?
Does the cross seem heavy you are called to bear?
Count your many blessings; ev'ry doubt will fly,
And you will be singing as the days go by.

3. When you look at others with their lands and gold,
Think that Christ has promised you his wealth untold.
Count your many blessings; money cannot buy
Your reward in heaven nor your home on high.

4. So amid the conflict, whether great or small,
Do not be discouraged; God is over all.
Count your many blessings; angels will attend,
Help and comfort give you to your journey's end.

**(94)**

தேவ கிருபை என்றுமுள்ளதே,
அவர் கிருபை என்றுமுள்ளதே;
அவரைப் போற்றித் துதித்துப் பாடி,
அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்.

1. நெருக்கப்பட்டும் மடிந்திடாமல்
கர்த்தர்தாம் நம்மைக் காத்ததாலே,
அவர் நல்லவர், அவர் வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே.

2. சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில்
பக்தனாம் தாவீதின் தேவன் நமக்கு
முன்சென்றாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே.

3. அக்கினி சோதனை பட்சிக்க வந்தும்
முட்செடி தன்னில் தோன்றிய தேவன்
பாதுகாத்தாரே அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே.

4. காரிருள்போன்ற கஷ்டங்கள் வந்தும்
பாரினில் அவர் என் பாதையில் ஒளியாய்
என்னை நடத்தினார் அவர் நல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே.

5. வெள்ளம்போல் நிந்தை மேற்கொள்ள வந்தும்
வீரன் நெகேமியா ஆவியை அளித்து
திடநம்பிக்கை, தைரியம் ஈந்தாரே
அவர் கிருபை என்றுமுள்ளதே.

6. நித்திய தேவனாம் சத்திய பரன்தான்
நித்தமும் நம்முடன் இருப்பதாலே
அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளதே.

**(95)**

1. தொல்லை இடர்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும்,
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும்
இருளாய்த் தோன்றும் எங்கும்
சோதனை வரும் வேளையில்
சொல் கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும்
பரன் என்னைக் காக்க வல்லோர்.

*காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு*
*உண்டெனக்கு (2), காத்திடுவார் என்றுமே,*

2. ஐயம் இருந்ததோர் காலத்தில்
ஆவிக் குறைவால்தான்
மீட்பர் உதிர பலத்தால்
சத்துருவை வென்றேன்;
என் பயம் யாவும் நீங்கிற்றே
இயேசு கைதூக்கினார்
முற்றும் என்னுள்ளம் மாறிற்றே
இயேசென்னைக் காக்க வல்லோர்.

3. என்ன வந்தாலும் நம்புவேன்
என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின்செல்வேன்
எனது இயேசுவை;
அகல ஆழ உயரமாய்
எவ்வளவன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும்
அவர் என்னைக் கைவிடமாட்டார்.

**(96)**

1. பாரங்கள் கூடும், உம் கிருபையும் கூடும்!
பாடுகள் சேரும், உம் பெலனும் சேரும்!
சோர்வு பெருகும், உம் பரிவும் பெருகும்!
சோதனைகள் சூழும், உம் ஓய்வும் சூழும்!

*உம் அன்பின் எல்லையை, அருளின் அளவை*
*ஆற்றலின் வரம்பைக் கண்டவர் யார்?*
*இயேசுவில் முடிவில்லா உம் செல்வங்களை*
*ஈகின்றீர், ஈகின்றீர், மேலும் ஈகின்றீர்.*

2. நம் தாங்கும் திறன் தீர்ந்து வற்றிப்போகையில்,
நம் பெலன் பாதியில் இற்றுப்போகையில்,
பூவின் வளங்கள் எல்லாம் அற்றுப்போகையில்,
நம் தந்தை வழங்கத் தொடங்குகின்றார்!

3. தேவனின் வளங்கள் உன் தேவையை மிஞ்சும்,
அஞ்சாதே! ஈவதே தந்தையின் நெஞ்சம்!
சாய்ந்துகொள், தாங்குவார்! உன் பாரங்கள் கொஞ்சம்!
தந்தையின் நித்திய புயம் உன் தஞ்சம்.

1. He giveth more grace when the burdens grow greater,
He sendeth more strength when the labors increase;
To added afflictions He addeth His mercy,
To multiplied trials, His multiplied peace.

*His love has no limits, His grace has no measure,*
*His power no boundary known unto men;*
*For out of His infinite riches in Jesus*
*He giveth, and giveth, and giveth again.*

2. When we have exhausted our store of endurance,
When our strength has failed ere the day is half done,
When we reach the end of our hoarded resources
Our Father’s full giving is only begun.

3. Fear not that thy need shall exceed His provision,
Our God ever yearns His resources to share;
Lean hard on the arm everlasting, availing;
The Father both thee and thy load will upbear.

**(97)**

**1.** பாவ சஞ்சலத்தை நீக்க
பிராண நண்பர்தானுண்டே!
பாவப் பாரம் தீர்ந்துபோக
மீட்பர் பாதம் தஞ்சமே
சால துன்ப துக்கத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்.

2. கஷ்ட நஷ்டமுண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்;
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபம் காட்டுவோம்
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பெலவீனம் தாங்குவார்.
நீக்குவாரே மனச்சோர்வை
தீய குணம் மாற்றுவார்.

3. பெலவீனமானபோதும்
கிருபாசனமுண்டே
இன ஜனம் சாகும்போது
புகலிடம் இதுவே;
ஒப்பில்லாத பிராண நேசா
உம்மை நம்பி நேசிப்போம்;
அளவற்ற அருள் நாதா
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.

1. What a Friend we have in Jesus,
All our sins and griefs to bear!

What a privilege to carry
Everything to God in prayer!
O what peace we often forfeit,
O what needless pain we bear,
All because we do not carry
Everything to God in prayer.

2. Have we trials and temptations?
Is there trouble anywhere?
We should never be discouraged;
Take it to the Lord in prayer.
Can we find a friend so faithful
Who will all our sorrows share?
Jesus knows our every weakness;
Take it to the Lord in prayer.

3. Are we weak and heavy laden,
Cumbered with a load of care?
Precious Savior, still our refuge,
Take it to the Lord in prayer.
Do your friends despise, forsake you?
Take it to the Lord in prayer!
In His arms He'll take and shield you;
You will find a solace there.

**(98)**

1. O soul, are you weary and troubled?
No light in the darkness you see?
There's light for a look at the Savior,
And life more abundant and free!

*Turn your eyes upon Jesus,*
*Look full in His wonderful face,*
*And the things of earth will grow strangely dim,*
*In the light of His glory and grace.*

2. Through death into life everlasting
   He passed, and we follow Him there;
   O'er us sin no more hath dominion—
   For more than conqu'rors we are!

3. His Word shall not fail you—He promised;
   Believe Him, and all will be well:
   Then go to a world that is dying,
   His perfect salvation to tell!

**(99)**

1. The Lord is my light and my salvation,
   The Lord is my light and my salvation.
   The Lord is my light and my salvation,
   whom shall I fear?

   Whom shall I fear, whom shall I fear?
   The Lord is the strength of my life,
   whom shall I fear?

2. In the time of trouble, He shall hide me.
   In the time of trouble, He shall hide me.
   In the time of trouble, He shall hide me,
   whom shall I fear?

3. Wait on the Lord and be of good courage.
   Wait on the Lord and be of good courage.

Wait on the Lord and be of good courage,
He shall strengthen thine heart.

## IV. கிறிஸ்து நம்மில்

## D-1 கிறிஸ்துவின் ஆவி

**(100)**

1. உம் ஆவி என்மேல் ஊதுமே,
உம்மை நான் உள்சுவாசிக்க;
சுயம், பாவமான வாழ்க்கை
உம் நெஞ்சில் ஊற்ற உதவும்.

*என் துக்கம், பாவங்கள் எல்லாம்*
*வெளிசுவாசிப்பேன்;*
*உம் பூரணம் உள்சுவாசிப்பேன்,*
*உள்சுவாசிக்கின்றேன்.*

2. என் ஜீவன் வெளிசுவாசிப்பேன்
உம் ஜீவனால் நிரம்ப;
(என்) பலம், பலவீனம் போக
உம் ஜீவன் உள்சுவாசிப்பேன்.

3. என் பாவம் வெளிசுவாசிப்பேன்,
அதைச் சுமந்து தீர்த்தீர்;
என் வாழ்வெல்லாம் உம்மில் காண
உம் நிறைவை உள்சுவாசிப்பேன்.

4. என் துக்கம் வெளிசுவாசிப்பேன்,
உம் பாச நேச மார்பில்;
உம் இன்பம், ஆறுதல், ஓய்வு,
சமாதானம் உள்சுவாசிப்பேன்.

5. என் பிணி வெளிசுவாசிப்பேன்,
அதின் பாரம் சுமந்தீர்;
உம் சுகமாக்குதல் என்றும்
வாக்களித்தீர்--உள்சுவாசிப்பேன்.

6. என் ஏக்கம் வெளிசுவாசிப்பேன்,
   கேட்கும் உம் செவிகளில்;
   அச்சம், ஐயமெல்லாம் தீர்க்கும்
   உம் பதில்கள் உள்சுவாசிப்பேன்.

7. என் ஜீவன் எல்லாம் உம்மில்தான்,
   ஒவ்வோர் மூச்சும் உம்மில்தான்;
   கணந்தோறும் சுவாசிக்கின்றேன்,
   உம் ஆவி என்மேல் ஊதுமே.

1. O Lord, breathe Thy Spirit on me,
   Teach me how to breathe Thee in;
   Help me pour into Thy bosom
   All my life of self and sin.

   *I am breathing out my sorrow,*
   *Breathing out my sin;*
   *I am breathing, breathing, breathing,*
   *All Thy fulness in.*

2. I am breathing out my own life,
   That I may be filled with Thine;
   Letting go my strength and weakness,
   Breathing in Thy life divine.

3. Breathing out my sinful nature,
   Thou hast borne it all for me;
   Breathing in Thy cleansing fulness,
   Finding all my life in Thee.

4. I am breathing out my sorrow,
   On Thy kind and gentle breast;
   Breathing in Thy joy and comfort,
   Breathing in Thy peace and rest.

5. I am breathing out my sickness,
   Thou hast borne its burden too;
   I am breathing in Thy healing,
   Ever promised, ever new.

6. I am breathing out my longings
   In Thy listening, loving ear;
   I am breathing in Thy answers,
   Stilling every doubt and fear.

7. I am breathing every moment,
   Drawing all my life from Thee;
   Breath by breath I live upon Thee,
   Lord, Thy Spirit breathe in me.

**(101)**

1. ஊதும், தேவாவியை
   ஜீவனால் நிரம்ப;
   நீர் நேசிப்பதை நேசிக்க,
   நீர் செய்வதைச் செய்ய.

2. ஊதும், தேவாவியை
   தூய்மையால் நிரம்ப;
   உம்மோடொன்றாகி யாவையும்
   சகிக்க, செய்திட.

3. ஊதும், தேவாவியை
   முற்றும் ஆட்கொள்ளுவீர்;
   பூமியின் தேகம், ஆன்மாவில்
   தெய்வீகத் தீ மூட்டும்.

4. ஊதும், தேவாவியை
   சாகேன் நான் என்றுமே;
   சதாவாய் வாழ்வேன் உம்மோடு
   பூரண ஜீவனை.

1. Breathe on me, Breath of God,
   Fill me with life anew,
   That I may love what Thou dost love,
   And do what Thou wouldst do.

2. Breathe on me, Breath of God,
   Until my heart is pure,
   Until my will is one with Thine,
   To do and to endure.

3. Breathe on me, Breath of God,
   Till I am wholly Thine,
   Until this earthly part of me
   Glows with Thy fire divine.

4. Breathe on me, Breath of God,
   So shall I never die,
   But live with Thee the perfect life
   Of Thine eternity.

**(102)**

1. சத்தியமும் ஜீவனுமாய் நித்தமுமே வாழ்ந்திடும்
   கர்த்தனே எங்கட்கு ஜீவன் தந்து என்றும் தாங்கிடும்,
   சுத்தமாய் நடப்பதற்கு சுத்த ஆவி தந்திடும்,
   சித்தமோடு இந்த வேளை வந்திறங்கிடும்.

   *வானம் திறந்தருளும் பல தானங்களை இந்நேரமதில்*
   *வானவனே, ஞானவனே, வல்ல குரு நாதனே,*
   *தேனிலும் மதுரம் திவ்ய ஆசீர்வாதங்கள்.*

2. என்னை முற்றும் மாற்றிட உன்னத பெலன் ஊற்றிடும்,
   இன்னும் இன்னும் ஈசனே, உம் நல் வரங்கள் ஈந்திடும்;
   கண்ணிகளில் சிக்கிடாமல் கண்மணிபோல் காத்திடும்,
   கன்மலையும் மீட்பரும் என் காவலும் நீரே.

3. சுயம், ஆடம்பரம் முற்றும் சுட்டெரிக்க வேண்டுமே,
தயவு, தாழ்மையின் ஆவி தந்தருள வேண்டுமே,
மாயமான யாவினின்றும் மனமதைப் பேணுமே,
ஆயனே, அடியார்களின் அடைக்கலமே.

4. அதிக அதிக அன்பில் அமிழ்ந்து அனுதினம்
புதிய நாவுகளாலும் புகழ்ந்தும்மைப் போற்றிட,
அதிசயமே அகத்தின் குறைகள் அகற்றியே
இது சமயம் உன்னத பெலன் ஈந்திடும்.

## D-2 கிறிஸ்துவைப்போலாகும் வாஞ்சை

**(103)**

1. அன்பில் என்னைப் பரிசுத்தனாக்க
உமக்கென்று சகலத்தையும்
உருவாக்கினீர்! நீர் முதற்பேறானீரே!
தந்தை நோக்கம் அநாதியன்றோ!

*என் இயேசுவே, நேசித்தீரே!*
*எம்மாத்திரம் மண்ணான நான்!*
*உம்மை நன்றியுடன் துதிப்பேன்!*

2. மரித்தோரில் முதல் எழுந்ததினால்
புது சிருஷ்டிப்பின் தலையானீரே.
எல்லாவற்றிலும் எல்லாமுமாக
நீர் முதன்மை இடம் பெறவே.

3. முன்குறித்தீர், எம்மைத் தெரிந்தீரே,
உம் சோதரராய் இருக்க.
முதற்பேறாம் உம் சாயலில் யாம் வளர
ஆவியால் நீர் நடத்துகின்றீர்

4. நன்றியால் எம் உள்ளம் நிறைந்திடுதே,
நான் எப்படிப் பதில் செய்குவேன்?
இம்மகா நோக்கம் முற்றுமாய் நிறைவேறிட
என்னைத் தந்தேன் நடத்திடுமே.

**(104)**

இயேசுவே, உம்மைப்போல் ஆக
வாஞ்சிக்குதே என் உள்ளம்.

1. பாவம் அறியாது, பாவமே செய்யாது
பாரினில் ஜீவித்தீரே;
பரிசுத்தர் உம்மைப்போல் ஜீவிக்கவே,
பலமதைத் தாரும் ஐயா-உந்தன்
பலமதைத் தாரும் ஐயா.

2. உபத்திரவம் உண்டு உலகினில் என்றீர்
உலகத்தை வென்றேன் என்றீர்;
உம்மைப்போல் உலகினை ஜெயித்திடவே
பலமதைத் தாரும் ஐயா- உந்தன்
பலமதைத் தாரும் ஐயா.

3. தலை சாய்க்கத் தலமில்லை, தரணியில் உறவில்லை,
நிலையில்லா பூவில் என்றீர்;
நானும் உம்மைப்போல் தியாகம் செய்ய
பலமதைத் தாரும் ஐயா- உந்தன்
பலமதைத் தாரும் ஐயா.

4. சிலுவை சுமந்தென்றும் என்பின் வராதவன்
அல்ல என் சீடன் என்றீர்;
உம் சித்தப்படி உந்தன் சேவை செய்ய
பலமதைத் தாரும் ஐயா- உந்தன்
பலமதைத் தாரும் ஐயா.

5. சீயோன் மலையதில் சிறந்தே இலங்கிடும்
தோவாட்டுக்குட்டி நீரே;
சீயோனில் உம்முடன் நானிருக்க
உம்மைப்போல் மாற்றும் ஐயா-என்னை
உம்மைப்போல் மாற்றும் ஐயா.

**(105)**

1. உம் சாயலிலும், உம் உருவிலும்
உம் சுவாசத்தால் உண்டாக்கினீர் என்னை,

உம்மால் நிரம்பி உம்மைக் காண்பிக்கும்
உன்னத பாண்டமாக்கினீர் என்னை.

2. உம் ஆவியால் மீண்டும் பிறப்பித்தீர்,
உம் ஜீவன் பெற்று உம் பிள்ளையானேன்,
உம் ஆவியாலே என்னை வனைந்து
உம் குணத்தை என்னுள் உருவாக்கும்.

3. என் இதயம் உம்மிடம் திரும்பி
கண்ணாடியாய் நான் உம் மாட்சி காண
கண் திறவும் உம் ஆவியினாலே
என்னை உம்போல் மறு உருவாக்கும்.

4. சத்திய ஆவியால் நடத்தி, உம்
சித்தம் செய்கின்ற பாத்திரமாக்கும்,
நித்தம் சிலுவை வழி நடக்க
தத்தம் செய்தேன் என்னை உம் கரத்தில்.

5. முற்றும் என்னையே பலிபீடத்தில்
ஊற்றுகின்றேன் பானபலியாக,
மாற்றுமே உமக்கொத்த சாயலாய்
சாற்றுவேன் உம்மை சாட்சியாய் வாழ்ந்து.

**(106)**

1. உம்மைப்போல் ஆவேனாக, இரட்சகா,
என் ஏக்கம், என் ஜெபம் இதுவே!
இயேசுவே, உந்தன் சாயல் அணிய
பூவின் பொக்கிஷம் கைவிடுவேன்.

*உம்மைப்போல் ஆக, உம்மைப்போல் ஆக,*
*தூயர் உம்மைப்போல் ஆவேனாக!*
*இனிதாய் வாரும்! நிறைவாய் வாரும்!*
*உம் சாயல் என் நெஞ்சில் பதியும்.*

2. அலையும் பாவிகளைத் தேடிட,
களைத்தோரைத் தேற்றி ஆற்றிட,
அன்பு, மன்னிப்பு, உருக்கம், தயை
நிறைந்த உம்போல் ஆவேனாக!

3. ஆவியில் தாழ்மை, தூய்மை, தைரியம்,
பொறுமை, சாந்தம் நிறைந்தவர்;
பிறரை மீட்க நிந்தை சுமந்து
துன்புற்ற உம்போல் ஆவேனாக!

4. உம் அபிஷேகம் பெற்றிட வந்தேன்,
என்னையும் எனதையும் தந்தேன்;
இக்கணம்முதல் யாவும் உமதே,
கர்த்தாவே, உம்போல் ஆவேனாக!

5. உம் ஆவி ஊற்றும், அன்பால் நிரப்பும்,
நீர் விரும்பும்வண்ணம் வாழ்ந்திட;
நீர் வசிக்கின்ற ஆலயமாக்கும்,
வேண்டினேன் உம்போல் ஆவேனாக!

1. O to be like Thee! blessed Redeemer;
This is my constant longing and prayer;
Gladly I'll forfeit all of earth's treasures,
Jesus, Thy perfect likeness to wear.

*O to be like Thee! O to be like Thee!*
*Blessed Redeemer, pure as Thou art;*
*Come in Thy sweetness, come in Thy fullness;*
*Stamp Thine own image deep on my heart.*

2. O to be like Thee! full of compassion,
Loving, forgiving, tender and kind,
Helping the helpless, cheering the fainting,
Seeking the wand'ring sinners to find.

3. O to be like Thee! lowly in spirit,
Holy and harmless, patient and brave;
Meekly enduring cruel reproaches,
Willing to suffer, others to save.

4. O to be like Thee! Lord, I am coming,
   Now to receive th' anointing divine;
   All that I am and have I am bringing;
   Lord, from this moment all shall be Thine.

5. O to be like Thee! While I am pleading
   Pour out Thy Spirit, fill with Thy love.
   Make me a temple meet for Thy dwelling,
   Fit for a life which Thou wouldst approve.

## D-3 கிறிஸ்துவுடன் ஒன்றிப்பு

**(107)**

1. அன்புருவாய் எம் நடுவில்
   ஆசையுடன் வந்துதித்து,
   உம் சபையில் வீற்றிருக்கும்
   உன்னதரே துதிக்கின்றோம்.

2. பரலோக அரியணையில்
   பாக்கியமாய் ஆள்பவர் நீர்;
   நரலோக வாசிகளுள்
   நலமேது தேடி வந்தீர்!

3. நித்திய பிதாவினோடு
   நிர்மலனாய் வாழ்பவர் நீர்;
   சுத்தமில்லாப் பூவுலகில்
   சுதந்தரிக்கக் கண்டதென்ன?

4. விண்ணுலக தூதர்களின்
   விளக்கொளியே பாக்கியமே
   மண்ணுலக வாசிகளுள்
   வந்ததென்ன வானரசே

**(108)**

1. இயேசுவே, உம்மோடொன்றேயாம்,
   ஓ! அன்பின் ஆழமே!

உம்மோடொன்றானோம் குருசில்,
விண்ணிலும் உம்மோடொன்றே.

2. எம்மேல் கொண்ட உம் அன்பினால்
விண் மேன்மை துறந்தீர்;
எம் பாவப் பரிகாரியாகிட
மானிடனானீரே.

3. சாப, கஸ்தி, கோபாக்கினை,
உம் பங்காய் ஏற்றீரே;
தேவனே, நீர் சுமந்தீரே
எம் பாவ தோஷத்தை.

4. ஜீவன் தரும் தலையானீர்,
பரமேறி வீற்றீர்;
ஜீவன், மரணம் எதுவும்
நம்மைப் பிரிக்காதே.

5. மா அற்புதம் அறிந்திட
கர்த்தாவே, கற்பியும்;
விண்ணோர் நீர் எம்மோடொன்று,
யாம் உம்மோடொன்றானோம்.

6. ஆசனத்தில் அமரும் நாள்
சீக்கிரம் வரும்போழ்,
நான் உம்முடன் ஒன்றென்பதை
எங்கும் பிரஸ்தாபிப்பீர்.

1. Lord Jesus, are we one with Thee?
O height, O depth of love!
Thou one with us on Calvary,
We one with Thee above.

2. Such was Thy grace that for our sake
Thou didst from heaven come down,
With us of flesh and blood partake,
In all our misery one.

3. Our sins, our guilt, in love Divine
Confessed and borne by Thee;
The gall, the curse, the wrath were Thine,
To set Thy members free.

4. Ascended now, in glory bright,
Head of the Church Thou art;
Nor life nor death, nor depth nor height,
Thy saints and Thee can part.

5. Oh teach us, Lord, to know and own
This wondrous mystery,
That Thou in heaven with us art one,
And we are one with Thee.

6. Soon, soon shall come that glorious day
When, seated on Thy throne,
Thou shalt to wondering worlds display
That Thou with us art one.

**(109)**

இயேசுவே, நீரே திராட்சைச் செடி,
நாங்கள் உம் கொடிகள்;
இயேசுவே நீரே எங்கள் தலை,
நாங்கள் அவயவங்கள்;
தந்தீரே உம் ஜீவனை,
வந்தீரே எம் வாழ்விலே.

1. நீரின்றி பாவத்தில் மாய்ந்திருந்தோம்,
அன்பால் தேடி வந்தீர்;
செடியுடன் கொடியின் உறவினைப்போல்
உம்மோடெமை இணைத்தீர்;
நீர் எங்கள் உயிராய் மாறிவிட்டீர்
வருத்தமும் பாரமும் வாழ்வில் இல்லை:

உள்ளத்தில் வாழ்பவரே-என்
வாழ்வில் நீர் பெருகிடுமே.

2. நீரின்றித் தனிமையில் அலைந்திருந்தோம்,
அன்பால் எம்மை அணைத்தீர்;
தலையுடன் அங்கங்கள் உறவினைப்போல்
உம்மோடெமை இணைத்தீர்;
நீர் முதல் சோதரராகிவிட்டீர்,
தேவனின் குடும்பத்தில் வாழ்கின்றோம்;
ஆண்டவர் கிறிஸ்து நீரே-உந்தன்
ஆளுகை வருவதாக.

**(110)**

இயேசுவே, நீரே பரத்தில் என் சொந்தம்,
உமையன்றி இகத்தில் வேறேது பந்தம் *(2)*
உம் அருள் ஒன்றே எனக்குத் தஞ்சம்,
உமை என்றும் பிரியாது ஏழை என் நெஞ்சம்.

*நீரே சொந்தம், நீரே தஞ்சம்!*
*நீரே செல்வம், வாழ்வின் மையம்!*

1. கொடியோடு இணைந்துள்ள கிளைபோலவே
உம்மோடு ஒன்றாகும் அருள் வேண்டுமே *(2)*
கனி தந்து எம் வாழ்வு செழிப்பாகுமே! *(2)*
வருவீரே வாழ்வாய், எம் உயிர் மூச்சு நீர் *(2)*

2. தெய்வீக உயிர் நல்கும் வார்த்தைகளோ
ஆண்டவர் உம்மிடமே இருக்கின்றன;
யாரிடம் போவோம் உமைப்பிரிந்து? *(2)*
வாழ்வெல்லாம் வருவோம் உமைத் தொடர்ந்து *(2)*

3. அளவில்லா அன்போடு அன்பு கொண்டீர்
நண்பர் என்றீர், மீட்க உயிரும் தந்தீர் *(2)*
உம் மக்கள்மேல், உம்போல் அன்புகொண்டு *(2)*
உம் நட்புறவில் என்றும் நிலைத்திருப்போம் *(2)*

**(111)**

1. உம்மோடொன்று நான் இயேசுவே,
உம்மோடொன்று ஆவியில்;
நீர் முற்றும் என் சொந்தமானீர்,
நீரே என்னில் வாழ்கின்றீர்.

*ஒன்றானோம், ஒன்றானோம்,*
*உம்மோடு ஒன்றானோம்;*
*நாளும் உம்மில் பங்கடைந்தேன்,*
*நீர் எனக்கெல்லாம் ஆனீர்.*

2. உம் மனிதப் பண்புநிறை
உம் மனித வாழ்க்கையில்
பங்குறுகிறேன்--முற்றும் நீர்
கீழ்ப்படிந்த வாழ்க்கையில்.

3. உம்மோடொன்றும் மரணத்தில்
சிலுவையில் மரித்தேன்;
உலகெனக்கு மாண்டது,
நான் உலகிற்கு மாண்டேன்.

4. உம்மோடொன்று உம் உயிர்ப்பில்
உயிர்த்தேன் உம்மில் வாழ;
என்னில் அந்த ஜீவன் நீரே
வாழ்வேன் அந்த ஜீவனால்.

5. உம்மோடொன்று விண்ணேற்றத்தில்
உம்மோடு நான் விண்ணிலே;
இங்கு நான் ஓர் சஞ்சாரியே
என் மெய் ஜீவன் உம்மில்தான்.

6. உம்மோடொன் றரியணையில்
உம் அதிகாரம், ஜீவன்
பங்கடைந்து வாழ்கிறேனே
நான் உம்மில், நீர் என்னிலே.

1. I am one with Thee, Lord Jesus,
One in spirit now with Thee;
All Thyself I now possess, Lord,
All Thou art now lives in me.

*One with Thee, one with Thee,*
*One with Thee, one with Thee;*
*Day by day I share Thy riches,*
*Thou art everything to me.*

2. Now I share Thy human life, Lord,
Filled with Thy humanity,
All of Thy complete obedience
Is available to me.

3. One with Thee in crucifixion,
On the cross I died in Thee;
I am dead unto the world, Lord,
And the world is dead to me.

4. One with Thee in resurrection,
Risen now to live in Thee,
With that life which is Thyself, Lord,
Now in me, Lord, even me.

5. One with Thee in Thine ascension,
In the heavens now with Thee;
Here a pilgrim and a stranger,
My true life is hid in Thee.

6. One with Thee in Thine enthronement,
Sharing Thine authority,

Even as I share Thy life, Lord,
I in Thee and Thou in me.

**(112)**

1.. கர்த்தரில் நிலைத்து வாழக்
கற்றுக்கொண்டேன், அற்புதம்!
ஜீவ ஊற்றினில் சுவைத்தேன்,
ஜீவ வார்த்தை புசித்தேன்;
இரத்தத்தின்கீழ் நிலைத்திருப்பதின்
வல்லமை கண்டேன்;
என்னை இயேசுவில் இழந்தேன்
தேவனுக்குள் மூழ்குவேன்.

*கர்த்தரில் நிலைக்கின்றேன்,*
*வார்த்தையில் தரிக்கின்றேன்,*
*அவர் நேச மார்பில் சாய்ந்திருக்கின்றேன்.*
*கர்த்தரில் நிலைக்கின்றேன்,*
*வார்த்தையில் தரிக்கின்றேன்,*
*அவர் நேச மார்பில் சாய்ந்திருக்கின்றேன்.*

2. இயேசுவோடு அறையுண்டேன்,
அவர் என்னில் வாழ்கின்றார்,
இனி நானல்ல, அவரே!
என் போரட்டம் ஓய்ந்தது,
ஆவியானவர் ஆள்கின்றார்,
அவர் சித்தமே ஆகும்;
இரத்தத்தால் கழுவி
கணந்தோறும் தூய்மையாக்குவார்.

3. என் பிணிகள், பலவீனங்கள்
சுமந்து தீர்க்கின்றார்;
என் பயங்கள், துக்கங்கள், பாரங்கள்
நாளும் தீர்க்கின்றார்;
இயேசுவின் பலத்தால் நாளும்
அசைகின்றேன், வாழ்கின்றேன்;

அவர் ஜீவன், விஸ்வாசம், அன்பு,
எண்ணம் தருகின்றார்.

4. என் வார்த்தைக்கு ஞானமும்,
என் வேலைக்கு வல்லமையும்,
என் வழிக்குப் பிரசன்னமும்
தந்து நடத்துகின்றார்;
என் இதயத்தின் பங்கு, அவர்
மகிழ்ச்சியின் ஊற்று;
என்னைக் குணமாக்கும் என் இரட்சகர்,
கர்த்தர், என் இராஜா.

1. I have learned the wondrous secret
Of abiding in the Lord;
I have tasted life's pure fountain,
I am drinking of His word;
I have found the strength and sweetness
Of abiding 'neath the blood;
I have lost myself in Jesus,
I am sinking into God.

*I'm abiding in the Lord*
*And confiding in His word;*
*I am hiding in the bosom of His love.*
*Yes, abiding in the Lord*
*And confiding in His word,*
*I am hiding in the bosom of His love.*

2. I am crucified with Jesus,
And He lives and dwells with me;
I have ceased from all my struggling,
'Tis no longer I, but He.
All my will is yielding to Him,

And His Spirit reigns within;
And His precious blood each moment
Keeps me cleansed and free from sin.

3. All my sicknesses I bring Him,
And He bears them all away;
All my fears and griefs I tell Him,
All my cares from day to day,
All my strength I draw from Jesus,
By His breath I live and move;
E'en His very mind He gives me,
And His faith, and life, and love.

4. For my words I take His wisdom,
For my works His Spirit's power;
For my ways His ceaseless presence
Guards and guides me every hour.
Of my heart, He is the portion,
Of my joy the boundless spring;
Savior, Sanctifier, Healer,
Glorious Lord, and coming King.

**(113)**

1. நான் செல்லும் பாதையோ சிலுவையானாலும்,
நீர் நடத்தும் வழியோ குறுகலானாலும்,
அதற்கீடாக, இயேசுவே, நீர் என்னோடிரும்,
முகமுகமாய் உம்மோடு ஐக்கியம் தாரும்.

2. பூமி மங்கினாலும் உம் இன்முகம் காண்பியும்,
நெஞ்சம் நைந்தாலும் எந்தன் ஆவி உம்மைப் போற்றும்;
பூமியின் உறவெல்லாம் அறுந்துபோனாலும்,
உம்மோடுறவை இன்னும் நெருக்கமாக்குமே.

3. என் சிலுவைப் பாதையில் நீர் புன்னகை காட்டும்,
பூவின் வாழ்நாளெல்லாம் நீர் என் நண்பனாய் இரும்;
உம் க்ருபையால் சுயம் மறுத்து வாழச் செய்யும்,
உம் ஜீவன் பாய என்னை ஓர் வாய்க்காலாக்குமே.

**(114)**

1. நான் விசுவாசிக்கிறேன்,
செம்மறிக்கு அல்லேலூயா!
வெளிப்பிரகாரம் கடந்தேன்,
தேவனுக்கு மகிமை!
நான் இயேசுவின் பக்கமே,
பலிபீடத்தால் சுத்தமே;
பாவத்திற்கு மரித்தேன்,
செம்மறிக்கு அல்லேலூயா!

*அல்லேலூயா! அல்லேலூயா!*
*கிழிந்த திரை கடந்தேன்,*
*மங்கா மகிமை நுழைந்தேன்,*
*அல்லேலூயா! அல்லேலூயா!*
*இராஜ சந்நிதியில் வாசம்செய்கிறேன்.*

2. இரத்தத்தாலே கழுவினார்,
செம்மறிக்கு அல்லேலூயா!
ஆசாரியனாக்கினார்,
தேவனுக்கு மகிமை!
அதிதூய ஸ்தலத்தில் நான்
இரவும் பகலும் வாழ்கிறேன்,
ஆவியின் பலத்தினால்
செம்மறிக்கு அல்லேலூயா!

3. வெளித்திரை கடந்தேன் நான்,
செம்மறிக்கு அல்லேலூயா!
தேவ சுடர் மறைத்ததை
தேவனுக்கு மகிமை!
தேவ பரிசுத்தத்துள்
இரத்தம் சேர்த்ததே என்னை,

பாவம், சுயம் சாகுதே,
செம்மறிக்கு அல்லேலூயா!

4. உட்திரை கடந்தேன் நான்,
செம்மறிக்கு அல்லேலூயா!
அதிதூய ஸ்தலத்தில் நான்,
தேவனுக்கு மகிமை!
இரத்தத்தின் வல்லமையால்
பரிசுத்தம் அடைகிறேன்;
கர்த்தரே என் உறைவிடம்
செம்மறிக்கு அல்லேலூயா!

1. I've believed the true report,
Hallelujah to the Lamb!
I have passed the outer court,
O glory be to God!
I am all on Jesus' side,
On the altar sanctified,
To the world and sin I've died,
Hallelujah to the Lamb!

*Hallelujah! Hallelujah!*
*I have passed the riven veil,*
*Here the glories never fail,*
*Hallelujah! Hallelujah!*
*I am living in the presence of the King.*

2. I'm a king and priest to God,
Hallelujah to the Lamb!
By the cleansing of the blood,
O glory be to God!
By the Spirit's pow'r and light,
I am living day and night,

In the holiest place so bright,
Hallelujah to the Lamb!

3. I have passed the outer veil,
Hallelujah to the Lamb!
Which did once God's light conceal,
O glory be to God!
But the blood has brought me in
To God's holiness so clean,
Where there's death to self and sin,
Hallelujah to the Lamb!

4. I'm within the holiest pale,
Hallelujah to the Lamb!
I have passed the inner veil,
O glory be to God!
I am sanctified to God
By the power of the blood,
Now the Lord is my abode
Hallelujah to the Lamb!

**(115)**

*1.* நித்ய மகன் உம்மோடொன்று
ஆவியில் ஒன்றாய் இணைந்தோம்;
தேவ மகன் உம் மரணம்,
உம் ஜீவனில் பங்குற்றோம்;

நேச மகன் உம்மோடொன்று
அருளால் உம் பங்கானோம்;
தந்தையின் வாரிசுகளானோம்
ஆவியின் வாழ்விடமானோம்.

*2.* மனுமகன் உம்மோடொன்று
உம்மால் யாம் மீண்டும் பிறந்தோம்;

சரீரத்தின் அங்கங்களாய்
பூவில் சகவாசம் செய்வோம்;
அபிஷேகர், உம்மோடொன்று
ஆவியின் பலம் தந்தீர்;
உம்மோடொன்றாக இணைந்து
நாடோறும் உழைக்கின்றோம்.

3. தள்ளுண்ட மகனோடொன்று
ஆக்கினை, சாபம் கடந்தோம்;
பாவத்துக்கு யாம் மரித்தோம்
நரகம் எம் பாதம்கீழ்;
உயிர்ப்பில் யாம் உம்மோடொன்று
சாவு எம்மைத் தீண்டாதே;
நீதியின் கனிகள் தந்து
புதுப் படைப்பில் வாழ்வோம்.

4. விண்சென்ற மகனோடொன்று
ஆசனம் உம்மோடமர்ந்தோம்;
உம் ஆளுகையில் பங்குற்று
உம்மோடொன்றாய் ஆள்கின்றோம்;
மீண்டும் வரும் உம்மோடொன்று
மாட்சி பெறுவோம் உம்மோடு;
உம் அழகை வெளிக்காட்ட
நித்யமாய் உம்மோடொன்றாம்.

1. One with Thee, Thou Son eternal,
Joined by faith in spirit one,
Share we in Thy death inclusive
And Thy life, O God the Son.
One with Thee, Thou Son beloved,
Part of Thee become thru grace,
Heirs with Thee of our one Father,
We’re Thy Spirit’s dwelling place.

2. One with Thee, Thou Son incarnate,
Born with Thee, the Man of worth,
We, the members of Thy body,
Sojourn with Thee here on earth,
One with Thee, Thou Son anointed,
Sharing too the Spirit’s power,
We in full cooperation
Labor with Thee hour by hour.

3. One with Thee, Thou Son forsaken,
Judgment and the curse we’ve passed;
We to sin are dead forever,
Hell beneath our feet is cast.
One with Thee in resurrection,
Death can never us oppress;
Live we in Thy new creation,
Bearing fruits of righteousness.

4. One with Thee, Thou Son ascended,
Seated with Thee on the throne,
Thine authority we share and,
Rule with Thee, Thy rank our own.
One with Thee, Thou Son returning,
Glorified with Thee we’ll be,
E’er to manifest Thy beauty,
One with Thee eternally.

## D-4 கிறிஸ்துவின் பாதத்தில்

**(116)**

*1.* உம்மண்டை தேவனே, நான் சேரட்டும்
சிலுவை சுமந்து நடப்பினும்

என் ஆவல் என்றுமே
உம்மண்டை தேவனே (2) நான் சேர்வதே.

2. மாலையில் சூரியன் மறைகையில்
இரவில் கல்லின்மேல் தூங்குகையில்
எந்தன் கனாவிலே
உம்மண்டை கர்த்தரே (2) இருப்பேனே.

3. திறந்த வானையும், விண் ஏணியும்
கர்த்தரே, உம்மையும் நான் காண்பேனே.
தூதர் அழைப்பாரே
உம்மண்டை கர்த்தரே (2) நான் சேரவே.

4. விழித்து உம்மையே நான் துதிப்பேன்,
என் துயர்க்கல்லை உம் வீடாக்குவேன்
என் துன்பத்தாலுமே
உம்மண்டை தேவனே (2) நான் சேர்வேனே.

1. Nearer, my God, to Thee, nearer to Thee;
E'en though it be a cross that raiseth me,
Still all my song shall be nearer, my God, to Thee,
Nearer, my God, to Thee, nearer to Thee.

2. Though, like a wanderer, the sun gone down,
Darkness comes over me, my rest a stone;
Yet in my dreams I'd be nearer, my God, to Thee,
Nearer, my God, to Thee, nearer to Thee.

3. There let me see the sight, an open heaven;
All that Thou sendest me, in mercy given;
Angels to beckon me nearer, my God, to Thee,
Nearer, my God, to Thee, nearer to Thee.

4. Then, with my waking thoughts bright with Thy praise,
Out of my stony griefs Bethel I'll raise,

So by my woes to be nearer, my God, to Thee,
Nearer, my God, to Thee, nearer to Thee.

**(117)**

1. என் ஜெப வேளை வாஞ்சிப்பேன்
அப்போதென் துக்கம் மறப்பேன்;
பிதாவின் பாதம் பணிவேன்;
என் ஆசை யாவும் சொல்லுவேன்,
என் நோவு வேளை தேற்றினார்,
என் ஆத்ம பாரம் நீக்கினார்
ஒத்தாசை பெற்றுத் தேறினேன்
பிசாசை வென்று ஜெயித்தேன்.

2. என் ஜெப வேளை வாஞ்சிப்பேன்
மா தாழ்மையோடு வேண்டுவேன்;
மன்றாட்டைக் கேட்போர் வருவார்
பேர் ஆசீர்வாதம் தருவார்
"என் வாக்கின்மேல் விசுவாசமாய்
என் பாதம் தேடு ஊக்கமாய்"
என்றோர்க்கென் நோவைச் சொல்லுவேன்
இவ்வேளையை நான் வாஞ்சிப்பேன்.

3. என் ஜெப வேளை வாஞ்சிப்பேன்
ஆனந்தக் களிப்படைவேன்
பிஸ்கா சிகரம் ஏறுவேன்
பேரின்ப வீட்டை நோக்குவேன்;
இத் தேகத்தை விட்டேகுவேன்
விண் நித்ய வாழ்வைப் பெறுவேன்
பேரின்ப வீட்டில் வசிப்பேன்
வாடாத கிரீடம் சூடுவேன்.

1. Sweet hour of prayer! sweet hour of prayer!
That calls me from a world of care,
And bids me at my Father's throne
Make all my wants and wishes known.

In seasons of distress and grief,
My soul has often found relief
And oft escaped the tempter's snare
By thy return, sweet hour of prayer!

2. Sweet hour of prayer! sweet hour of prayer!
The joys I feel, the bliss I share,
Of those whose anxious spirits burn
With strong desires for thy return!
With such I hasten to the place
Where God my Savior shows His face,
And gladly take my station there,
And wait for thee, sweet hour of prayer!

3. Sweet hour of prayer! sweet hour of prayer!
Thy wings shall my petition bear
To Him whose truth and faithfulness
Engage the waiting soul to bless.
And since He bids me seek His face,
Believe His Word and trust His grace,
I'll cast on Him my every care,
And wait for thee, sweet hour of prayer!

4. Sweet hour of prayer! sweet hour of prayer!
May I thy consolation share,
Till, from Mount Pisgah's lofty height,
I view my home and take my flight:
This robe of flesh I'll drop and rise
To seize the everlasting prize;
And shout, while passing through the air,
"Farewell, farewell, sweet hour of prayer!"

**(118)**

என்னை ஆய்ந்தென் நெஞ்சம் அறியும்,
சோதித்தென் உள்ளம் காணும்;
தீய வழி என்னில் உண்டோ என்று பாரும்,
ஜீவ வழி, ஜீவ வழி,
ஜீவ வழியில் நடத்தும்.

என்னை ஆய்ந்தீர், உள் அறிந்தீர்,
என் அமர்தல், என் எழுதல்,
என் எண்ணங்கள் தோன்றுமுன் அறிவீர்,
என் வழிகள் அறிவீர்,
என் வழிகள் அறிவீர்.

Search me, O God, and know my heart;
Try me and know my thoughts;
And see if there be wicked way in me;
Lead me in the way, lead me in the way,
Lead me in the way everlasting.

You have searched me,
You have known me,
My downsitting, my uprising;
You understand my thoughts from afar;
You know all my ways,
You know all my ways.

**(119)**

1. என்னோடிரும், என் நேச கர்த்தரே,
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே;
மற்றோர் ஒத்தாசை அற்ற போதிலும்
நீர், மெய்ச் சகாயரே, என்னோடிரும்.

2. நீர்மேலே குமிழ்போல் என் ஆயுசும்
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்;

கண் கண்ட யாவும் மாறிப்போயினும்,
மாறாத கர்த்தர் நீர் என்னோடிரும்.

3. நீர் கூட நின்று தாங்கி வாருமேன்,
அப்போது தீமைக்கு நான் தப்புவேன்;
என் துணை நீர் என் தஞ்சமாயிரும்;
என் இன்பதுன்பத்தில் என்னோடிரும்.

4. நான் அஞ்சிடேன் நீர் கூடத் தங்கினால்,
என் கிலேசம் மாறும் உம் பிரசன்னத்தால்;
சாவே, எங்கே உன் கூரும், ஜெயமும்?
என்று ஆர்ப்பரிக்க என்னோடிரும்.

5. நான் சாகும் அந்தகார நேரமே
நீர் ஒளியாய் விண்காட்சி காட்டுமே,
விண் ஜோதி வீசி, மருள் நீக்குமே,
வாழ்நாள் மாலையிலும் என்னோடிரும்.

1. Abide with me! fast falls the eventide;
The darkness deepens; Lord, with me abide!
When other helpers fail and comforts flee,
Help of the helpless, oh, abide with me.

2. Swift to its close ebbs out life's little day;
Earth's joys grow dim, its glories pass away;
Change and decay in all around I see;
O Thou who changest not, abide with me.

3. Come not in terrors, as the King of kings;
But kind and good, with healing in Thy wings:
Tears for all woes, a heart for every plea;
Come, Friend of sinners, thus abide with me.

4. I need Thy presence every passing hour:
What but Thy grace can foil the tempter's power?

Who like Thyself my guide and stay can be?
Through cloud and sunshine, oh, abide with me.

5. I fear no foe, with Thee at hand to bless:
Ills have no weight, and tears no bitterness:
Where is death's sting? where, grave, thy victory?
I triumph still, if Thou abide with me.

**(120)**

எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய்
என் கண்களை ஏறெடுப்பேன்.

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்தே
எண்ணுக்கடங்கா நன்மைகள் வருமே
என் கண்கள் ஏறெடுப்பேன்.

2. மலைகள் பெயர்ந்தகன்றிடினும்
நிலைமாறி புவியகன்றிடினும்
மாறிடுமோ அவர் கிருபை எந்நாளும்
ஆறுதல் எனக்கவரே.

3. என் காலைத் தள்ளாடவொட்டார்,
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்,
இஸ்ரவேலைக் காக்கும் நல் தேவன்
இராப்பகல் உறங்காரே.

4. எத்தீங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்கும் என் தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாகக்
காப்பாரே இது முதலாய்.

**(121)**

தம் கிருபை பெரிதல்லோ
என் ஜீவனிலும் அதே;
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே.

1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அது போதுமே;
சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே.

2. நிர்மூலமாகாததும் நிற்பதுமே கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே;
நித்திய ஜீவன் பெற்றுக்கொண்டேன்
காத்துக்கொள்ள கிருபை தாருமே.

3. தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும்,
பெலவீன சரீரத்திலும்,
போதுமே உம் கிருபை தாருமே.

4. மா பரிசுத்த ஸ்தலம் கண்டடைவேன் கிருபை
மூடும் திரை கிழிந்திடவே,
தைரியமாய் சகாயம் பெற
தேடி வந்தேன் கிருபை தாருமே.

5. ஒன்றை ஒன்று சந்திக்கும் சத்தியமும் கிருபை
என்றும் மறவேன் வாக்குத்தத்தம்;
நீதியுமே, சமாதானமுமே
நிலைநிற்கும் கிருபை தாருமே.

6. ஸ்தோத்திர ஜெபத்தினால் பெருகுதே கிருபை
ஆத்தும பாரம் கண்ணீரோடே
சோர்வின்றி நானும் வேண்டிடவே,
ஜெப வரம் கிருபை தாருமே.

7. கர்த்தர் வெளிப்படும் நாள் அளித்திடும் கிருபை
காத்திருந்து அடைந்திடவே;
இயேசுவே, உம்மைச் சந்திக்கவே,
இரக்கமாய்க் கிருபை தாருமே.

**(122)**

தயை செய்வாய் நாதா, என் பாவங்களை நீக்கி,
தயை செய்வாய் நாதா, என் பாவங்களை நீக்கி.

1. அன்புடனே ஏழை என்மேல் இரக்கம் வையும்,
அனுதபித்து என் பிழையை அகற்றுமைய்யா,
பாவமதை நீக்கி என்னைப் பனிபோலாக்கும்,
தோஷமெல்லாம் தீர்த்து என்னைத் தூய்மையாக்கும்.

2. என் குற்றம் நானறிவேன் வெள்ளிடை மலைபோல்,
தீவினையை மறவாதென் மனது என்றும்,
உம் புனிதத்தைப் போக்கி நான் பாவியானேன்,
நீர் தீமையென்று கருதுவதைத் துணிந்து செய்தேன்.

3. உள்ளத்தில் உண்மையை நீர் விரும்புகிறீர்,
என் ஆத்துமத்தின் அந்தரத்தில் அறிவையூட்டும்,
என் பாவம் தீர்ப்பாயின் தூய்மையாவேன்,
பனி வெண்மைக்கு உயர்வாகப் புனிதமாவேன்.

**(123)**

1. திருப்பாதம் நம்பி வந்தேன்,
கிருபை நிறை இயேசுவே!
உமதன்பைக் கண்டடைந்தேன்,
தேவ சமுகத்திலே.

2. இளைப்பாறுதல் தரும் தேவா!
களைத்தோரைத் தேற்றிடுமே.
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்,
சுகமாய் அங்கு தங்கிடுவேன்.

3. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்,
இன்னல் துன்ப நேரத்திலும்,
கருத்தாய் விசாரித்து என்றும்,
கனிவோடென்னை நோக்கிடுமே.

4. என்னைக் கைவிடாதிரும் நாதா!
என்ன நிந்தை நேரிடுனும்,
உமக்காக யாவும் சகிப்பேன்,
உமது பெலன் ஈந்திடுமே.

5. விசுவாசத்தால் பிழைத்தோங்க,
வீர பாதை காட்டிடுமே,

வளர்ந்து கனிதரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன்.

**(124)**

1. தேவனே, நான் உமதண்டையில் இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்;
மாவலிய கோரமான வன்சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும்
ஆவலாய் உம்மண்டை சேர்வேன்.

2. யாக்கோபைப்போல் போகும் பாதையில் பொழுதுபட்டு
இராவில் இருள் வந்து மூடிட,
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன்
வாக்கடங்கா வல்ல நாதா.

3. பரத்துக்கேறும் படிகள்போலவே, என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா எந்தன் தேவனே.
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னை அழைக்கும் அன்பின்
தூதராகச் செய்யும்.

4. நித்திரையினின்று விழித்து காலை எழுந்து
கர்த்தாவே நான் உம்மைப் போற்றுவேன்;
இத்தரையில் உந்தன் வீடாய் என் துயர்க் கல்
நாட்டுவேனே
எந்தன் துன்பத்தின்வழியாய் இன்னும் உம்மைக்
கிட்டிச் சேர்வேன்.

5. ஆனந்தமாய் செட்டை விரித்துப் பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப்போயினும்,
வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக்
கிட்டிச் சேர்வேன்.

**(125)**

1. நீர் தேடிக் கதறும் மானபோல்
   என் ஆத்துமா உம்மைத் தேடும்;
   நீரே என் நெஞ்சின் வாஞ்சை,
   என் ஆவி உம்மைத் தொழ நாடும்.

   *நீர் மட்டுமே எனை ஈர்த்தீர்,*
   *உம் ஆவிக்கென் ஆவி நெகிழும்;*
   *நீரே என் நெஞ்சின் வாஞ்சை,*
   *உம்மைத் தொழ உள்ளம் மகிழும்.*

2. நீர் வேந்தர், ஆயினும்
   என் நண்பனும் சோதரனும் ஆனீர்!
   யாரினும், யாவினும்மேலாய்
   உம்மில் நான் அன்புகூர்கின்றேன்.

3. பொன் வெள்ளி வேண்டாம், நீர் போதும்,
   நீரே என் நெஞ்சின் நிறைவு;
   கண்மணிபோல் நீர் எனக்கருமை,
   நீரே மெய் மகிழ்ச்சி.

1. As the deer panteth for the water
   So my soul longeth after Thee;
   You alone are my heart's desire
   And I long to worship Thee.

   *You alone are my strength, my shield;*
   *To You alone may my spirit yield;*
   *You alone are my heart's desire*
   *And I long to worship Thee.*

2. You're my friend and You are my brother
   Even though You are a king;
   I love You more than any other
   So much more than anything.

3. I want You more than gold or silver
   Only You can satisfy;
   You alone are the real joy giver
   And the apple of my eye.

**(126)**

*1.* பகைவன் முறிந்தோடிட,
சிறை உடைந்திட,
கட்டுண்டோர் விடுபட்டிட,
ஜெபிக்கக் கற்பியும்.

*2.* போர் சூழ்கையில் களத்தினில்
காலூன்றி நின்றிட,
தாக்கி அரண் தகர்த்திட,
ஜெபிக்கக் கற்பியும்.

*3.* உம் குருதி, உம் கோல் உண்டு,
உம் கொடி மேலுண்டு.
விண் அதிர, மண் அசைய
ஜெபிக்கக் கற்பியும்.

*4.* உம்மோடுழைக்கக் கற்பியும்
விசுவாச ஜெபம்.
உம் வெற்றி பெறக் கற்பியும்
அதிகார ஜெபம்.

1. Teach us to pray that we may cause
   The enemy to flee,
   That we his evil pow’r may bind,
   His prisoners to free.

2. Teach us to pray and firmly stand
   Upon the battleground,
   To fight and break the stronghold down,
   The enemy confound.

3. Teach us to pray and use Thy rod
   In strong, prevailing prayer,
   Beneath Thy blood to shake the earth
   And powers of the air.

4. By prayer and faith, O may we learn
   To labor, Lord, with Thee,
   To know the victory is ours
   And Thine authority.

**(127)**

வானோர் போஜனமே
வானினின்றிறங்கி மகனாய் உதித்தோனே-உம்மை
வாழ்த்தி நாம் துதித்துப் போற்றிடுவோமே
வானுலகாள்வோனே.

1. பூங்காவில் வைத்த தீங்கனிபோலே
   பொழிலுயிர் தருவோனே-நாங்கள்
   தீங்கு சூழ்ந்திடும் தீயோன் பிடி நீங்கி
   வென்றிட அருள்வாயே.

2. பாவிகள் மோட்ச ஜீவனைப் புவியில்
   வாழ்ந்திடச் செய் அமுதே-எம்மை
   ஆவியில் தேற்றி காத்து இரட்சிப்பாய்
   தெய்வீக போஜனமே.

3. தந்தை தம் மக்கள் நொந்திட அருகில்
   வந்திருப்பதுபோல் நீ
   இந்தப் பூவுலகில் சொந்தம் பாராட்டி
   சந்ததமே இருப்பாய்.

**(128)**

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா,
   ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்;

ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்.

*ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம்,*
*ஜீவியத்திற்கு இதுவே சட்டம்;*
*ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம்,*
*ஜீவியத்திற்கு இதுவே சட்டம்.*

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்,
வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டு,
நோக்கத்தையெல்லாம் நேர்மையாக்கி,
கேட்கும்படிக் கிருபை செய்வீர்.

3. இடைவிடாமல் ஜெபம் செய்ய,
இடையூறெல்லாம் நீக்கிவிடும்;
களைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசிமட்டும் காத்திருப்போம்.

## D-5 கிறிஸ்துவைக் கற்றல்

**(129)**

1. அருமை என்றும் பெருமை என்றும்
பார் கொண்டாடும் பெறப் போராடும்
இலாபம் யாவும் வீண், குப்பை, வெறுமை
இயேசுவே, உம்மோடு ஒப்பிட!

உம்மை அறியும் மேன்மைபோல்
உயர்ந்ததொன்றில்லை!
என் நீதி என் மாட்சி என் இன்பம் என்
எல்லாமும் நீர், உம்மை நேசிக்கிறேன்.

2. என் நீதி கந்தை! உம் நீதி தந்தீர்!
என்னை உம்மில் காண்பதென் ஆவல்!
ஒன்று செய்கின்றேன்: உம்மைப் பரிசாய்ப்
பெற ஆசையாய்த் தொடர்கிறேன்.

3. உயிர்த்த உம் உயிரின் ஆற்றலால்
உம் சிலுவைக்கு ஒப்பாகுவேன்,

உம் பாடுகளில் உம்மோடு ஒன்றிப்பேன்
முன்னுயிர்த்தென்றும் உம்மில் வாழ்வேன்.

1. All I once held dear, built my life upon
   All this world reveres, and wars to own
   All I once thought gain I have counted loss
   Spent and worthless now, compared to this

      Knowing you, Jesus, knowing you,
      There is no greater thing
      You're my all, you're the best
      You're my joy, my righteousness
      And I love you, Lord

2. Now my heart's desire is to know you more
   To be found in you and known as yours
   To possess by faith what I could not earn
   All-surpassing gift of righteousness.

3. Oh, to know the power of your risen life
   And to know You in Your sufferings
   To become like you in your death, my Lord
   So with you to live and never die.

**(130)**

1. உம்மை வழியும், உண்மையுமாய்க் கண்டு நான்
   நடக்க தினம் போதித்தருளும்;
   உம்மை ஜீவனாய்க் கொண்டு நாளும்
   வாழ்ந்திடக் கிருபை அருளும்.

      *சுத்தாவியாலே தாங்கி நடத்தி*
      *உம் மக்களை நீர் விடுவியும்*
      *குற்றம் குறைகள் மன்னித்து நாளும்*
      *உம்மில் மகிழச் செய்யுமே.*

2. உம்மை அறிவதே எனது வாஞ்சை,
உம்மை எனக்கு வெளிப்படுத்தும்.
உடன்படிக்கை காக்கும் உத்தமர் நீர்,
உம்மையே சார்ந்து ஜீவிப்பேன்.

**(131)**

எந்தன் ஜீவனிலும் மா அருமை
உந்தன் கிருபை கிறிஸ்தேசுவே!
அந்தமேயில்லா அன்பின் ஆழமதை
எண்ணி நான் துதித்திடுவேனே.

1. சந்தோஷமுடன் துதி சாற்றிடுவேன்,
சந்ததம் நல்கிடும் நன்மைகட்காய்;
நாவினாலே திரு நாமத்தைப் போற்றிட
நாட்களும் போதுமோ நானிலத்தில்.

2. இகமதில் என் பெலன் குறைந்திடினும்,
அகமதில் உம் பெலன் பெருகுவதால்,
கழுகினைப்போல் புது வாலிபம் என்னுள்ளில்
கிருபையால் அனுதினம் வளர்ந்திடுதே.

3. கோதுமை மணி மண்ணில் மாய்வதுபோல்,
சேவையில் ஜீவனை ஊற்றிடினும்,
தேவா நின் கிருபையின் ஊற்றெனில் பாய்வதால்
சோராது நிறைபலன் ஈந்திடுவேன்.

4. அற்புதமாய் என்னை அழைத்தவரே,
அற்பமான எந்தன் சரீரத்தினை
தற்பரனே, உந்தன் சாயலாய் மாற்றிடும்
ஒப்பற்ற சுவிசேஷம் ஈந்திட்டீரே.

5. கிருபையின் பூரணர் வெளிப்படும் நாள்
மகிமையாய் நெருங்கியே வந்திடுதே;
சீர்பொருந்தி அவரோடு நாம் சீயோனில்
சேர்ந்தொன்றாய் வாழுவோம் நித்தியமாய்.

**(132)**

1. மீட்பரின் அழைப்பைக் கேட்டேன்,
அன்பரின் இனிய குரல்;
உன் சிலுவையை எடுத்து
என் பின் வா...நீ...வா...நித்தமும்.

*அவர் காட்டும் பாதை செல்வேன்*
*அன்பரின் அடிச்சுவட்டில்*
*ஆசையோடு பாய்ந்துசெல்வேன்,*
*அவர்பின் செல்வேன், செல்வேன் எப்போதும்.*

2. இருள் பள்ளத்தாக்கினூடே (3)
அவர் பின்செல்வேன்
செல்வேன் எப்போதும்.

3. கெத்சேமனேயே செல்லினும் (3)
அவர் பின்செல்வேன்
செல்வேன் எப்போதும்.

4. போராட்ட முன்னணியிலும் (3)
அவர் பின்செல்வேன்
செல்வேன் எப்போதும்.

5. சோதனை எனைச் சூழ்ந்தாலும் (3)
அவர் பின்செல்வேன்
செல்வேன் எப்போதும்.

1. I can hear my Savior calling,
I can hear my Savior calling,
I can hear my Savior calling,
Take thy cross, and follow, follow Me.

*Where He leads me I will follow,*
*Where He leads me I will follow,*
*Where He leads me I will follow;*
*I'll go with Him, with Him, all the way.*

2. I'll go with Him through the garden,
I'll go with Him through the garden,
I'll go with Him through the garden,
I'll go with Him, with Him, all the way.

3. I'll go with Him thro' the judgement,
I'll go with Him thro' the judgement,
I'll go with Him thro' the judgement,
I'll go with Him, with Him, all the way.

4. He will give me grace and glory,
He will give me grace and glory,
He will give me grace and glory,
And go with me, with me, all the way.

**(133)**

1. ஜீவ அப்பம் பிட்டுத் தாரும், தேவா
கடலோரம் அப்பம் பிட்டதுபோல்
வேதப்பக்கங்களில் உம்மைத் தேடி
ஜீவ வார்த்தை உம்மை நாடுகிறேன்

2. உயிர் தரும் அப்பம் நீர் எனக்கு
உம் தூய வார்த்தை என்னை இரட்சிக்கும்
உன்னத உணவாய் உம்மைத் தாரும்
உண்மை உம்மை நேசிக்கக் கற்பியும்.

3. உண்மையின் ஆவியால் கண் திறவும்
உம் வாக்கில் மறைந்துள்ள உண்மை காண
உம் நூலில் உம்மை வெளிப்படுத்தும்
உம் உண்மை யாவிற்குள்ளும் நடத்தும்.

4. அப்பத்தை ஆசிர்வதித்தது போல்
சத்தியத்தையும் ஆசிர்வதியும்;
கட்டு யாவும் நீங்கி விடுதலை
யாவிலும் யாவும் ஆனீர் எனக்கு.

1. Break Thou the Bread of Life,
   Dear Lord, to me,
   As Thou didst break the loaves
   Beside the sea;
   Beyond the sacred page
   I seek Thee, Lord;
   My spirit pants for Thee,
   O Living Word.

2. Thou art the Bread of Life,
   O Lord, to me,
   Thy holy Word the truth
   That saveth me;
   Give me to eat and live
   With Thee above;
   Teach me to love Thy truth,
   For Thou art Love.

3. Oh, send Thy Spirit, Lord,
   Now unto me,
   That He may touch my eyes,
   And make me see;
   Show me the truth concealed
   Within Thy Word,
   And in Thy Book revealed
   I see the Lord.

4. Bless Thou the truth, dear Lord,
   To me, to me,
   As Thou didst bless the bread
   By Galilee;

Then shall all bondage cease,
All fetters fall,
And I shall find my peace,
My All in all.

## D-6 கிறிஸ்துவின்மேல் அன்பு

**(134)**

1. உம் இரத்தம் சிந்தினீர்,
   உம் உயிரும் தந்தீர்,
   சாவினின்று மீட்க,
   என்னை உயிர்ப்பிக்க!
   உயிரும் தந்தீர் எனக்காய்!
   உமக்கென்ன தந்தேன்?
   உயிரும் தந்தீர் எனக்காய்!
   உமக்கென்ன தந்தேன்?

2. கானகப் பூமியில்
   ஆண்டுகள் கடந்தீர்;
   களைப்பில், துன்பத்தில்
   தனித்தே நடந்தீர்.
   பல்லாண்டு தந்தீர் எனக்காய்!
   ஓராண்டும் தந்தேனோ?
   பல்லாண்டு தந்தீர் எனக்காய்!
   ஓராண்டும் தந்தேனோ?

3. விண்ணின் அரியணை
   மாட்சிமை துறந்தீர்;
   நித்தியமாக நான்
   உம் மாட்சி அறிய.
   எல்லாம் இழந்தீர் எனக்காய்!
   நான் யாது இழந்தேன்?
   எல்லாம் இழந்தீர் எனக்காய்!
   நான் யாது இழந்தேன்?

4. தாங்கொணாப் பாடுகள்,
சொல்லொணா வேதனை,
தாங்கினீர் மௌனமாய்,
நான் நரகம் தப்ப.
எல்லாம் சகித்தீர் எனக்காய்!
நான் யாது சகித்தேன்?
எல்லாம் சகித்தீர் எனக்காய்!
நான் யாது சகித்தேன்?

5. மன்னிப்பு மாதிரள்!
இரட்சிப்பு பூரணம்!
உன்னத ஈவுகள்,
ஈவின்மேல் ஈவுகள்;
எல்லாம் கொணர்ந்தீர் எனக்காய்!
நான் யாது கொணர்ந்தேன்?
எல்லாம் கொணர்ந்தீர் எனக்காய்!
நான் யாது கொணர்ந்தேன்?

6. என் வாழ்வு, ஆண்டுகள்,
உமக்கர்ப்பணித்தேன்.
நான் அன்பின் அடிமை,
வேறு தளை வேண்டாம்!
உம்மையே தந்தீர் எனக்காய்!
உமக்கென்னைத் தந்தேன்.
உம்மையே தந்தீர் எனக்காய்!
உமக்கென்னைத் தந்தேன்.

1. Thy Life was giv'n for me,
Thy blood, O Lord, was shed,
That I might ransomed be,
And quickened from the dead;
Thy Life was giv'n for me, for me;
What have I giv'n for Thee?

2. Long years were spent for me
   In weariness and woe,
   That through eternity
   Thy glory I might know;
   Long years were spent for me, for me;
   Have I spent one for Thee?

3. Thy Father's home of light,
   Thy rainbow-circled throne,
   Were left for earthly night,
   For wanderings sad and lone;
   Yea, all was left for me, for me;
   Have I left aught for Thee?

4. Thou, Lord, hast borne for me
   More than my tongue can tell
   Of bitterest agony,
   To rescue me from hell;
   Thou suff'redst all for me, for me;
   What have I borne for Thee?

5. And Thou hast brought to me
   Down from Thy home above
   Salvation full and free,
   Thy pardon and Thy love;
   Great gifts, great gifts Thou broughtest me;
   What have I brought to Thee?

6. Oh, let my life be given,
   My years for Thee be spent;
   World-fetters all be riven,
   And joy with suff'ring blent;

Thou gav'st Thyself for me, for me,
I give myself to Thee.

**(135)**

1. உம் சித்தம் தேவா, உம் சித்தமே
நீர் என் குயவன், நான் களிமண்
உம் சித்தம்போல வனையும் என்னை
ஒப்புவித்தே நான் காத்திருப்பேன்.

2. உம் சித்தம் தேவா, உம் சித்தமே
ஆராய்ந்து பாரும் நாதா என்னை
தூய்மையாகவே மாற்றும் இன்றே
உம் சமுகம் நான் பணிகிறேன்.

3. உம் சித்தம் தேவா, உம் சித்தமே
வேதனை மாற்றி குணமாக்கும்
வல்லமை யாவும் உமக்குண்டே
தொட்டு உடனே மாற்றும் தேவா.

4. உம் சித்தம் தேவா, உம் சித்தமே
முற்றிலும் என்னை ஆண்டருளும்
ஆவியால் முற்றும் நிரப்பியே
இயேசுவை என்னில் காணச் செய்யும்.

1. Have Thine own way, Lord! Have Thine own way!
Thou art the Potter, I am the clay.
Mold me and make me after Thy will,
While I am waiting, yielded and still.

2. Have Thine own way, Lord! Have Thine own way!
Search me and try me, Master, today!
Whiter than snow, Lord, wash me just now,
As in Thy presence humbly I bow.

3. Have Thine own way, Lord! Have Thine own way!
Wounded and weary, help me, I pray!

Power, all power, surely is Thine!
Touch me and heal me, Savior divine.

4. Have Thine own way, Lord! Have Thine own way!
Hold o’er my being absolute sway!
Fill with Thy Spirit ’till all shall see
Christ only, always, living in me.

**(136)**

1. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்,
யாவையும் தாராளமாய்;
என்றும் அவரோடு தங்கி
நம்பி நேசிப்பேன் மெய்யாய்.

*ஒப்புவிக்கிறேன், ஒப்புவிக்கிறேன்;*
*நேச இரட்சகா, நான் யாவும் ஒப்புவிக்கிறேன்.*

2. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்,
அவர் பாதம் பணிந்தேன்;
லோக இன்பம் யாவும் விட்டேன்,
இப்போதேற்றுக் கொள்ளுமேன்.

3. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்,
முற்றும் ஆட்கொண்டருளும்;
நான் உம் சொந்தம், நீர் என் சொந்தம்,
சாட்சியாம் தேவாவியும்.

4. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்,
நாதா அடியேனையும்;
அன்பு, பெலத்தால் நிரப்பி,
என்னை ஆசீர்வதியும்.

5. இயேசுவுக்கே ஒப்புவித்தேன்,
திவ்ய ஜூவாலை வீசுதே;
பூர்ண இரட்சை பேரானந்தம்
சதா ஸ்தோத்ரம் அவர்க்கே.

1. All to Jesus I surrender,
   All to Him I freely give;
   I will ever love and trust Him,
   In His presence daily live.

   *I surrender all, I surrender all.*
   *All to Thee, my blessed Savior, I surrender all.*

2. All to Jesus I surrender,
   Humbly at His feet I bow,
   Worldly pleasures all forsaken;
   Take me, Jesus, take me now.

3. All to Jesus I surrender,
   Make me, Savior, wholly Thine;
   Let me feel Thy Holy Spirit,
   Truly know that Thou art mine.

4. All to Jesus I surrender,
   Lord, I give myself to Thee;
   Fill me with Thy love and power,
   Let Thy blessing fall on me.

5. All to Jesus I surrender,
   Now I feel the sacred flame.
   Oh, the joy of full salvation!
   Glory, glory to His name!

**(137)**

இன்ப இயேசுவின் இணையில் நாமத்தைப் புகழ்ந்து,
இகமதில் பாடிட தருணமிதே;
இயேசுவைப்போல நல் நேசரில்லை
இன்றும் என்றென்றும் அவர் துதி சாற்றிடுவேன்.

1. நித்தியமான பர்வதமே, உந்தனில் நிலைத்திருப்பேன்
நீங்கிடாதென்னைத் தோளின்மேல் சுமந்தே,
நித்தம் நடத்துகிறீர்;
என்னையும் உம் ஜனமாய் நினைத்தே-ஈந்தீர்
உன்னத வெளிப்படுத்தல் நிறைவாய்.

2. பாவத்தில் வீழ்ந்து மாயையிலே, ஆழ்ந்து நான் மாள்கையிலே
பரிந்து தேவ அன்பினைக் காட்டியே,
பட்சமாய்ப் பார்த்தெடுத்தீர்;
பாரில் பரிசுத்தராகுதற்காய்-மிக
பரலோக நன்மைகளால் நிறைத்தீர்.

3. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல்
என் ஆத்துமா உம் பொன் முகம் காணவே,
வாஞ்சித்துக் கதறிடுதே;
வானிலும் இந்தப் பூவிலும் நீர்-என்
வாஞ்சைகள் தீர்ப்பவராய் நினைத்தே.

4. சீயோனிலே நீர் சிந்தை வைத்தீர் சேர்த்தொன்றாய்க்
கட்டுதற்காய்
திவ்யபிஷேகம் தந்தெம்மை நிறுத்தி,
சேர்த்தீரே சுத்தருடன்;
சேதம் வராமல் காத்ததினால்-உம்மை
சேவிப்போம் நித்திய நித்தியமாய்.

5. ஆர்ப்பரிப்போடே ஸ்தோத்திரிப்போம் அன்பரை உளம்
கனிந்தே,
அளவில்லாத ஜீவனை அளித்தே
அற்புத ஜெயம் ஈந்தீரே;
அல்லேலூயா துதி கனம் மகிமை-உம்
நாமத்திற்கே நிதம் சாற்றிடுவோம்.

**(138)**

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே, நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்;
உம்மைப்போல் ஒரு தேவனை பூமியில் அறிந்திடேன்,
உயிர் தந்த தெய்வமே நீர்

*ஆ! ஆனந்தம், ஆனந்தமே!*
*அல்லும் பகலிலும் பாடிடுவேன்!*
*இயேசுவே, எந்தன் ஆருயிரே!*

2. பெற்ற தாயும் என் தந்தையுமானவரே,
மற்றும் எல்லாம் எனக்கு நீரே;
வானம் பூமியும் யாவுமே மாறிடினும் நீரோ
வாக்கு மாறாதவரே.

3. உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே,
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்;
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வமே நீர்.

4. பொன் வெள்ளியுமோ, பெரும் பேர் புகழோ,
பண ஆசையும் வீணல்லவோ!
பரலோகத்தின் செல்வமே, என் அரும் இயேசுவே,
போதும் எனக்கு நீரே.

5. எந்தன் சிருஷ்டிகரே, உம்மை நினைத்திடவே,
தந்த வாலிப நாட்களிலே;
இந்த மாய உலகத்தை வெறுத்திட அளித்தீரே
பரிசுத்த ஜீவியமே.

**(139)**

எந்தன் இயேசு வல்லவர், என்றும் நடத்துவார்;
ஆ! பேரின்பம், அவர் என் தஞ்சமே,
அனுதினம் அன்பருடன் இணைந்து செல்லுவேன்.

1. அற்புதமாம் அவர் அன்பு,
அண்டினோர் காக்கும் தூய அன்பு;
இப்பூவினில் இவரைப்போல் அன்பர் எவருண்டு?
மாறாதவர் எந்தன் இயேசு என்றும் பற்றிடுவேன்.

2. குற்றங்களை மன்னித்தவர்
தம்மோடு என்னைச் சேர்த்துக்கொண்டார்;
எந்தன் நேசர் ஒப்பற்றவர், பொறுமை நிறைந்தவர்,
சார்ந்திடுவேன் இந்நிலத்தே எந்தன் தஞ்சமிவர்.

3. சர்வ வல்ல தேவனிவர்,
சாந்தமாய் தாழ்ந்த மாந்தரிவர்;
எந்நாளுமே எந்தனையே தாங்கிடும் வல்லவராம்
நம்பிடுவேன் என்றென்றுமாய் எந்தன் இயேசுவை.

4. கர்த்தர் எந்தன் மேய்ப்பராவார்,
சீரான பாதை நடத்திடுவார்;
எந்தன் வழி செம்மையாக்கி ஏற்று நிறுத்துவார்,
எந்தன் நேசர் முன்செல்லுவார், என்றும் பின்செல்லுவேன்.

**(140)**

1. எந்தன் ஜீவன் இயேசுவே,
சொந்தமாக ஆளுமே;
எந்தன் காலம் நேரமும்,
நீர் கையாண்டேயருளும்.

2. எந்தன் கை பேரன்பினால்,
ஏவப்பட, எந்தன் கால்
உந்தன் வேலை செய்யவும்
விரைவாகச் செய்யுமேன்.

3. எந்தன் நாவு இன்பமாய்
உம்மைப் பாடவும், என் வாய்
மீட்பின் செய்தி கூறவும்
ஏதுவாக்கியருளும்.

4. எந்தன் ஆஸ்தி, தேவரீர்
முற்றும் அங்கீகரிப்பீர்;
புத்தி, கல்வி யாவையும்
சித்தம்போல் பிரயோகியும்.

5. எந்தன் சித்தம் இயேசுவே,
ஒப்புவித்துவிட்டேனே;
எந்தன் நெஞ்சில் தங்குவீர்
என்னை நித்தம் ஆளுவீர்.

6. திருப்பாதம் போற்றினேன்,
எந்தன் நேசம் ஊற்றினேன்;

என்னையே சமூலமாய்த்
தத்தம் செய்தேன் நித்தமாய்.

1. Take my life, and let it be
   Consecrated, Lord, to Thee;
   Take my moments and my days,
   Let them flow in ceaseless praise,
   Let them flow in ceaseless praise.

2. Take my hands, and let them move
   At the impulse of Thy love;
   Take my feet and let them be
   Swift and beautiful for Thee,
   Swift and beautiful for Thee.

3. Take my voice, and let me sing
   Always, only, for my King;
   Take my lips, and let them be
   Filled with messages from Thee,
   Filled with messages from Thee.

4. Take my silver and my gold;
   Not a mite would I withhold;
   Take my intellect, and use
   Every power as Thou shalt choose,
   Every power as Thou shalt choose.

5. Take my will, and make it Thine;
   It shall be no longer mine.
   Take my heart; it is Thine own;
   It shall be Thy royal throne,
   It shall be Thy royal throne.

6. Take my love; my Lord, I pour
At Thy feet its treasure-store.
Take myself, and I will be
Ever, only, all for Thee,
Ever, only, all for Thee.

**(141)**

1. எப்போதும், இயேசுநாதா உம்மைப் பின்பற்றுவேன்
என்றே தீர்மானமாக நான் வாக்குக் கொடுத்தேன்;
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர், அப்போது அஞ்சிடேன்;
முன்சென்று பாதை காட்டும், நான் வழி தவறேன்.

2. பூலோக இன்பம், செல்வம், வீண் ஆசாபாசத்தால்
என் ஆத்மா மயங்காமல் தெய்வீக பலத்தால்
நீர் துணை நின்று தாங்கும்; என் அருள் நாயகா!
தீங்கணுகாமல் காரும், மா வல்ல இரட்சகா!

3. ஆங்காரம், சுயசித்தம், தகாத சிந்தனையால்
மா கலக்கம் உண்டாகி நான் தடுமாறினால்
நீர் பேசும், அருள்நாதா! கொந்தளிப்படங்கும்,
உம் நேச சத்தம் கேட்டு என் ஆவி மகிழும்.

4. "பின்பற்றினால் விண்வீட்டில் பேரின்பம் பெறுவீர்,"
என்றே உம் சீடர்நோக்கி நீர் வாக்கு அளித்தீர்.
அவ்வருள் வாக்கை நம்பி இவ்வேழை அடியேன்
"இதோ பின்செல்வேன்" என்று பிரதிக்ஞை பண்ணினேன்.

5. ஓயாமல் பெலன் தாரும், உம் அடிச்சுவட்டில்
கால் வைத்து நடந்தேகி நான் யாத்திரை செய்கையில்
நீர் வழிகாட்டி, என்னை கைதாங்கி வருவீர்;
அப்பாலே உம் வீட்டில் பேர் வாழ்வை அருள்வீர்.

1. O Jesus, I have promised to serve Thee to the end;
Be Thou forever near me, my Master and my Friend;
I shall not fear the battle if Thou art by my side,
Nor wander from the pathway if Thou wilt be my Guide.

2. O let me feel thee near me! the world is ever near;
I see the sights that dazzle, the tempting sounds I hear;
My foes are ever near me, around me and within;
But Jesus, draw thou nearer, and shield my soul from sin.

3. Oh, let me hear Thee speaking in accents clear and still,
I dare not trust my judgment: Thy way shall be my will;
Oh, speak to reassure me, to hasten or control;
Oh, speak, and help me listen, Thou Guardian of my soul.

4. O Jesus, Thou hast promised to all who follow Thee
That where Thou art in glory there shall Thy servant be;
And Jesus, I have promised to serve Thee to the end—
Oh, give me grace to follow, my Master and my Friend.

5. Oh, let me see Thy footprints, and in them plant mine own;
My hope to follow duly is in Thy strength alone;
Oh, guide me, call me, draw me, uphold me to the end;
And then in Heav'n receive me, my Savior and my Friend.

**(142)**

என்னிடம் எழுந்த இயேசுவே உமக்கு
அன்பு ஆராதனை நன்றியும் என்றும்.

1. பரலோக வாசிகள் அருமையாய் உம்மை
புகழ்ந்து கொண்டாடிப் புவியிலே இந்த
நீசனாம் என்னிடம் எழுந்ததும் ஏனோ
நேசமும் அதிசய இரக்கமும் அன்றோ

2. மாசில்லா இயேசு ஆவியில் மறைந்து
நேசமாய் என்னுள் எழுந்து வந்தீரென
ஆசையாய் இயேசுவே விசுவாசித்துமக்கு
பாசமாய் நன்றி செலுத்துகின்றேனே.

**(143)**

1. கிறிஸ்துவே உம்மையே
நேசிக்கிறேன்
மேன்மேலும் நேசிக்க
உதவுமே.
என் ஜெபம் இதுவே,
முழு இதயத்தோடே
உம்மை நாதா நேசிக்கவே.

2. லோகத்தின் இன்பத்தை
நாடி வந்தேன்
இப்போதும் பாதத்தைத்
தேடி வாரேன்
என் ஜெபம் அனைத்தும்
இயேசுவே உம்மையே
அதிகமாய் நேசிக்கவே.

3. துன்பம் துயரத்தை
உம் கரத்தால்
அனுப்பும், இன்பமாய்
ஏற்றுக்கொள்வேன்.
என் கீதம் இயேசுவே
நான் உம்மை மேன்மேலும்
நேசிக்கவே, நேசிக்கவே.

4. என் சாவு வேளையில்
போற்றிடுவேன்
இறுதி ஜெபத்தில்
கதறுவேன்.
இயேசுவே உம்மையே
மேன்மேலும் நேசிக்க
வாஞ்சிக்கிறேன், வாஞ்சிக்கிறேன்.

1. More love to Thee, O Lord,
More love to Thee!

Hear Thou the prayer I make
On bended knee;
This is my earnest plea:
More love, O Lord, to Thee,
More love to Thee,
More love to Thee!

2. Once earthly joy I craved,
Sought peace and rest;
Now Thee alone I seek,
Give what is best;
This all my prayer shall be:
More love, O Lord, to Thee,
More love to Thee,
More love to Thee!

3. Let sorrow do its work,
Send grief and pain;
Sweet are Thy messengers,
Sweet their refrain,
When they can sing with me,
More love, O Lord, to Thee,
More love to Thee,
More love to Thee!

4. Then shall my latest breath
Whisper Thy praise;
This be the parting cry
My heart shall raise;
This still its prayer shall be:
More love, O Lord, to Thee,

More love to Thee,
More love to Thee!

**(144)**

நான் உம்மை மாத்திரம் நேசிப்பேன்,
நான் உம்மை மாத்திரம் நேசிப்பேன்,
நான் உம்மை மாத்திரம் நேசிப்பேன்,
அன்பின் சொருபி நீர்.

1. என்னில் நீர் அன்புகூர்ந்தீரே,
மனுஉருவில் வந்தீரே,
உம் தூய இரத்தம் சிந்தினீரே,
உம் ஜீவனைத் தந்தீர்.

2. பின்பற்றுவேன் என் தேவனே,
பின்பற்றுவேன் நான் நாள்தோறும்,
உம் கிருபையால் நான் நிலைநிற்பேன்,
பின்வாங்கமாட்டேன் நான்.

## D-7 கிறிஸ்து நம் ஜீவன்

**(145)**

இயேசு தெய்வீகமே! *(4)*

1. அருளும் தயையும் நிறைந்தவா
அமிர்த போஜனமே!
வந்தீரே எங்களின் உள்ளமதில்
தந்தீர் உம் ஜீவனையே.

2. அன்னையின் அன்பையும் வென்றவரே!
ஆருயிர் ஈந்தவரே!
தன்னையே பலியாய்த் தந்தமைக்கு
என்னவோ நன்றி சொல்வோம்.

3. உயர்ந்த மன்னாவை அருந்தியோர்
இறந்தார் அந்நாளிலே;

இறவார் எவரும் எந்நாளுமே
உம்மையே அருந்தினோர்

**(146)**

1. இயேசுவே, உம் ஜீவன்
எனது, என்னில் வாழும்;
என்னினின்று உம் ஜீவனை
ஒன்றும் பிரிக்காதே.

2. உம் ஜீவன் காண்பிப்பேன்;
உம் எண்ணம் எண்ணவும்,
உம் சொற்கள் பேசவும்
நாடுவேன், எனதைத் தேடேன்.

3. உம் அன்பு, மகிழ்ச்சி,
சமாதானம் தாரும்;
என் உள்ளத்துள் வற்றாப் புதுச்
சுனைகள் பொங்கட்டும்.

4. உயிர்ப்பின் வல்லமை
உம் சபையின் பாக்கியம்;
உம் ஜீவன் நிறைவாய்க்
கர்த்தாவே, எனக்கருளும்.

5. உம் வாக்கின்படி, உம்
நாமத்தில் கேட்கின்றேன்
பூரண ஈவை; ஆனந்த
துதி ஏறெடுப்பேன்.

6. இயேசுவே, என் ஜீவன்
உமது என்றுமே;
என்னினின்று உம் ஜீவனை
ஒன்றும் பிரிக்காதே.

1. Jesus, Thy life is mine,
Dwell evermore in me;
And let me see

That nothing can untwine
Thy life from mine.

2. Thy life in me be shown,
Lord, I would henceforth seek
To think and speak
Thy thoughts, Thy words alone,
No more my own.

3. Thy love, Thy joy, Thy peace,
Continuously impart
Unto my heart,
Fresh springs that never cease,
But still increase.

4. The best reality
Of resurrection power,
Thy Church's dower,
Life more abundantly,
Lord, give to me.

5. Thy fullest gift, O Lord,
Now at Thy word I claim,
Through Thy dear Name,
And touch the rapturous chord
Of praise forth-poured.

6. Jesus, my life is Thine,
And evermore shall be
Hidden in Thee,
For nothing can untwine
Thy life from mine.

**(147)**

ஒளியாம் இறைவா வாரீர்!
எளியோர் நெஞ்சம் தனிலே!

1. விண்ணில் வாழும் விமலா!
மண்ணில் மாளும் மாந்தர்
உம்மில் என்றும் வாழ,
எம்மில் வந்தீர் உயிராய்!
ஒளியே. அருளே, வருக! (2)

2. உயிரைத் தரும் விண்தருவே!
ஊனில் இறைவன் உருவே!
உயிரும் உயிர்ப்பும் உம்மால்
வளமும் வாழ்வும் உம்மால்!
ஒளியே, அருளே, வருக (2)

3. அருளே பொங்கும் குருவே!
பெருகும் மகிமைத் திருவே!
குறையை நீக்கும் பரிவாய்
நிறைவை அளிப்பீர் மறைவாய்!
ஒளியே, அருளே, வருக! (2)

**(148)**

1. கிறிஸ்து என்னில் ஜீவனாய் உள்ளார்,
எப்போதும் ஆவியால் நடத்துகிறார்!
பலவீனத்தைப் பலமாய்,
இருளை ஒளியாய்
மாற்றுகின்றார். மகிமை! மகிமை!

2. மகிமை! மகிமை! கர்த்தரால் வாழ்கிறேன்,
ஆவியால் நடக்கிறேன் அவர் வார்த்தையில்,
தோல்வியை ஜெயமாய்,
துயரைத் துதியாய்
மாற்றுகின்றார். மகிமை! மகிமை!

1. Glory! Glory! Christ is life in me,
   As the Spirit leading constantly!
   What was weak is mighty,
   What was dark is light,
   Glory! Glory! Christ is life in me!

2. Glory, Glory! Living by the Lord,
   Walking by the Spirit in His Word!
   Failure's turned to vict'ry,
   Sighing's turned to praise.
   Glory! Glory! Living by the Lord!

**(149)**

1. கிறிஸ்துவே ஜீவ ஊற்று,
   இன்ப ஜீவ சுனை;
   ஜீவ ஓடை ருசித்தேன்,
   துன்பம் துயர் நீங்கிற்றே.
   ஆழி நிறைவுபோல
   உம் தயை பெருகும்;
   உம் ஞானம் ஈந்த கிருபை
   போதுமானதுவே.

2. நான் நேசருடையவள்,
   என் நேசர் என்னவர்;
   நீசன் என்னைக் கொணர்ந்தார்
   இன்ப ரச வீட்டிற்கு.
   நேசர் நீதிமேல் அல்லால்
   வேறொன்றில் நில்லேன் நான்.
   தம் பிரசன்னத்தால் மூடி
   கைகளால் பற்றினார்.

3. மணாளியின் கண்ணெல்லாம்
   மணாளன் முகமே;
   மன்னரையே நோக்குவேன்,
   என் மகிமை நோக்கேன்;

துளையுண்ட கை பார்ப்பேன்
சூட்டும் கிரீடம் நோக்கேன்
செம்மறியானவரே
எல்லா மகிமையும்!

1. O Christ, He is the fountain,
The deep, sweet well of life:
Its living streams I've tasted
Which save from grief and strife.
And to an ocean fulness,
His mercy doth expand;
His grace is all-sufficient
As by His wisdom planned.

2. O I am my Beloved's,
And my Beloved's mine;
He brings a poor vile sinner
Into His house of wine!
I stand upon His merit;
I know no other stand.
I'm hidden in His presence
And held by His own hand.

3. The Bride eyes not her garment,
But her dear Bridegroom's face;
I will not gaze at glory,
But on my King of grace:
Not at the crown He giveth,
But on His pierced hand;
The Lamb is all the glory,
And my eternal stand!

**(150)**

1. தேவனில்லாமல் பாவத்தில்
மரித்துக் கிடந்தேன்;
தேவ வார்த்தையில் ஒளி கண்டேன்
என்னில் கிறிஸ்து வாழ்கிறார்.

*கிறிஸ்து வாழ்கிறார்,*
*என்னில் வாழ்கிறார்;*
*ஓ! மாபெரும் இரட்சிப்பு,*
*கிறிஸ்து-என்னில் வாழ்கிறார்.*

2. சூரியன் கதிரைத் தருதல்போல்
நிலத்தில் மலரைப்போல்,
உள்வாழும் கிறிஸ்துவிலிருந்து
ஜீவன், ஒளி, அன்பு வரும்.

3. விதைக்குள் பூ வாழ்வதுபோல்,
காய்க்குள் மரத்தைப்போல்,
கிருபை, சத்தியம் நிறைந்தவர்
ஆவி என்னில் வசிக்கின்றார்.

4. இயேசுவைப்போல் ஆகும் வாஞ்சை
என் இதயம் நிரப்புதே;
கிறிஸ்தென்னில் வாழ்கின்றார் என்னும்
பேருண்மையை எண்ண எண்ண.

1. Once far from God and dead in sin,
No light my heart could see;
But in God's Word the light I found,
Now Christ liveth in me.

*Christ liveth in me,*
*Christ liveth in me;*
*Oh! what a salvation this,*
*That Christ liveth in me.*

2. As rays of light from yonder sun,
   The flow'rs of earth set free,
   So life and light and love come forth
   From Christ living in me.

3. As lives the flow'r within the seed,
   As in the cone the tree,
   So, praise the Christ of truth and grace,
   His Spirit dwelleth in me.

4. With longing all my heart is filled,
   That like Him I may be,
   As on the wondrous thought I dwell
   That Christ liveth in me.

**(151)**

நானே வானினின்று இறங்கி வந்த
உயிருள்ள உணவு-இதை
யாராவது உண்டால்-அவன்
என்றுமே வாழ்வான்.*(2)*

1. எனது உணவை உண்ணும் எவரும் பசியை அறிந்திடார் ஆ
   என்றும் எனது குருதி பருகும் எவரும்
   தாகம் தெரிந்திடார்.

2. அழிந்துபோகும் உணவிற்காக உழைத்திட வேண்டாம் ஆ
   என்றும் அழிந்திடாத வாழ்வு கொடுக்கும்
   உணவிற்கே உழைப்பீர்.

3. மன்னா உண்ட முன்னோர் எல்லாம் மடிந்துபோயினர் ஆ
   எங்கள் மன்னன் உம்மை உண்ணும் எவரும்
   மடிவதேயில்லை

**(152)**

1. நீரே என் ஜீவன், இயேசுவே
நீரே, என்னில் வாழுமே;
நீரே நிறைவான தீர்வு
என் பிரச்சினைகட்கெல்லாம்.
நீரே என்னில் வாழும்; முற்றும்
உம் சித்தமே ஆகட்டும்;
கண்ணாடிப் பாத்திரம்போல் நான்
காண்பிப்பேன் குமாரனை.

2. ஆலயமாய் அர்ப்பணித்தேன்,
பாவக் கறைகள் அற;
உம் மகிமைத் தீ இப்போது
என்னில் வெளியாகட்டும்;
உம்மால் ஆற்றலூட்டப்படும்
உம் அடிமையாகவே
உவந்தென் உடலை ஈந்தேன்,
உலகோர் வியக்கட்டும்.

3. உம் ஆணைக்காய்க் காத்திருப்பேன்,
எப்போதும் ஆயத்தமாய்,
நுகம்கீழ் கடும் வேலையோ,
தள்ளப்பட்டு நிற்பதோ,
நீர் மட்டுப்படுத்தும்போது
கலக்கம் அடைந்திடேன்;
நீர் அன்பால் சிட்சிக்கும்போது
துக்கித்துக் குறை கூறேன்.

4. என் ஆசைகள் புறம்தள்ளி,
ஓய்ந்திருப்பேன் உமக்காய்;
தங்கு தடையின்றி நீரே
என் வழியைத் தேர்ந்தெடும்;
நீரே என் ஜீவன் இயேசுவே,
நீரே என்னில் வாழுமே.
நீரே நிறைவான தீர்வு,
என் பிரச்சினைகட்கெல்லாம்.

1. Live Thyself, Lord Jesus, through me,
For my very life art Thou;
Thee I take to all my problems
As the full solution now.
Live Thyself, Lord Jesus, through me,
In all things Thy will be done;
I but a transparent vessel
To make visible the Son.

2. Consecrated is Thy temple,
Purged from every stain and sin;
May Thy flame of glory now be
Manifested from within.
Let the earth in solemn wonder
See my body willingly
Offered as Thy slave obedient,
Energized alone by Thee.

3. Every moment, every member,
Girded, waiting Thy command;
Underneath the yoke to labor
Or be laid aside as planned.
When restricted in pursuing,
No disquiet will beset;
Underneath Thy faithful dealing
Not a murmur or regret.

4. Ever tender, quiet, restful,
Inclinations put away,
That Thou may for me choose freely
As Thy finger points the way.

Live Thyself, Lord Jesus, through me,
For my very life art Thou;
Thee I take to all my problems
As the full solution now.

**(153)**

1. மாட்சியில் ஓர் மனிதர்,
எனதவர் ஜீவன்;
தூயர், சுத்தர்,
ஜெயாளி, சுந்தரர்,
ஞானர், அன்பர்
என்னே மேன்மையானவர்!
மாட்சியில் அவர் ஜீவன்,
என் ஜீவனாக;
மாட்சியில் அவர் ஜீவன்,
என் ஜீவனாக.

2. மாட்சியில் ஓர் மனிதர்,
எனதவர் ஜீவன்;
சாத்தானை ஜெயித்து
தளை முறித்தார்;
ஜீவனில் ஆள்கின்றார்
என்னே மாவேந்தன்!
மாட்சியில் அவர் ஜீவன்,
என் ஜீவனாக;
மாட்சியில் அவர் ஜீவன்,
என் ஜீவனாக.

3. மாட்சியில் ஓர் மனிதர்,
எனதவர் ஜீவன்;
இல்லை அவரில் நோய்
பலவீனம்;
மிஞ்சும் பலவான்,
பொங்கும் ஆற்றலோன்,
மாட்சியில் அவர் ஜீவன்,

*எனதாகட்டும்;*
*மாட்சியில் அவர் ஜீவன்,*
*எனதாகட்டும்.*

*4. மாட்சியில் ஓர் மனிதர்,*
*எனதவர் ஜீவன்;*
*தங்கும் சமாதானம்*
*என்னே சாந்தம்!*
*களிகூருவார்*
*காணும் வாஞ்சையில்;*
*மாட்சியில் அவர் ஜீவன்*
*என் வழி வாழ,*
*மாட்சியில் அவர் ஜீவன்*
*என் வழி வாழ.*

1. There's a Man in the glory
Whose Life is for me.
He's pure and He's holy,
Triumphant and free.
He's wise and He's loving
How tender is He!
His Life in the glory,
My life must be;
His Life in the glory,
My life must be.

2. There's a Man in the glory
Whose Life is for me.
He overcame Satan;
From bondage He's free.
In Life He is reigning;
How kingly is He!
His Life in the glory,

My life must be;
His Life in the glory,
My life must be.

3. There's a Man in the glory
Whose Life is for me.
In Him is no sickness;
No weakness has He.
He's strong and in vigor,
How buoyant is He!
His Life in the glory
My life may be;
His Life in the glory
My life may be.

4. There's a Man in the glory
Whose Life is for me.
His peace is abiding;
How patient is He!
He's joyful and radiant,
Expecting to see
His Life in the glory
Lived out in me;
His Life in the glory
Lived out in me.

**(154)**

*1.* வாழ்வை அளிக்கும் வல்லவா,
தாழ்ந்த என்னுள்ளமே;
வாழ்வில் ஒளியை ஏற்றவே
எழுந்து வந்தீரே.

2. ஏனோ இந்தப் பாசமே,
ஏழை என்னிடமே;
எண்ணில்லாத பாவமே
புரிந்த பாவிமேல்.

3. உலகம் யாவும் வெறுமையே
உம்மை யான் பெறும்போது;
உறவு என்று இல்லையே
உம் உறவு வந்ததால்.

4. எந்த மன்னர் உம்மைப்போல்
பொங்கும் அன்பினால்
வந்து எமது நடுவிலே
தங்கி மகிழுவார்?

5. அன்பு ஒன்றைக் கேட்கின்றீர்
அதையே தருகின்றேன்;
இதய அன்பு யாவுமே
இனிதே தருகின்றேன்.

## D-8 கிறிஸ்துவுக்குள் வளர்தல்

**(155)**

அன்பே பிரதானம், சகோதர
அன்பே பிரதானம்.

1. பண்புறு ஞானம், பரம நம்பிக்கை
இன்ப விஸ்வாசம், இவைகளிலெல்லாம்.

2. பலபல பாஷை படித்தறிந்தாலும்
கலகலவென்னும் கைமணியாமே.

3. என் பொருள் யாவும் ஈந்தளித்தாலும்
அன்பிலையானால் அதிற் பயனில்லை.

4. துணிவுடன் உடலைச் சுடக்கொடுத்தாலும்
பணிய அன்பில்லால் பயனதிலில்லை.

5. சாந்தமும், தயவும், சகல நற்குணமும்
போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள.

6. புகழிறுமாப்பு, பொழிவு, பொறாமை
பகைய நியாயப் பாவமும் செய்யா.

7. சினமடையாது, தீங்குமுன்னாது,
தினமழியாது, தீமை செய்யாது.

8. சகலமும் தாங்கும், சகலமும் நம்பும்,
மிகைப்பட வென்றும் மேன்மை பெற்றோங்கும்.

**(156)**

1. அன்று ஆசை ஆசீர், இன்றோ ஆண்டவர்;
அன்று சார்பு காட்சி, இன்றோ வேதமே;
அன்று நாட்டம் ஈவு, இன்றோ ஈபவர்;
அன்று தேட்டம் சுகம், இன்றோ இயேசுவே.

என்றென்றும் கிறிஸ்துவே, என்றும் பாடுவேன்,
எல்லாம் கிறிஸ்துவிலே, எல்லாமும் கிறிஸ்துவே.

2. அன்று நோக நின்றேன், இன்றோ சாய்ந்துள்ளேன்;
அன்று இரட்சை பாதி, இன்றோ பூரணம்;
அன்று என் கை, இன்றோ அவர் கைகளே;
அன்று அங்கும்இங்கும், இன்றோ நங்கூரம்.

3. அன்று ஓயாத் திட்டம், இன்றோ ஓய்வுண்டு;
அன்று தத்தளிப்பு, இன்றோ வேண்டுதல்;
அன்று என் விருப்பம், இன்றோ அவர் சொல்;
அன்று என்றும் கேட்டல், இன்றோ நன்றியே.

4. அன்று என் பணி, இன்றோ உடன்பணி,
அன்று ஆளுகை, இன்றோ அடிமை நான்,
அன்று என் வல்லமை, இன்றோ வல்லவர்,
அன்று என் மகிமை, இன்றோ மகிபன்.

5. அன்று இயேசு நிழல், இன்றோ மெய் அவர்;
அன்று மங்கும் தீபம், இன்றோ ஒளியே;
அன்று விதி சாவு, இன்றோ உயிர்ப்பு
என் நம்பிக்கை நங்கூரம் திரைக்குள்ளே.

1. Once it was the blessing, now it is the Lord;
Once it was the feeling, now it is His Word.
Once His gift I wanted, now, the Giver own;
Once I sought for healing, now Himself alone.

All in all forever, only Christ I'll sing;
Everything is in Christ, and Christ is everything.

2 Once 'twas painful trying, now 'tis perfect trust;
Once a half salvation, now the uttermost.
Once 'twas ceaseless holding, now He holds me fast;
Once 'twas constant drifting, now my anchor's cast.

3 Once 'twas busy planning, now 'tis trustful pray'r;
Once 'twas anxious caring, now He has the care.
Once 'twas what I wanted, now what Jesus says;
Once 'twas constant asking, now 'tis ceaseless praise.

4 Once it was my working, His it hence shall be;
Once I tried to use Him, now He uses me.
Once the pow'r I wanted, now the Mighty One;
Once for self I labored, now for Him alone.

5 Once I hoped in Jesus, now I know He's mine;
Once my lamps were dying, now they brightly shine.
Once for death I waited, now His coming hail;
And my hopes are anchored, safe within the veil.

**(157)**

*1.* இயேசுவே, என்னில் வளரும்,
மற்றெல்லாம் குன்றட்டும்.
என் இதயம் உம்மை நெருங்கட்டும்,
பாவம் ஓயும்.

நாளும் என் பலவீனத்தில்
உம் பெலன் தாங்கட்டும்.
உம் ஒளி இருள் போக்கும், உம்
ஜீவன் சாவை நீக்கும்.

2. என்மேல் வீசும் உம் பிரகாசத்தால்
மங்கும் தீ(ய) எண்ணம்.
நான் ஒன்றுமில்லை, நீரே எல்லாம்,
நாளும் போதியும்.

3. தூயர், ஞானர், மெய்யர் உம் மாட்சி
இன்னும் காணட்டும்,
இன்ப துன்பத்தில் நான் உம்
ஜீவ சாயலாகட்டும்.

4. உம் களிப்பால் நிரப்பும்,
தெய்வ பலத்தால் தாங்கும்;
உம் பேரன்பின் சுடர் முற்றும்
என்மூலம் வீசட்டும்.

5. சுயம் இன்னும் தேயட்டும்,
நீர் என் ஜீவனாய் மாறும்;
உம் கிருபையால் நாளும் உம்போல்
நான் வாழச் செய்திடும்.

1. O Jesus Christ, grow Thou in me,
And all things else recede;
My heart be daily nearer Thee,
From sin be daily freed.

Each day let Thy supporting might
My weakness still embrace;
My darkness vanish in Thy light,
Thy life my death efface.

2. In Thy bright beams which on me fall,
   Fade every evil thought;
   That I am nothing, Thou art all,
   I would be daily taught.

3. More of Thy glory let me see,
   Thou Holy, Wise, and True;
   I would Thy living image be,
   In joy and sorrow too.

4. Fill me with gladness from above,
   Hold me by strength divine;
   Lord, let the glow of Thy great love
   Through all my being shine.

5. Make this poor self grow less and less,
   Be Thou my life and aim;
   Oh, make me daily through Thy grace
   More meet to bear Thy name.

**(158)**

1. உந்தன் வழியில் என்றென்றுமாய்
   என்னையே நடத்தி, தினம் போதித்தருளும்;
   உந்தன் சத்தியம் என்றென்றுமாய்
   காத்திட கிருபையருளும்.

2. திருக்கரத்தாலே தாங்கி நடத்தி
   உமது ஜனத்தை விடுவியும்;
   குற்றம் குறைகள் மன்னித்து யாவும்
   உம்மில் மகிழச் செய்யுமே.

**(159)**

1. எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா!
   உந்தன் வீடாய்க் கொள்ளும், இயேசு நாயகா!

இயேசு நாயகா! இயேசு நாயகா!
உந்தன் வீடாய்க் கொள்ளும், இயேசு நாயகா!

2. மாம்சக் கிரியைகள் போக்கும், இயேசு நாயகா!
குழந்தை உள்ளம் ஆக்கும், இயேசு நாயகா!
இயேசு நாயகா! இயேசு நாயகா!
குழந்தை உள்ளம் ஆக்கும், இயேசு நாயகா!

3. என்னை உமக்குத் தந்தேன், இயேசு நாயகா!
இனி நான் அல்ல, நீரே, இயேசு நாயகா!
இயேசு நாயகா! இயேசு நாயகா!
இனி நான் அல்ல, நீரே, இயேசு நாயகா!

4. திரும்ப விழாது பாரும், இயேசு நாயகா!
கிருபை இழாது காரும், இயேசு நாயகா!
இயேசு நாயகா! இயேசு நாயகா!
கிருபை இழாது காரும், இயேசு நாயகா!

**(160)**

1. என் நோக்கம் தேவனே, வேறொன்றில்லை!
ஆசீரோ, ஓய்வோ, களிப்போ இல்லை.
அந்நோக்கம் சேர்ப்பதவர் பணியே,
எவ்வழியேனும், எவ்விலையேனும்.

2. அன்பு என் ஆண்டவரிடம் ஈர்க்கும்
நம்பிக்கை இலக்கை நோக்கி ஓடும்.
தேவன் என் வாஞ்சை தீர்க்கும்வரையில்
என் ஆத்துமா உமக்காய்க் கதறும்.

3. பாதை இருளோ, விலை பெரிதோ,
நீர் காண்பிக்கும் வழி குறுகலோ,
என் குறிக்கோளை எட்டும்வரையில்
என் நடை யாவும் தேவன் அறிவார்.

4. ஒன்று செய்கின்றேன்: கர்த்தரை நோக்கி
'இல்லை' என்னாமல் விரைந்து செல்வேன்;
இங்கு நாளும் தேவன் என் மகிமை!
அங்கும் அவரே என் வெகுமதி!

1. My goal is God Himself, not joy, nor peace,
   Nor even blessing, but Himself, my God;
   'Tis His to lead me there—not mine, but His—
   At any cost, dear Lord, by any road.

2. So faith bounds forward to its goal in God,
   And love can trust her Lord to lead her there;
   Upheld by Him, my soul is following hard
   Till God hath full fulfilled my deepest prayer.

3. No matter if the way be sometimes dark,
   No matter though the cost be oft-times great,
   He knoweth how I best shall reach the mark,
   The way that leads to Him must needs be strait.

4. One thing I know, I cannot say Him nay;
   One thing I do, I press towards my Lord;
   My God my glory here, from day to day,
   And in the glory there my great Reward.

**(161)**

1. *ஒளியின்மேல் விண் ஒளியே!*
   *கிறிஸ்து-என்னில் ஜீவனாய் உள்ளார்!*
   *பாவ இருளில் அலைந்தேன்,*
   *விண்ணொளியால் கண் திறந்தார்,*
   *இயேசு தம்மைத் திரை நீக்கி*
   *என்னில் வெளிப்படுத்தினார்!*

2. *சிலுவையில் விடுதலை!*
   *கிறிஸ்துவே என்னில் வாழ்கின்றார்!*
   *நான் அவரோடு-அறையுண்டேன்,*
   *இனி நான் அல்ல, கிறிஸ்துவே!*
   *அன்பால் தம்மை எமக்கீந்தோர்*
   *விசுவாசத்தால் வாழ்கின்றேன்.*

3. கிருபைமேல் கிருபையே!
கிறிஸ்து-என்னில் வீடமைக்கின்றார்!
உள்ளில் ஆவி வலுவூட்டி,
உள்ளம் புதிதாக்குகின்றார்,
ஆழ், உயரம், நீள், அகலம்
விஞ்சும் கிறிஸ்துவை அறிய.

4. மகிமைமேல் மகிமையே!
கிறிஸ்து-என்னில் உருவாகின்றார்!
தெய்வத் தன்மையில் பங்கீந்தார்,
தேவ குணம் கட்டுகின்றார்,
உம்மைக் கண்டு-எதிரொளிப்பேன்,
உம்போல் மறுசாயலாவேன்.

5. வெற்றியின்மேல் மாவெற்றியே!
கிறிஸ்து-என்னில் மகிமைப்படுவார்!
வாழ்வோ சாவோ எந்நிலையும்
எல்லாவற்றிலும் நீர் போதும்.
என்னில் அன்புகூர்பவரால்
எங்கும் என்றும் முற்றும் வெற்றி!

6. என் பரிசு, என் ஆதாயம்,
என் ஆசை இலக்கு கிறிஸ்துவே!
எல்லாம் கொண்ட கிறிஸ்துவல்லால்
ஆசை, பொக்கிஷம் வேறில்லை!
என் நம்பிக்கை, மகிமை, கிரீடம்
ஈடிணையில்லா கிறிஸ்துவே!

**(162)**

சத்திய வேதம் பக்தரின் கீதம்
சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும்.

*எத்தனை துன்பம் துயரம் வந்தும்*
*பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்*

1. நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம்
சுத்த பசும்பொன் தெளிந்திடும் தேன்

இதயம் மகிழும் கண்கள் தெளியும்
இருண்ட ஆத்துமா உயிரடையும்.

2. பேதைகளிடம் ஞானம் அருளும்
வேத புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதன் தியானம்
இனிமை தங்கும் தனிமையிலும்.

3. வேதப் பிரியர் தேவப் புதல்வர்
சேதமடையா நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள்போல
இவர்கள் நல்ல கனி தருவார்.

4. உள்ளம் உதிக்கும் உறுதி அளிக்கும்
கள்ளங் கபடெல்லாம் அகற்றும்
கடிந்து கொள்ளும் கறைகள் போக்கும்
கனமடைய வழிநடத்தும்.

5. கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி
கன்மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும்
இருபுறமும் கருக்குள்ளதே.

6. வானம் அகலும் பூமி அழியும்
வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம்
பரவசம் நிதம் அருளும்.

**(163)**

வாழ்வது நானல்ல, என்னில்
கிறிஸ்துவே வாழ்கின்றார்.

1. கிறிஸ்து என்னில் இருக்கின்றார்,
கிருபை எனக்குத் தருகின்றார்;
அன்பும் அருளும் பொழிகின்றார்...ஆ..ஆ..ஆ...மென்
என்னை முழுதும் ஆள்கின்றார்.

2. கிறிஸ்து நம்மில் வளரவே,
நாமும் தேய்ந்து மறையவே,

கிறிஸ்து நம்மில் வாழவே...ஆ...ஆ...ஆ...மென்
நமக்குப் பயமே இல்லையே.

3. உயிரும் உடலும் போலவே,
மலரும் மணமும் போலவே,
யாழும் இசையும் போலவே..ஆ...ஆ...ஆ...மென்
வாழும் கிறிஸ்துவில் ஒன்றிப்போம்.

**(164)**

1. வேளை அதை எண்ணுகையில்
வேதனையே, வெட்கமே;
நேசர் அன்பு கெஞ்சுகையில்
நீசன் என் ஆணவப் பதில்:
“நானே எல்லாம், நீர் வேண்டாம்” *(2)*

2. என்னைத் தேடிக் கண்டவரை
நானும் கண்டேன் கழுவில்;
“தந்தாய், பொறும்” என்ற வேண்டல்
கேட்ட நெஞ்சம் நெகிழ்ந்தது:
“நான் கொஞ்சம், நீரும் வேண்டும்” *(2)*

3. தாங்கும் பொறுமை, பரிவால்
இன்ப வல்ல இரட்சகர்,
நாளும் ஆற்றித் தேற்றுகையில்
தாழ்த்தி நான் மெல்ல மொழிந்தேன்:
“நான் தாழ்வேன், நீர் பெருகும்” *(2)*

4. உயர் வானிலும் உயரம்!
ஆழ் கடலினும் ஆழம்!
உம் அன்பு என்னை வென்றது,
என் நெஞ்சின் கதறல் கேளும்:
“நான் வேண்டாம், நீரே எல்லாம்” *(2)*

1. Oh, the bitter shame and sorrow,
That a time could ever be,
When I let the Savior's pity

Plead in vain, and proudly answered,
All of self, and none of Thee,
All of self and none of Thee.

2. Yet He found me; I beheld Him
Bleeding on the cursed tree;
Heard Him pray, Forgive them, Father,
And my wistful heart said faintly,
Some of self, and some of Thee,
Some of self, and some of Thee.

3. Day by day His tender mercy,
Healing, helping, full and free,
Sweet and strong, and ah! so patient,
Brought me lower while I whispered,
Less of self, and more of Thee,
Less of self, and more of Thee.

4. Higher than the highest heavens,
Deeper than the deepest sea,
Lord, Thy love at last hath conquered;
Grant me now my heart's petition,
None of self, and all of Thee,
None of self, and all of Thee.

**(165)**

1. Not I, but Christ, be honored, loved, exalted;
Not I, but Christ, be seen, be known, be heard;
Not I, but Christ, in every look and action;
Not I, but Christ, in every thought and word.

*Saved from my sin and myself, dear Lord,*
*Saved to be filled with Thee;*
*Self crucified, so now not I,*
*But Christ, that lives in me.*

2. Not I, but Christ, to gently soothe in sorrow;
Not I, but Christ, to wipe the falling tear;
Not I, but Christ, to lift the weary burden;
Not I, but Christ, to hush away all fear.

3. Not I, but Christ, in lowly, silent labor;
Not I, but Christ, in humble, earnest toil;
Christ, only Christ—no show, no ostentation;
Christ, none but Christ, the gath'rer of the spoil.

4. Christ, only Christ—no idle words e'er falling;
Christ, only Christ—no needless bustling sound;
Christ, only Christ—no self-important bearing;
Christ, only Christ—no trace of "I" be found.

5. Not I, but Christ, my every need supplying;
Not I, but Christ, my strength and health to be;
Not I, but Christ, for body, soul, and spirit;
Christ, only Christ, here and eternally.

6. Christ, only Christ, ere long will fill my vision;
Glory excelling soon, full soon I'll see—
Christ, only Christ, my every wish fulfilling—
Christ, only Christ, my all in all to be.

## D-9 கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியம்

**(166)**

1. நேசித்தும், நன்மதிப்போ வேண்டேன்;
சேவித்தும், சன்மானமோ வேண்டேன்;
உழைத்தும், என்றும் எண்ணவோ வேண்டேன்;
துன்புற்றும், என்னைக் கருதவோ வேண்டேன்.

2. இது ஊற்றுதல், பருகுதலில்லை;
இது உடைத்தல், பேணுதலில்லை;
மற்றோர் ஆசீர்க்காய்த் துன்புறும் வாழ்க்கை;
ஆறுதலும், அன்பும் நல்கும் வாழ்க்கை.

3. பரிதாபம், பரிவு நான் ஒப்பேன்;
பாராட்டும், சீராட்டும் நான் ஒப்பேன்;
தனியனாய், மறக்கப்பட்டோனாய்,
பேச்சற்றோனாய், கைவிடப்பட்டோனாய்.

4. நீதி கிரீடத்தின் கிரயமாய்க்
கண்ணீர், குருதி;
உத்தம வாழ்வின் கிரயமாய்
எல்லாம் இழந்தேன்.

5. கர்த்தாவே, அன்று நீர் பூவில் வாழ்ந்தபோது
தேடி நடந்த பாதை இதே;
காயங்கள், நட்டங்கள் மகிழ்வுடன் சகித்தீர்
மாந்தர் நெருங்கி வந்திளைப்பாற.

6. இன்னும் போகும் தூரம் அறியேன்;
பின்னோக்குதல் இன்றி முன்னே செல்கிறேன்.
பின்பற்றுவேன் உம் பூரண முன்மாதிரி
நன்றியீனம் கசப்பின்றி தாங்கி.

7. கர்த்தாவே, ஜெபிப்பேன் இவ்வேளை, துடைப்பீர்
எந்தன் மறைவான கண்ணீர் யாவும்;
கர்த்தாவே, நீரே என் பரிசென்றறிவேன்,
பிறர்க்கென்றும் ஆசீர்வாதமாகுவேன்.

1. Let me love and not be respected;
   Let me serve and not be rewarded;
   Let me labor and not be remembered;
   Let me suffer and not be regarded.

2. ‘Tis the pouring, not the drinking;
   ’Tis the breaking, not the keeping—
   A life suff’ring to seek others’ blessing,
   A life loving and true comfort giving.

3. Not expecting pity or concern,
   Not accepting solace or praise;
   Even lonely, even forgotten;
   Even wordless, even forsaken.

4. Tears and blood for the righteous crown
   My price shall be; losing all,
   My cost for a faithful pilgrim’s life.

5. ‘Twas the life, O Lord, that You chose to live
   In those days when on earth You walked,
   Gladly suff’ring all injuries and loss
   So that all might draw near and repose.

6. I cannot see how much farther I shall go;
   Still I press on, knowing there is no return.
   Let me follow Your pattern, so perfect and true,
   Bearing all gratefully without complaint.

7. In this time of trial, O my Lord,
   I pray that You would wipe my hidden tears away;
   Let me learn, O Lord, You are my reward;
   Let me be others’ blessing all my days.

## V. தேவனுடைய அரசு

### E-1 கிறிஸ்துவோடு வெற்றிஆரவாரம்

**(167)**

தேசமே, பயப்படாதே!
மகிழ்ந்து களிகூரு;
சேனையின் கர்த்தர் உன் நடுவில்
பெரிய காரியம் செய்திடுவார்.

1. பலத்தினாலும் அல்லவே,
பராக்கிரமமும் அல்லவே;
ஆவியினாலே ஆகும் என்று
ஆண்டவர் வாக்கு அருளினாரே.

2. தாய் மறந்தாலும் மறவாமல்
உள்ளங்கையில் வரைந்தாரே;
வலக்கரத்தாலே தாங்கி உன்னை
சகாயம் செய்து உயர்த்திடுவார்.

3. கசந்த மாரா மதுரமாகும்,
கொடிய யோர்தான் அகன்றிடும்;
நித்தமும் உன்னை நல்வழி நடத்தி
ஆத்துமாவைத் தினம் தேற்றிடுவார்.

4. கிறிஸ்து இயேசு சிந்தையில்
நிலைத்தே என்றும் ஜீவிப்பாய்;
ஆவியின் பலத்தால் அனுதினம் நிறைந்தே,
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய்.

5. மாம்சமானவர் யாவர்மேலும்,
உன்னத ஆவியைப் பொழிவாரே;
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார்,
எழும்பி சேவையும் செய்திடுவாய்.

## E-2 எஜமானின் பயனுக்காக

**(168)**

1. ஆசீர் ஏராளமாய்ப் பெய்யும்
அன்பின் வாக்குத்தத்தமே;
ஆற்றும் பருவங்கள் ஈவார்
ஆண்டவர் மேலிருந்து.

*ஆசீர் ஏராளம்*
*ஆசீர் அவசியமே;*
*அருள் துளிகள் போதாதே*
*அருள் மாரியாய்ப் பெய்யும்.*

2. ஆசீர் ஏராளமாய்ப் பெய்யும்
மீண்டும் உயிர்ப்பித்திடும்;
மேடு பள்ளங்களின்மேலும்
கேள் மாமழையின் சத்தம்.

3. ஆசீர் ஏராளமாய்ப் பெய்யும்
எம்மேல் அனுப்பும் கர்த்தா!
உம் வாக்கை எண்ணி நீர் எம்மை
இப்போ உயிர்ப்பித்திடும்.

4. ஆசீர் ஏராளமாய்ப் பெய்யும்
இன்றே பெய்திட்டால் நலம்;
பாவ அறிக்கை செய்கிறோம்
இயேசுவின் நாமத்திலே.

5. ஆசீர் ஏராளமாய்ப் பெய்யும்
நம்பிக் கீழ்ப்படிந்தாலே;
ஆற்றும் பருவங்கள் ஈவார்
ஆண்டவர் ஆட்சிசெய்தால்.

1. There shall be showers of blessing:
This is the promise of love;
There shall be seasons refreshing,
Sent from the Savior above.

*Showers of blessing,*
*Showers of blessing we need:*
*Mercy-drops round us are falling,*
*But for the showers we plead*.

2. There shall be showers of blessing,
   Precious reviving again;
   Over the hills and the valleys,
   Sound of abundance of rain.

3. There shall be showers of blessing;
   Send them upon us, O Lord;
   Grant to us now a refreshing,
   Come, and now honor Thy Word.

4. There shall be showers of blessing:
   Oh, that today they might fall,
   Now as to God we’re confessing,
   Now as on Jesus we call!

5. There shall be showers of blessing,
   If we but trust and obey;
   There shall be seasons refreshing,
   If we let God have His way.

**(169)**

உம்மைப்போல் யாருண்டு
எந்தன் இயேசுநாதா
இந்தப் பார்தலத்தில்
உம்மைப்போல் யாருண்டு?

*பாவப்பிடியினில் சிக்கி நான் உழன்றேன்*
*தேவா தம் அன்பினால் மன்னித்தீர்.*

1. உலகம், மாமிசம், பிசாசுக்கடியில்
அடிமையாகவே பாவி நான் ஜீவித்தேன்:
நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம்போல் நடந்தேன், ஏமாற்றம் அடைந்தேன்:
என்னையா தேடினீர் ஐயா இயேசுநாதா
உம்மை மறந்த ஓர் துரோகி நான்
என்னையா தேடினீர் ஐயா இயேசுநாதா
அடிமை உமக்கே இனி நான்.

2. இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை
என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்:
நொறுக்கும், உருக்கும், உடையும், வனையும்
உமக்கே உகந்த தூய பாத்திரமாய்
என்னை முற்றிலும் உம்மிடம் ஒப்படைத்தேன்
இயேசுவே ஆவியால் நிரப்பும்:
வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய்த் திகழ
ஜீவ ஆவியாலே நிரப்பும்.

3. வீட்டிலும், ஊரிலும் செல்லுமிடமெங்கும்
சோதனை வந்திடில் கர்த்தா, நீர் காத்திடும்
மேசியா வருகை வரையில் பலரை
இயேசுவினிடத்தில் அழைக்க ஏவிடும்:
முழங்காலில் நிற்க, வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும்
உமக்கும், எனக்கும் இடையில் எதுவும்
என்றுமே வராமல் காத்திடும்.

**(170)**

தேவனின் ஆலயமே, பரிசுத்த ஆலயமே
மகிமையின் ஆலயமே, நாமே அவ்வாலயமே.

1. இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம்
அவருக்காய் கிரயமாய்க் கொள்ளப்பட்டோம்:
தேவனின் ஆவியால் நிரப்பப்பட்டோம் நாம்
தேவ பிள்ளைகளானோம், அவர் சொந்த ஜனமானோம்.

2. நாம் இனி நம்முடையவர்களல்ல
அவரே சரீரத்தின் சொந்தமானார்
வஞ்சிக்கப்படாமல் தீட்டுப்படுத்தாமல்
பரிசுத்தம் காத்துக்கொள்வோம், பரிசுத்த ஜாதியாக.

3. கர்த்தருடன் என்றும் இசைந்திருப்போம்
அவருடன் ஒரே ஆவியாயிருப்போம்
ஆவியினாலும் சரீரத்தினாலும்
மகிமை செலுத்திடுவோம், கர்த்தருக்கே என்றும்.

4. இயேசுவின் வருகை நெருங்கிடுதே
அவர் பிரசன்னம் விரைந்தேகிடுதே
மகிமைமேல் மகிமை அடைந்திடுவோம் நாம்
மறுரூபமாகிடுவோம், மகிமையில் சேர்ந்திடுவோம்.

**(171)**

1. பலிபீடத்தில் என்னைப் பரனே,
படைக்கிறேனே இந்த வேளை;
அடியேனைத் திருச்சித்தம்போல
ஆண்டு நடத்திடுவீர்.

*கல்வாரியின் அன்பினையே*
*கண்டு விரைந்தோடி வந்தேன்;*
*கழுவும் உம் திரு இரத்தத்தாலே,*
*கறை நீங்க இருதயத்தை.*

2. நீரன்றி என்னாலே பாரில்,
ஏதும் நான் செய்திட இயலேன்;
சேர்ப்பீரே வழுவாது என்னை,
காத்துமக்காய் நிறுத்தி.

3. ஆவியோடாத்மா சரீரம்,
அன்பரே உமக்கென்றும் தந்தேன்;
ஆலயமாக்கியே இப்போ
ஆசீர்வதித்தருளும்.

4. சுயம் என்னில் சாம்பலாய் மாற,
சுத்த ஆவி அனல் மூட்டும்;

ஜெயம் பெற்று மாமிசம் சாக,
தேவா அருள் செய்குவீர்.

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்,
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்;
மன்னவன் இயேசுவின் சாயல்
இந்நிலத்தே கண்டதால்.

## E-3 கிறிஸ்துவின் சரீரம்

**(172)**

1. இயேசுவே, நம் ஒரே மேய்ப்பர்!
தம்முயிர் தந்த மீட்பர்!
தம் ஜீவன் நாம் பெற வந்தார்,
பூரணமாகத் தந்தார்.

*நாம் ஒரே மந்தை,*
*தேவன் நம் அன்பின் தந்தை,*
*ஜீவன் பெய்வதவர் சிந்தை,*
*பாரில் பரம விந்தை!*

2. நம்மைப் பேர் சொல்லி அழைத்தார்,
அன்பின் குரலைக் கேட்டோம்,
முன்செல்கின்றார் வழிகாட்டி,
பின்செல்வோம் அடியொற்றி.

3. பசும்புல் மேய்ச்சலும் ஒன்றே,
பருகும் நீரும் ஒன்றே,
பரம விருந்தும் ஒன்றே,
பங்குறும் கிறிஸ்து ஒன்றே,

4. மந்தைக்காய்த் தம் இரத்தம் சிந்தும்
அன்பின் சிகரம் கண்டோம்!
அன்பு கொண்டு சோதரர்க்காய்
நாமும் நம்மை ஊற்றுவோம்.

5. சோதரர்கள் ஒருமித்து
வாழ்வது நன்மை, இன்பம்!

ஜீவனும், ஆசீரும் தங்கும்
தேவனின் இல்லம் எங்கும்.

**(173)**

1. சபையின் அடித்தளம்
ஆண்டவர் இயேசுவே!
உயிர்ப்பில், ஆவியினால்
புதுப் படைப்பிதே!
உன்னதம்விட்டு வந்தார்!
மணாளியைக் கண்டார்!
அவள் உயிர்க்க மாண்டார்,
தம் இரத்தத்தால் கொண்டார்.

2. பல்வேறானோர்கள் உண்டு,
சரீரமோ ஒன்றே!
ஆவியானவர் ஒன்றே!
எதிர்நோக்கும் ஒன்றே!
கர்த்தரும், நம்பிக்கையும்
ஒன்றே! ஜீவன் ஒன்றே!
பருகும் கிண்ணம் ஒன்றே!
உண்ணும் அப்பம் ஒன்றே!

3. பரத்தில் கிறிஸ்துவோடு
இகத்தின் சுத்தர்கள்
ஒன்றாய் சிங்காசனத்தில்
இணைந்து வீற்றுள்ளார்;
உன்னதமாய் அழைப்பு,
உன்னதமாய் நடை,
உன்னத வளங்களால்
உன்னத வாழ்விங்கு.

4. துன்பம், பாடு, போர்களில்
உண்மையாய் வாழ்கின்றாள்;
விண்சாயல் அணிகின்றாள்,
ஆயத்தமாகின்றாள்.
மகிமை சபை காட்சி

எம் கண்கள் நிரம்பும்;
தேவன் பூரிப்பில், ஓய்வில்,
எம் நெஞ்சம் நிறையும்.

1. The Church’s one foundation
Is Jesus Christ her Lord;
She is His new creation
By water and the Word:
From heav’n He came and sought her
To be His holy Bride;
With His own blood He bought her,
And for her life He died.

2. Elect from every nation,
Yet one o’er all the earth,
Her charter of salvation,
One Lord, one faith, one birth;
One holy Name she blesses,
Partakes one holy food,
And to one hope she presses,
With every grace endued.

3. Mid toil and tribulation,
And tumult of her war,
She waits the consummation
Of peace forevermore;
'Til, with the vision glorious,
Her longing eyes are blessed,
And the great church victorious
Shall be the church at rest.

4. Yet she on earth hath union
   With God the Three in One,
   And mystic sweet communion
   With those whose rest is won:
   O happy ones and holy!
   Lord, give us grace that we,
   Like them, the meek and lowly,
   In love may dwell with Thee.

**(174)**

1. Behold how good and how pleasant it is
   For brethren to dwell together in unity!
   Behold how good and how pleasant is
   For brethren to dwell together in unity!

   It is like the precious ointment upon the head,
   That ran down upon the beard,
   Even Aaron's beard:
   That went down to the skirts of his garments.

2. Behold how good and how pleasant it is
   For brethren to dwell together in unity!
   It is like the precious ointment upon the head,
   That ran down upon the beard,
   Even Aaron's beard:
   That went down to the skirts of his garments.

3. As the dew of Hermon, And as the dew that descended
   Upon the mountains of Zion:
   For there the Lord commanded the blessing,
   Even life forevermore.

## E-4 ஒன்றாகக் கூடுதல்

**(175)**

ஆ! வாரும் நாம் எல்லோரும் கூடி
மகிழ் கொண்டாடுவோம்; சற்றும்
மாசில்லா நம் இயேசு கிறிஸ்துவை
வாழ்த்திப் பாடுவோம்.

1. தாரகம் அற்ற ஏழைகள் தழைக்க நாயனார், இந்தத்
தாரணியிலே மானுடவதாரம் ஆயினார்.
2. மா பதவியை இழந்திங்கு வறியர் ஆன நாம், அங்கே
மாட்சியுற வேண்டியே, அவர் தாழ்ச்சி ஆயினார்.
3. ஞாலமதிலே அவர்க்கிணை நண்பர் யாருளர், பாரும்
நம் உயிரை மீட்கவே, அவர் தம் உயிர் விட்டார்.
4. மா கொடியதான சாவின் வலிமை நீக்கியே, இந்த
மண்டலத்தினின் றுயிர்த்தவர் விண்டலஞ் சென்றார்.
5. பாவிகட்காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே, அவர்
பட்சம் வைத்துறும் தொழும்பரை ரட்சை செய்கிறார்.

**(176)**

1. இயேசுவே உம் நாமத்தினால்,
இன்பம் உண்டு யாவருக்கும்;
நன்றியுள்ள இதயத்துடன்
கூடினோம் இந்நன்னாளிலே

எங்கள் தேவனே, எங்கள் இராஜனே (2)
என்றும் உம்மையே சேவிப்போம்;
நன்றியுள்ள சாட்சியாக உமக்கென்றும் ஜீவிப்போம்.

2. மண்ணை நாடி பொன்னை அடைந்தோம்
புகழ் தேடி ஏமாற்றம் கொண்டோம்
விண்ணை நோக்கி ஜெயம் பெற்றோம்
இயேசுவின் கரிசனத்தால்.

3. இயேசுவை நாம் பின்செல்லுவோம்
உலகை என்றும் வெறுப்போம்

துன்பப் பாதை சென்றிடுவோம்
என்றும் அவரின் பலத்தால்

4. என்னைக் கண்டு அழைக்கும்
சத்தத்தைக் கேட்டேனே ஓர்நாளிலே
அன்று இயேசுவண்டை வந்தேனே
நித்ய ஜீவன் பெற்றிடவே.

**(177)**

கோடாகோடி ஸ்தோத்திரம் ஏறெடுப்போம்
இராஜாதி இராஜன்! தேவாதி தேவன்!
இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை.

1. பரிசுத்தவான்கள் சபை நடுவே,
தரிசிக்கும் தேவ சமுகத்திலே,
அல்லேலூயா! அல்லேலூயா!
ஆவியில் பாடி மகிழுவோம்!
ஆண்டவர் இயேசுவைக் கொண்டாடுவோம்.

2. கிருபாசனத்தண்டை நெருங்குவோம்,
திருரத்தத்தின்கீழே வந்து நிற்போம்,
அல்லேலூயா! அல்லேலூயா!
கண்டேன் சகாயம், இரக்கமே!
கர்த்தர் கிருபை என்றும் உள்ளதே.

3. குருவி பறவை வானம்பாடியே,
கவலையின்றிப் பறந்து பாடுதே,
அல்லேலூயா! அல்லேலூயா!
அற்புதமான சிருஷ்டிகரே!
அந்த விசுவாசம் கற்றறிந்தோம்.

4. கவலைப்படாதீர்கள் என்றுரைத்தீர்,
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர்,
அல்லேலூயா! அல்லேலூயா!
ஆடை ஆகாரம் தேவையெல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரித்தீர்

5. கணக்கில்லா நன்மைகள் கர்த்தர் செய்தீர்,
கருத்துடன் பாடி நன்றி கூறுவோம்,
அல்லேலூயா! அல்லேலூயா!
தேவகுமாரன் வந்திடும் நாள்!
தூயர் முகம் கண்டு கெம்பீரிப்போம்.

**(178)**

தேவா பிரசன்னம் தாருமே,
தேடி உம் பாதம் தொழுகிறோம்,
இயேசுவே, உம் திவ்ய நாமத்திலே,
இன்பமுடன் கூடி வந்தோமே.

1. வானம் உமது சிங்காசனம்,
பூமி உமது பாதபடி;
பணிந்து வணங்கி தொழுகிறோம்.
கனிந்தெம்மைக் கண்பாருமே.

2. சாரோனின் ரோஜா, லீலி புஷ்பம்,
சாந்த சொரூபி, என் இயேசுவே;
ஆயிரம்பேரிலும் சிறந்தோராம்,
ஆண்டவரைத் தொழுகிறோம்.

3. கர்த்தர் செய்த உபகாரங்கள்
கணக்குரைத்து எண்ணலாகுமோ?
இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி,
இரட்சகரைத் தொழுகிறோம்.

4. கர்த்தர் சமுகம் ஆனந்தமே,
பக்தர் சபையில் பேரின்பமே;
கர்த்தர் நாமத்தைக் கொண்டாடுகிறோம்,
சுத்தர்கள் போற்றும் தேவனே.

## E-5 நற்செய்தியை அறிவித்தல்

**(179)**

1. இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்,
விசுவாசத்தில் முன்நடப்போம்;

இனி எல்லோருமே அவர் பணிக்கெனவே
ஒன்றாய் எந்நாளும் உழைத்திடுவோம்.

*நம் இயேசு ராஜாவே, இதோ வேகம் வாராரே,*
*அதி வேகமாய்ச் செயல்படுவோம்.*

2. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்,
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்;
அதி உற்சாகமாய், அதி சீக்கிரமாய்
இராஜ பாதையைச் செம்மையாக்குவோம்.

3. சாத்தானின் சதிகளைத் தகர்த்திடுவோம்,
இனி இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்;
இந்தப் பார் முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப்போம்.

4. ஆவி, ஆத்துமா, தேகம் அவர் பணிக்கே,
“இனி நான் அல்ல, அவரே எல்லாம்,”
என முடிவு செய்தோம், அதில் நிலைத்திருப்போம்,
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம்.

**(180)**

1. காலையில் விதைப்போம் காருண்ய விதைகள்
மதியம் விதைப்போம் கண்ணீரோடும்
அறுவடைக்காக காத்திருப்போம் நாமே
கனியைப் பெற்று களிகூருவோம்..

*அரிக்கட்டோடே அரிக்கட்டோடே*
*சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே*
*அரிக்கட்டோடே அரிக்கட்டோடே*
*சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே.*

2. வேனிற்காலத்திலும் குளிர்காலத்திலும்
சௌகரியம் பாராது நன்றாய் உழைப்போம்
ஆயுள்பரியந்தம் அவர் வருமட்டும்
போராடுவோம் நாம் அவர் யுத்தத்தை.

3. ஆத்துமாக்களை அறுவடை செய்வோம்
அவர் வருமட்டும் வேலைசெய்வோம்

அன்பர் இயேசுவின் பணியினைச் செய்வோம்
அந்த இன்ப நாளில் களிகூருவோம்.

1. Sowing in the morning, sowing seeds of kindness
Sowing in the noontide and the dewy eve
Waiting for the harvest, and the time of reaping
We shall come rejoicing, bringing in the sheaves.

*Bringing in the sheaves, bringing in the sheaves*
*We shall come rejoicing, bringing in the sheaves*
*Bringing in the sheaves, bringing in the sheaves*
*We shall come rejoicing, bringing in the sheaves.*

2. Sowing in the sunshine, sowing in the shadows
Fearing neither clouds nor winter's chilling breeze
By and by the harvest, and the labor ended.
We shall come rejoicing, bringing in the sheaves

3. Go then even weeping, sowing for the Master
Though the loss sustained our spirit often grieves
When our weeping's over, He will bid us welcome
We shall come rejoicing, bringing in the sheaves.

**(181)**

1. தாசரே, இத்தரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்தமாக்குவோம்;
நேசமாய் இயேசுவைக் கூறுவோம்,
அவரைக் காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,
வெளிச்சம் வீசுவோம்.

2. வருத்தப்பட்டுப் பாரம் சுமந்தோரை
வருந்தி அன்பாய் அழைத்திடுவோம்;
உரித்தாய் இயேசு பாவப் பாரத்தை
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே.

3. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து,
தமை மறந்து, இயேசு கனிந்து திரிந்தனரே.

4. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே.

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்;
ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாம் முயன்றிடுவோம்,
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெபித்திடுவோம்.

**(182)**

மந்தையில் சேரா ஆடுகளே
எங்கிலும் கோடி கோடி உண்டே
சிந்தையில் ஆன்ம பாரம் கொண்டே
தேடுவோம் வாரீர் திருச்சபையே!

*அழைக்கிறார் இயேசு*
*அவரிடம் பேசு*
*நடத்திடுவார்.*

1. காடுகளில் பல நாடுகளில்
என் ஜனம் சிதறுண்டு சாகுவதா?
பாடுபட்டேன் அதற்காகவுமே
தேடுவோர் யார் என் ஆடுகளை?

2. சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு
என்னை அங்கு சொல்ல ஆட்கள் வேண்டும்
அழைப்புப் பெற்றோர் யாரும் புறப்படுவீர்
இது ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர்.

3. எனக்காய்ப் பேசிட நாவு வேண்டும்
என்னைப்போல் அலைந்திட கால்கள் வேண்டும்
என்னில் அன்புகூர ஆட்கள் வேண்டும்
உன்னிடம் கேட்கிறேன் தர வேண்டும்.

**(183)**

வாசலண்டை நின்று ஆசையாய்த் தட்டும்
நேசர் இயேசுவுக்குன்னுள்ளம் திறவாயோ?
பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறாரே!

1. ஆதரிப்பார் ஆருமில்லை யென்றெண்ணி
ஆதரை மீதினில் அலைந்திடுவாயே
காணாத ஆட்டைத் தேடி வந்த மேய்ப்பர்
கண்டுன்னை மந்தையில் சேர்த்திடுவார்

2. அற்ப வாழ்வை நித்ய வாழ்வு என்று எண்ணி
தற்பரன் தயவை தள்ளிடலாமா?
நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
நித்தியத்தை எங்கு நீ கழிப்பாய்?

3. பாவத்தினால் சாப ரோகத்தில் தொய்ந்து
மாயையில் ஆழ்ந்து மடிந்திடுவானேன்
பாவத்தைப் போக்கிடும் தூய உதிரத்தின்
ஜீவ ஊற்றில் மூழ்கி மீட்புறாயோ?

4. மனம் மாறி மறுபடி பிறந்திடாயாகில்
மகிபரின் இராஜ்ஜியம் காணக்கூடுமோ?
பிறந்தாலோ ஜலத்தாலும் ஆவியாலும் மெய்யாய்
பிரவேசிப்பாய் தேவ ராஜ்ஜியத்தில்.

5. வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பனும் நாதனும் இயேசு
இயேசுவல்லால் வேறு இரட்சிப்பு இல்லையே
இரட்சண்ய நாள் இன்றே வந்திடாயோ?

## E-6 நற்செய்தி முழக்கம்

**(184)**

1. இம்மானுவேலின் இரத்தத்தால்
நிறைந்த ஊற்றுண்டே;
பாவியின் பாவங்கள் அதில்
நிவிர்த்தியாகுமே (3)

பாவியின் பாவங்கள் அதில்
நிவிர்த்தியாகுமே.

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்;
கள்ளன்போல் இழி பாவி என்
பாவம் கழுவுவேன் (3)
கள்ளன்போல் இழி பாவி என்
பாவம் கழுவுவேன்.

3. செம்மறியே, உம் இரத்தத்தின்
வல்லமை குன்றாதே;
தேவ மக்கள் மீட்படைந்து
பாவம் செய்யாதிருக்க (3)
தேவ மக்கள் மீட்படைந்து
பாவம் செய்யாதிருக்க.

4. காயங்களில் ஓடும் ஊற்றை
விஸ்வாசத்தால் கண்டேன்;
நேசரின் மீட்கும் அன்பினை
ஓயாமல் பாடுவேன் (3)
நேசரின் மீட்கும் அன்பினை
ஓயாமல் பாடுவேன்.

1. There is a fountain filled with blood
Drawn from Emmanuel's veins;
And sinners plunged beneath that flood
Lose all their guilty stains.
Lose all their guilty stains,
Lose all their guilty stains;
And sinners plunged beneath that flood
Lose all their guilty stains.

2. The dying thief rejoiced to see
That fountain in his day;

And there may I, though vile as he,
Wash all my sins away.
Wash all my sins away,
Wash all my sins away;
And there may I, though vile as he,
Wash all my sins away.

3. Thou dying Lamb!, Thy precious blood
Shall never lose its power
Till all the ransomed ones of God
Be saved, to sin no more.
Be saved, to sin no more,
Be saved, to sin no more;
Till all the ransomed ones of God
Be saved, to sin no more.

4. E'er since, by faith, I saw the stream
Thy flowing wounds supply,
Redeeming love has been my theme,
And shall be till I die.
And shall be till I die,
And shall be till I die;
Redeeming love has been my theme,
And shall be till I die.

**(185)**

1. காணாமற்போன என்னை
நல் மேய்ப்பர் தேடினார்;
தம் தோள்களின்மேல் போட்டுக்
கொண்டன்பாய் இரட்சித்தார்;
மேலோக தூதர் கூடினார்
ஆனந்தம் பொங்கிப் பாடினார்.

*நேசர் தேடி வந்தார்,*
*இரத்தம் சிந்தி மீட்டார்,*
*என்னைச் சொந்தமாகக் கொண்டனர்,*
*பேரன்போடு சேர்த்துக்கொண்டனர்.*

2. என் பாவக் காயங் கட்டி
வீண் பயம் நீக்கினார்;
*என் சொந்தமாக உன்னைக்*
*கொண்டேனே பார்* என்றார்;
அவ்வின்ப சத்தம் கேட்கவே
என் உள்ளம் பூரிப்பாயிற்றே.

3. பேரன்பராகத் தோன்றி
ஐங்காயங் காட்டினார்;
முட்கிரீடஞ் சூடினோராய்
என்னோடு பேசினார்;
இப்பாவியினிமித்தமே
படாத பாடு பட்டாரே.

4. இப்போது இன்பமாக
என் மீட்பர் பாதத்தில்,
ஒப்பற்ற திவ்ய அன்பைத்
தியானம் செய்கையில்
ஆனந்தம் பொங்கிப் பூரிப்பேன்;
மென்மேலும் பாடிப் போற்றுவேன்.

5. ஆட்கொண்ட நாதர் பின்பு
பிரசன்னமாகுவார்;
தம் ஞான மணவாட்டியாய்ச்
சேர்த்தென்றும் வாழ்விப்பார்;
எம்மாசும், தீங்கும் நீங்கிப்போம்
பேரின்பம் பெற்று வாழுவோம்.

1. In tenderness He sought me,
Weary and sick with sin,
And on His shoulders brought me
Into His flock again.

While angels in His presence sang
Until the courts of heaven rang.

*Oh, the love that sought me!*
*Oh, the blood that bought me!*
*Oh, the grace that brought me to the flock,*
*Wondrous grace that brought me to the flock!*

2. He washed the bleeding sin-wounds,
And poured in oil and wine;
He whispered to assure me,
"I've found thee, thou art Mine:"
I never heard a sweeter voice,
It made my aching heart rejoice.

3. He pointed to the nail-prints,
For me His blood was shed;
A mocking crown so thorny,
Was placed upon His head:
I wondered what He saw in me,
To suffer such deep agony.

4. I'm sitting in His presence,
The sunshine of His face,
While with adoring wonder
His blessings I retrace.
It seems as if eternal days
Are far too short to sound His praise.

5. So while the hours are passing,
All now is perfect rest;
I'm waiting for the morning,
The brightest and the best,

When He will call us to His side,
To be with Him, His spotless Bride.

**(186)**

1. நான் பாவிதான், ஆனாலும் நீர்
மாசற்ற இரத்தம் சிந்தினீர்;
*வா* என்று என்னை அழைத்தீர்
என் மீட்பரே வந்தேன், வந்தேன்.

2. நான் பாவிதான், என் நெஞ்சிலே
கறை பிடித்துக் கெட்டேனே.
என் கறை நீங்க இப்போதே
என் மீட்பரே வந்தேன், வந்தேன்.

3. நான் பாவிதான், மா பயத்தால்
திகைத்து பாவ பாரத்தால்;
அமிழ்ந்து மாண்டு போனதால்
என் மீட்பரே வந்தேன், வந்தேன்.

4. நான் பாவிதான், விசுவாசத்தால்
சீர், நேர்மை, செல்வம், மோட்சமும்
அடைவதற்கு உம்மிடம்
என் மீட்பரே வந்தேன், வந்தேன்.

5. நான் பாவிதான், இரங்குவீர்,
அணைத்துக் காத்து இரட்சிப்பீர்;
அருளாம் செல்வம் அளிப்பீர்,
என் மீட்பரே வந்தேன், வந்தேன்.

6. நான் பாவிதான், அன்பாக நீர்
நீங்காத் தடைகள் நீக்கினீர்;
உமக்குச் சொந்தம் ஆக்கினீர்,
என் மீட்பரே வந்தேன், வந்தேன்.

1. Just as I am, without one plea,
But that Thy blood was shed for me,

And that Thou bid'st me come to Thee,
O Lamb of God, I come! I come!

2. Just as I am, and waiting not
To rid my soul of one dark blot;
To Thee whose blood can cleanse each spot,
O Lamb of God, I come, I come!

3. Just as I am, though tossed about
With many a conflict, many a doubt;
Fightings within, and fears without,
O Lamb of God, I come, I come!

4. Just as I am, poor, wretched, blind;
Sight, riches, healing of the mind;
Yes, all I need, in Thee to find,
O Lamb of God, I come, I come!

5. Just as I am, Thou wilt receive,
Wilt welcome, pardon, cleanse, relieve;
Because Thy promise I believe,
O Lamb of God, I come, I come!

6. Just as I am, Thy love unknown
Has broken every barrier down;
Now, to be Thine, yea, Thine alone,
O Lamb of God, I come, I come!.

**(187)**

1. பிளவுண்ட மலையே,
புகலிடம் தாருமே
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்

பாவ தோஷங்கள் யாவும்
போக்கும்படி அருளும்.

2. எந்தக் கிரியை செய்துமே
உந்தன் நீதி கிட்டாதே
கண்ணீர் நித்தம் சொரிந்தும்
கஷ்ட தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே

3. யாதுமற்ற ஏழை நான்
நாதியற்ற நீசன் நான்
உம் சிலுவை தஞ்சமே!
உந்தன் நீதி ஆடையே!
தூய ஊற்றை அண்டினேன்
தூய்மையாக்கேல் மாளுவேன்.

4. நிழல்போன்ற வாழ்விலே
உடல் சாகும் நாளிலே
இம்மை விடும் நேரத்தில்
நியாயத்தீர்ப்பின் நாளதில்
பிளவுண்ட மலையே
புகலிடம் தாருமே.

1. Rock of Ages, cleft for me,
Let me hide myself in Thee;
Let the water and the blood,
From Thy riven side which flowed,
Be of sin the double cure,
Save me from its guilt and power.

2. Not the labor of my hands
Can fulfill Thy law's demands;
Could my zeal no respite know,
Could my tears forever flow,

All could never sin erase,
Thou must save, and save by grace.

3. Nothing in my hands I bring,
Simply to Thy cross I cling;
Naked, come to Thee for dress,
Helpless, look to Thee for grace:
Foul, I to the fountain fly,
Wash me, Savior, or I die.

4. While I draw this fleeting breath,
When mine eyes shall close in death,
When I soar to worlds unknown,
See Thee on Thy judgment throne,
Rock of Ages, cleft for me,
Let me hide myself in Thee.

**E-7 கிறிஸ்து நம் இலக்கு**

**(188)**

1. இயேசுவோடு ஆள பலர்,
சிலுவைக்கோ சிலர்;
ஆறுதல் தேடுவோர் பலர்,
இழப்போரோ சிலர்;
இன்ப இயேசுவுக்காய் எல்லாம்
குப்பையாய் எண்ணி,
இன்ப இயேசுவுக்காய் எல்லாம்
குப்பையாய் எண்ணி.

2. இயேசுவின் விருந்தில் பலர்,
நோன்பிலோ சிலர்;
துயரப் பாத்திரம் நிரம்பும்போது
அருந்துவோர் சிலர்;
பாடினோர் பலர், பூங்காவில்
விழித்தோரோ சிலர்,

பாடினோர் பலர், பூங்காவில்
விழித்தோரோ சிலர்.

3. ஞானம் புகழ்வோர் பலர்; அவர்
நிந்தை ஏற்போர் சிலர்;
அவர் புன்முறுவல் காண்பின், அவரைத்
துதிப்போரோ பலர்;
கணநேரம் அவர் விலகின்
அவரைத் தள்ளுவார்,
கணநேரம் அவர் விலகின்
அவரைத் தள்ளுவார்.

4. அவரை மெய்யாய் நேசிப்போர்
என்ன நேரிட்டாலும்,
இதயக் குருதி சிந்துவார்
நேசருக்காகவே;
என்னை நேசிக்கும் இரட்சகா,
தாரும் இவ்வன்பை,
என்னை நேசிக்கும் இரட்சகா,
தாரும் இவ்வன்பை.

1. Many crowd the Savior's kingdom,
Few receive His cross;
Many seek His consolation,
Few will suffer loss.
For the dear sake of the Master,
Counting all but dross,
For the dear sake of the Master,
Counting all but dross.

2. Many sit at Jesus' table,
Few will fast with Him,
When the sorrow-cup of anguish
Trembles to the brim.

Few watch with Him in the garden,
Who have sung the hymn,
Few watch with Him in the garden,
Who have sung the hymn.

3. Many will confess His wisdom,
Few embrace His shame.
Many, should He smile upon them,
Will His praise proclaim;
Then, if for a while He leave them,
They desert His name,
Then, if for a while He leave them,
They desert His name.

4. But the souls who love Him truly,
Let woe come or bliss,
These will count their dearest hearts' blood
Not their own, but His.
Savior, Thou who thus hast loved me,
Give me love like this,
Savior, Thou who thus hast loved me,
Give me love like this.

**(189)**

எந்தன் இயேசுவே உந்தன் நேசமே,
எந்தன் உள்ளம் உருக்கிடுதே,
நல்ல பங்கினை நான் அடைந்தேன் - திருப்பாதம்
வல்ல பராபரனே சரணம்.

1. நன்றி என்றும் நான் மறவேனே,
நம்பிக்கை கன்மலை என் இறைவா,
எந்தன் பதிலாய் எந்தன் பலியாய்,
எந்தன் பாவம் நீர் சுமந்தீர்.

2. மெய் விசுவாசப் பாதையில் செல்ல,
மேன்மை மிகும் அழைப்பை அளித்தீர்;
முன்னோடி உம் அடிச்சுவட்டில்
உண்மைச் சாட்சியாய் நடப்பேன்.

3. எந்தன் மேன்மை சிலுவையல்லாமல்
வேறேதுமில்லை இப்பாரினிலே;
உந்தனுடன் நான் அறையுண்டேனே
உந்தன் குருசில் பங்கடைந்தேன்.

4. அந்த மாது கண்களின் நீரால்
அன்பரே உம் பாதம் கழுவினாளே;
என் இதய தைலப் பரணி
உடைத்து உம்மேல் ஊற்றிடுவேன்.

5. இலக்கை நோக்கி ஓடுகின்றேனே
இலாபமும் நட்டம் என்றெண்ணுகின்றேன்;
ஒன்றே மனதில் உண்டு பரிசாய்
கொண்டே பரனைப் பின்தொடர்வேன்.

6. உம்மையன்றி ஆதரவில்லை
உம் சமுகம் ஒன்றே ஆறுதலே
கைவிடாமல் காக்கும் இரட்சகர்
கண்கள் உம்மை நோக்கிடுதே.

## E-8 கிறிஸ்துவோடு என்றென்றும்

**(190)**

1. அநாதியாய் எந்தன் அடைக்கலம் நீரே,
அநாதி நேசத்தால் நேசித்தீர் நீரே;
அநாதி சிறகின் மறைவில் வந்தடைந்தே
அநாதி காலமாய் சுகிப்பேனே.

*ஜீவனின் பெலனும் இயேசுவே நீர்!*
*சீயோனில் இராஜனும் இயேசுவே நீர்!*
*சுத்திகரிப்பீரே இயேசுவே உமக்காய்,*
*சேவிக்க எந்தன் ஜீவ காலமெல்லாம்.*

2. வறண்ட கானகமாம் இந்தப் புவியே,
இருண்ட பாதையை நான் கடந்திடவே,
நிறைவின் தேவனே, குறைகள் அகற்றுவீர்,
நிறைந்த நதியாய் தாகம் தீர்ப்பீர்.

3. சிலுவை நோக்கியே உம் அடி தொடர,
வல்லமை தாருமே, இயேசுவே எனக்கே,
நேசிக்க இகத்தில் வேறாரும் அறிகிலேன்,
நீரன்றி பரத்தில் யாரும் இல்லை.

4. தேவனின் சித்தமே செய்ய வந்த நீரே,
தேகமாம் திரையைக் கிழித்துச் சென்ற நீரே;
நாதனே உமது சித்தந்தனைச் செய்யவே,
வேதனே, அருள்வீர் கிருபையே.

5. என் கண்கள் நோக்கிடுமே, எப்போ வருவீர்?
என் ஆவல் தீருமே, உம் முகம் காண்க;
மகிமை இலங்கும் சீயோனின் மலையதில்
மாட்சியில் இயேசுவோடு ஆட்சி செய்வேன்.

**(191)**

ஆனந்தமாய் இன்பக் கானான் ஏகிடுவேன்
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன்.

நாளுக்கு நாள் அற்புதமாய் என்னைத் தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார்.

1. சேற்றினின்றென்னைத் தூக்கியெடுத்து
மாற்றி உள்ளம் புதிதாக்கினாரே;
கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியைக்
கண்டு நன்றியுடன் பாடிடுவேன்.

2. வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன்
வாஞ்சையுடன் என்னைத் தேடி வந்தார்;
எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்
இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன்!

3. கர்த்தரின் சித்தம் செய்திட நித்தம்
உம் பாதம் சேர்ந்திட வாஞ்சிக்கிறேன்;

தாரும் தேவா ஏழைக்கும் மாறா உம் கிருபை
கண்பாரும் என்றும் நான் உம் அடிமை.

4. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை
ஆற்றிடுமே உந்தன் சமுகமே;
பெலத்தின்மேல் பெலனடைந்து நான் சேருவேன்
பேரின்ப சீயோனில் நான் வாழ்ந்திடவே.

**(192)**

இதோ! மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே
வாசம் செய்கிறாரே.

1. தேவன் தாபரிக்கும் ஸ்தலமே,
தம் ஜனத்தாரின் மத்தியிலாம்,
தேவன்தாம் அவர்கள் தேவனாயிருந்தே
கண்ணீர் யாவையும் துடைக்கிறாரே.

2. தேவ ஆலயமும் அவரே,
தூய ஒளி விளக்கும் அவரே;
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவ நதியும் அவரே.

3. மகிமை நிறை பூரணமே,
மகா பரிசுத்த ஸ்தலம் அதுவே;
என்றும் துதியுடனே அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கின்றதே.

**(193)**

1. என்முன் உள்ள பந்தயம் போராடி வென்றதும்
மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுவேன்;
விலை செலுத்தி விசுவாசம் காத்தபின்பு பெறுவேன்
பரிசாய்த் தூய நகரம்.

*மகிமைக்குள் எடுத்துக்கொள்வார்*
*தூய நகரத்தில் வாழ்வேன்--*
*புது எருசலேம்! புது எருசலேம்*
*ஜெயங்கொண்டோர் கெம்பீரிக்க*

*நம் துதிகள் பொங்குமே*
*புது எருசலேமிலே.*

2. பூலோக யாத்திரையில் பாடுகளில் மகிழ்கிறேன்,
மேலான தேசம் காணும் ஆவலில்,
யாவரும் உலக ஆதாயமே தேடினாலும் என்
வாஞ்சை தூய நகரமே.

3. கடினப் பாதையில் என் பாதங்கள் களைப்பினும் அந்த
நகரை எண்ணப் புத்துயிர் பெறுகிறேன்;
கண்கள் நீர் நிரம்பினாலும் இருதயம் நிலைக்குமே
பரிசான நகரத்தின்மேல்.

4. பரம பரிசாம் இலக்கைநோக்கி ஆசையாய்த் தொடர்கிறேன்
போராடி ஓடி முனைந்துசெல்கிறேன்;
பின்னானவை மறந்து முன்னானவை நோக்கியே
தூய நகரம் பெற்றிட.

*தேவ அன்பால் கிருபையால் நான்*
*தூய நகரத்தில் வாழ்வேன்*
*புது எருசலேம், புது எருசலேம்*
*சுத்தர் யாவரும் துள்ளிக் குதித்துத்*
*துதி செலுத்துவார்*
*புது எருசலேமிலே.*

1. When I've run the race before me
And have fought to victory,
I'll be raptured to the glory of the Lord;
When I've kept the faith at any cost,
The Holy City then
I'll receive as my reward.

*I'll be raptured into glory,*
*In the Holy City dwell —*
*New Jerusalem, New Jerusalem;*
*With the overcomers shouting,*

*How our praises then will swell,*
*In the New Jerusalem.*

2. As a pilgrim here I wander;
While afflicted I rejoice,
For a better land I soon expect to see;
Though all others seek for earthly gain,
The Holy City e'er
Will my aspiration be.

3. Though my feet are often wearied
On the rough and rugged path,
Just by thinking of that city, I'm restored;
Though my eyes be filled with tears,
My heart will evermore be fixed
On that City, my reward.

4. With strong purpose I now wrestle;
And I run toward the goal;
I pursue the prize, God's highest to obtain;
Pressing forward toward the mark,
I run forgetting all behind,
Thus the Holy City gain.

*By His love and through His grace I'll*
*In the Holy City live —*
*New Jerusalem, New Jerusalem;*
*All saints leaping, singing, shouting,*
*To the Lord their praises give,*
*In the New Jerusalem.*

**(194)**

தேவ சாயலாக மாறி
தேவனோடிருப்பேன்--நானும்

1. அந்த நாளும் நெருங்கிடுதே
அதி விரைவாய் நிறைவேறுதே;
மண்ணின் சாயலை நான் களைந்தே, தம்
விண்ணவர் சாயல் அடைவேன்.

2. பூமியின் கூடாரம் என்றும்
பலவீனமே, அழிந்திடுமே;
கைவேலையல்லாத பொன்வீடு
கண்டடைந்து வாழ்ந்திடுவேன்.

3. சோரும் உள்ளான மனிதன்
சோதனையில் பலமடைய
ஆற்றித் தேற்றிடும் தேற்றரவாளன்
ஆண்டவர் என்னோடிருப்பார்.

4. ஆவியின் அச்சாரம் ஈந்தார்,
ஆயத்தமாய்ச் சேர்ந்திடவே;
ஜீவனே எனது கிறிஸ்தேசு
சாவு எந்தன் ஆதாயமே.

5. காத்திருந்து ஜெபிப்பதினால்
கழுகுபோல பறந்தெழும்பி,
ஜீவ யாத்திரை ஓடி முடித்து
ஜீவக் கிரீடம் பெற்றிடுவேன்.

6. மூன்றும் ஒன்றாய் ஜொலிப்பவரை
முகமுகமாய்த் தரிசித்திட
வாஞ்சையாய்த் தவிக்கும் எனதுள்ளம்
வாரும் என்று கூப்பிடுதே.

**(195)**

பரலோகமே என் சொந்தமே
என்று காண்பேனோ?
என் இன்ப இயேசுவை
என்று காண்பேனோ?

1. வருத்தம் பசி தாகம்
மனதுயரம் அங்கே இல்லை,
விண்கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன்.

2. சிலுவையில் அறையுண்டேன்
இனி நானல்ல இயேசுவே
அவரின் மகிமையே
எனது இலட்சியமே.

3. இயேசு என் நம்பிக்கையாம்
இந்தப் பூமியும் சொந்தமல்ல
பரிசுத்த சிந்தையுடன்
இயேசுவைப் பின்பற்றுவேன்.

4. ஓட்டத்தை ஜெயமுடன்
நானும் ஓடிட அருள் செய்வார்
விசுவாச பாதையில்
சோராது ஓடிடுவேன்.

5. அழைப்பின் சத்தம் கேட்டு
நானும் ஆயத்தமாகிடுவேன்
நாட்களும் நெருங்குதே
வாஞ்சையும் பெருகுதே.

## திருமணப் பாடல்கள்

**(196)**

1. ஆசீர்வதியும் கர்த்தரே, ஆனந்தம் மிகவே!
நேசா, உதியும் சுத்தர்மேல், நித்தம் மகிழவே!
வீசீரோ வான ஜோதி கதிர் இங்கே!

மேசியா, எம் மணவாளனே!
ஆசாரியனும் வான் ராஜனும் ஆசீர்வதித்திடும்!

2. இம் மணமக்களோடு நீர் என்றென்றும் தங்கிடும்!
உம்மையே கண்டும், பின்சென்றும், ஓங்கச் செய்தருளும்!
இம்மையே மோட்சமாக்க வல்லவரே!
இன்பத்தோடன்பாக்கும் ஊற்று நீர்!
உம்மிலே தங்கித் தரிக்க ஊக்கம் அருளுமே!

3. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே!
பற்றி உம்மையே சார்ந்திவர் பாரில் வசிக்கவே!
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே!
வீற்றாளும் நீர் ஏக ராஜனாய்!
ஏற்றவான் ராயர் மக்களாய் ஒப்பாய் ஒழுகவே!

4. உன்னத ஆசீர்வாதங்கள் தண்பனிபோல் பெய்யும்!
நன்மையும் இன்பமும் பொங்க ஒன்றாய்க் காத்திடுவீர்!
மண்ணில் விண்மக்களாக வாழ்ந்திடவே!
விண்ணவர் சாட்சி விளங்கவே!
ஜீவனும் ஆசீர்வாதமும், தேவா, பொழியுமே!

**(197)**

1. ஏதேனில் ஆதி மணம் ஆசீர்வதித்தவர்,
அன்பின் தொனி என்றென்றும் மாறாதிருக்குமே!

2. தேவ மக்கள் சேர்கின்ற விவாகம் தூய்மையாம்,
தேவன் பிரசன்னமாவார், நித்திய வாழ்த்துண்டாம்!

3. ஆதாம் விலாவினின்று ஏவாளை எடுத்து
ஈவாய்த் தந்த பிதாவே, பிரசன்னமாகுமே!

4. இரு தன்மையும் சேர்ந்த மனித மைந்தனே,
இவ்விருவரும் சேர்க்க பிரசன்னமாகுமே!

5. மணாளன் கிறிஸ்துவுக்கு மணாளி சபையை
ஜோடிக்கின்ற ஆவியே, பிரசன்னமாகுமே!

6. உம் சிறகால் நீர் மூடும், தீங்கொன்றும் நேராது,
உம் பலிபீடம் நோக்கி நடப்பர் நேராக!

7. இருப்போராய் இருக்கும் பிதா, சுதன், ஆவி
அவருக்கே மகிமை, துதி, உண்டாகட்டும்!

**(198)**

நன்னாள் இதிலே ஆசீர் கூற வாரும் தேவனே!
வழுவாமல் காத்துன்னை மகிழ்வோடு,
மாசின்றி உன்னை நிறுத்துவாரே.

1. அவர் வழி நடப்பவன் பாக்கியவான்
நன்மையும் பலனும் பெற்றிடுவாய்,
உன் மனைவி உன் வீட்டில் கனிதரும் திராட்சை
பிள்ளைகள் பந்தியில் ஒலிவக்கன்றுகள்.

2. ஒருமித்து வாழ்வது நன்மை, இன்பம்!
பரன் அங்கு தங்கி மகிழ்ந்திடுவார்,
தம் ஜீவனைப் பெய்வார், ஆசி நிறைப்பார்,
தம் கைகளால் உம் இல்லம் அமைப்பார்.

3. ஆசீர்வதித்துன்னைக் காத்திடுவார்!
அவர் முகம் உன்மேல் ஒளிரச் செய்வார்,
உன்மேல் அருள் பொழிவார், அமைதல் அருள்வார்,
உன்னோடு தேவ சமுகம் இருக்கும்.

**(199)**

1. மங்களம் செழிக்கக் கிருபை அருளும்
மங்கள நாதனே.
மங்கள நித்திய மங்கள நீ
மங்கள முத்தியும், நாதமும் நீ
எங்கள் புங்கவ நீ
எங்கள் துங்கவ நீ
உத்தம சத்திய நித்திய தத்துவ
மெத்த மகத்துவ
அத்தனுக்கத்தனாய் ஆபிராம் தேவன் நீர்.

2. மங்கள மணமகன் க்கும்
மங்கள மணமகள் க்கும்
மானுவேலர்க்கும் மகானுபாவர்க்கும்

பக்தியுடன் புத்தி முக்தியளித்திடும்
நித்தியனே உன்னைத்
துத்தியம் செய்திடும்
சத்திய வேதர்க்கும்

## பல்லவிகள்

**(1)**

அகிலத்தையும் ஆகாயத்தையும்
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே;
ஆண்டவர் நீர் சிருஷ்டித்தீரே
உந்தன் வல்ல கரத்தினாலே.
ஆகாதது ஒன்றுமில்லை,
உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை;
சர்வ வல்லவரே,
கன மகிமைக்குப் பாத்திரரே,
ஆகாதது என்று
ஏதுமில்லை உம்மால்,
ஆகாதது ஒன்றுமில்லை.

Our Lord God, Thou hast made the heavens
And the earth by Thy great power;
Our Lord God, Thou hast made the heavens
And the earth by Thine outstretched arm.
Nothing is too difficult for Thee,
Nothing is too difficult for Thee;
O, great and mighty God,
Great in power and mighty in deed,
Nothing, nothing, absolutely nothing,
Nothing is too difficult for Thee.

**(2)**

அதிசயம் அவரின் நாமமே
ஆலோசனைக் கர்த்தருமவரே,
வல்ல தேவா, நித்தியமான பிதா,
சமாதான பிரபு, இயேசுவே,
வல்ல தேவா, நித்தியமான பிதா,
இம்மானுவேல், இயேசு இரட்சகர்.

And his name shall be called Wonderful
For the world will be healed by his power
He will be our unfailing Counselor
In each uncertain hour
The Mighty God of heaven above
So meekly comes to earth
The Everlasting Father
This child of lowly birth
Tell his name, sing his praise in all the world
Till all the world believes
Till every voice is lifted up
To praise the Prince of Peace

**(3)**

அவர் சமுகம் என் சந்தோஷமே
அது நிறைவான சந்தோஷமே
என் பாத்திரம் நிரம்பி நிரம்பி வழியுதே
ஆனந்தம் பேரானந்தமே.

In His presence there is fullness of Joy (2)
My cup is overflowing, more than overflowing
Fullness blessed fullness of joy.

**(4)**

அற்புத ஜீவியம், ஆஹா! அற்புதம்!
ஆனந்தம்! அற்புதம்! எனக்கு
இயேசுவைச் சந்தித்தேன்,
என்னை முற்றும் மாற்றினார்.
அற்புத ஜீவியமே,
இயேசு என் உள்ளத்தில் வந்த நாள்முதல்

சொல்லிமுடியாத அன்பு என்னில் பொங்குதே;
நான் என் நேசர்க்காய் ஜீவிப்பேன்
அற்புத ஜீவியமே.

**(5)**

அற்புதம் அற்புதம் இயேசு எனக்கு,
யோசனைக் கர்த்தராம் வல்ல மீட்பராம்,
பாவம் சாபம் யாவும் நீக்கி என்னை இரட்சித்தார்;
அற்புதம் என் இயேசுவுக்கு ஸ்தோத்திரம்

Wonderful, wonderful, Jesus is to me,
Counselor, Prince of Peace,
Mighty God is He,
Saving me, keeping me,
From all sin and shame,
Wonderful is my Redeemer,
Praise His name!

**(6)**

ஆத்மாவே துதி, கர்த்தரைத் துதி,
முழு உள்ளமே பரிசுத்தரைத் துதி,
ராஜாதி ராஜாவே,
கர்த்தாதி கர்த்தாவே,
ராஜாதி ராஜாவே,
சதாகாலம் ராஜாவே;
ஆத்மாவே துதி, கர்த்தரைத் துதி,
முழு உள்ளமே பரிசுத்தரைத் துதி,

Bless the Lord oh my soul
Oh my soul
Worship His Holy name
Sing like never before

Oh my soul
I'll worship Your Holy name

**(7)**
ஆழியின் அகலம் ஆகாயத்துயரமாய்
ஆழத்தே என் மீட்பர் பாசமாய் ஆழமாய்
அபாத்திரன் எனினும் மைந்தனென்றே தயவாய்
அழைத்துச் சேர்த்தன்பாய் எங்கேயும்
போதிப்பார் நேசராய்.

Wide, wide as the ocean, high as the heaven above;
Deep, deep as the deepest sea is my Savior’s love.
I, though so unworthy, still am a child of His care;
For His Word teaches me that His love reaches me everywhere.

**(8)**
இயேசு என்னைக் கைவிடமாட்டார் *(2)*
கடும் புயல் வரினும்
பெருங் காற்று வீசினும்
இயேசு என்னைக் கைவிடமாட்டார்.

**(9)**
இயேசுவின் அழகென்னில் காணட்டுமே,
அவர் அன்பும், இரக்கமும், தூய்மையும்;
ஆவியானவரே! என்னைச் சுத்தம் செய்யும்,
இயேசுவின் அழகென்னில் காணுமட்டும்.

Let the beauty of Jesus be seen in me,
All His wonderful passion and purity;
O my Savior divine, All my being refine,
Till the beauty of Jesus be seen in me.

**(10)**

இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன் (3)
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான்.
உலகம் என்பின்னே, சிலுவை என்முன்னே (3)
பின்னோக்கேன் நான் பின்னோக்கேன் நான்.

I have decided to follow Jesus (3)
No turning back, no turning back.
The world behind me, the cross before me (3)
No turning back, no turning back.

**(11)**

இயேசுவோடு செல்ல
என் வாழ்விலின்பம் பெருகுதே;
இயேசுவோடு வாழ
என் அன்பு பொங்குதே;
இரட்சித்தென்னைக் காத்த
அவர் வரக் காத்திருக்கிறேன்;
இயேசுவோடு வாழ
என் வாழ்விலின்பம் பெருகுதே.

Every day with Jesus
Is sweeter than the day before
Every day with Jesus
I love Him more and more.
Jesus saves and keeps me
And He's the one I'm waiting for
Every day with Jesus
Is sweeter than the day before

**(12)**

*இன்றே! இன்றே! கிறிஸ்தேசு வாழ்கிறார்,*
*என் ஜீவ நாட்கள் நித்தியமாய் என்னோடு நடக்கிறார்.*
*இன்றே! இன்றே! கிறிஸ்தேசு இருக்கிறார்,*
*என் உள்ளத்தில் அவர் தங்குவதால்,*
*இது என் நம்பிக்கை.*

He lives, He lives, Christ Jesus lives today!
He walks with me and He talks with me
Along life's narrow way.
He lives, He lives, salvation to impart!
You ask me how I know He lives:
He lives within my heart.

**(13)**

*இனி ஜீவிப்பது நானல்ல,*
*கிறிஸ்துவே என்னில் ஜீவிக்கிறார் (2)*
*அவரே! அவரே! இயேசு என்னில் ஜீவிக்கிறார்.*

It is no longer I that liveth
But Christ that liveth in me (2)
He lives. He lives
Jesus is living in me.

**(14)**

*உந்தன் ஜீவ ஊற்று என்னில் பாயட்டுமே,*
*உந்தன் ஆவி என்னில் தங்கி ஆளட்டுமே,*
*எந்தன் சிந்தை தாக்கும் எந்தச் சூழ்நிலையும்*
*எந்தன் பாரம் கவலைகள் வைத்துவிட்டேன்.*
*இயேசு! இயேசு! என் இயேசு!*

Let Your living waters flow over my soul
Let Your Holy Spirit come and take control

Of every situation that has troubled my mind
All my cares and burdens unto You I give
Jesus, Jesus, my Jesus

**(15)**

உம்மில் மறைவேன் என் புகலிடமே,
தீமை யாதும் அங்கே வராது, திகிலுமிராது;
உம்மில் மறைவேன் கல்வாரிக் கிறிஸ்து,
உயிர்த்தெழுதலின் நிறைவே, உம்மில் மறைவேன்.

**(16)**

உம்மைக்கண்ட நாள்தொடங்கி,
உள்ளம் அன்பால் பூரிக்குதே,
அல்லேலூயா! பேரானந்தம்!
வெள்ளம்போல் பொங்கிப் பாயுதே;
ஆதி அன்பிதே! மதுர அன்பு!
இயேசு, இயேசு, என் அன்பே;
அன்புக்கெல்லாம் ஆழ்ந்த அன்பு,
என்னைக் கண்ட பேரன்பு,
உண்மை அன்பிதே! மதுர அன்பு!
இயேசு, இயேசு, என் அன்பே!

From the moment, I first met Thee,
How my heart was filled with joy,
Hallelujah, full in me,
As Thou flood me without alloy,
Oh, the sweetest love is this first love,
Jesus, O Jesus, my love,
Far excelling all other loves;
Such love reaches me,
Such a sweet love, such a real love,
Jesus, O Jesus, my love.

**(17)**

என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ! (2)
என் இயேசுவால் ஆகாதது (2)
என் இயேசுவால் ஆகாததொன்றுண்டோ?

என் இயேசுவால் ஆகாததொன்றில்லை (2)
என் இயேசுவால் ஆகாதது (2)
என் இயேசுவால் ஆகாததொன்றில்லை.

**(18)**

என் தீபத்திற்கு எண்ணெய் தாரும்,
எண்ணெய் ஊற்றும் நல் ஆவியே!
என் தீபத்திற்கு எண்ணெய் தாரும்,
அருணோதயம் மட்டுமே.
ஓசன்னாவே, ஓசன்னாவே!
இராஜா இயேசுவுக்கு ஓசன்னா
ஓசன்னாவே, ஓசன்னாவே, ஆ!
இராஜா இயேசுவுக்கு ஓசன்னா!

Give me oil in my lamp, keep me burning
Give me oil in my lamp, I pray
Give me oil in my lamp, keep me burning
Keep me burning till the break of day
Sing hosanna, sing hosanna
Sing hosanna to the Servant King
Sing hosanna, sing hosanna
Sing hosanna, let us sing

Give me joy in my heart, keep me praising
Give me joy in my heart, I pray
Give me joy in my heart, keep me praising
Keep me praising till the break of day

Sing hosanna, sing hosanna
Sing hosanna to the Servant King
Sing hosanna, sing hosanna
Sing hosanna, let us sing

Give me peace in my heart, keep me loving
Give me peace in my heart, I pray
Give me peace in my heart, keep me loving
Keep me loving till the break of day

**(19)**

என் உள்ளம் தேவன்பால் பொங்கி வழியுதே,
இயேசென்னை இரட்சித்தார் நான் ஆடிப்பாடுவேன்;
எவரும் அறியாரே, என் உள்ளம் பொங்குதே
என் உள்ளம் பொங்கிப் பொங்கிப் பொங்கி வழியுதே.

It's bubbling, it's bubbling
It's bubbling in my soul,
I am singing, I'm dancing
Since Jesus made me whole
No folks can understand me
How can I keep it quiet
It's bubbling, bubbling, bubbling
Bubbling, bubbling day and night.

**(20)**

என் ஜீவன் உம்மிலே
என் பெலன் உம்மிலே
என் நம்பிக்கை உம்மில்
உம்மில்
நெஞ்சார உமைத் துதிப்பேன்
மனதார உமைத் துதிப்பேன்

ஜீவனோடும் பலத்தோடும்
என் நம்பிக்கை உம்மிலே.

My life is in You Lord
My strength is in You Lord
My hope is in You Lord
In You, it's in You (Repeat)
I will praise You with all of my heart
I will praise You with all of my mind
With all of my life, and all of my strength
All of my hope is in you.

**(21)**

*ஓ! இன்ப நாள்! ஓ இன்ப நாள்!*
*என் பாவம் தீர்ந்துபோன நாள்!*
*பேரன்பர் என்னை இரட்சித்தார்,*
*சீராக்கி இன்பம் நல்கினார்,*
*இன்ப நாள்! ஓ, இன்ப நாள்!*
*என் பாவம் தீர்ந்துபோன நாள்.*

**(22)**

*ஓ! தேவனுக்கு மகிமை! தூக்கியெடுத்தார்!*
*என்னைத் தூக்கியெடுத்தார் இயேசு!*
*தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே,*
*ஓ! தேவனுக்கு மகிமை;*
*நான் இயேசுவை நேசிக்கிறேன்,*
*மேன்மேலும் நேசிக்கிறேன்,*
*அக்கரையில் நான் நின்று அவரை*
*என்றென்றும் வாழ்த்துவேன் (2)*

Oh! Glory to God, He has lifted me up
He has lifted me up I know
He reached out His hand

And He lifted me up
And that’s why I love Him so
I love Him more and more (2)
And when I stand up on the other shore
I’ll praise Him more and more.

**(23)**

*ஓசன்னா! ஓசன்னா!*
*உன்னதத்தில் ஓசன்னா!*
*உம்மை உயர்த்திடுவோம்,*
*துதி நிறைவுடன்*
*கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர்,*
*ஓசன்னா, ராஜ ராஜனே.*
*மகிமை! மகிமை!*
*மகிமை ராஜ ராஜனே!*
*உம்மை உயர்த்திடுவோம்,*
*துதி நிறைவுடன்,*
*கர்த்தரே! நீர் உயர்ந்திடுவீர்,*
*ஓசன்னா, ராஜ ராஜனே.*

Hosanna, hosanna, hosanna in the highest
Lord we lift up Your name
With a heart full of praise
Be exalted, oh Lord my God
Hosanna in the highest

Glory, glory, glory to the King of kings
Lord we lift up Your name
With a heart full of praise
Be exalted, oh Lord our God
Glory to the King of kings

**(24)**

கட்டும் கர்த்தாவே நீர்,
கட்டும் கர்த்தாவே நீர்,
கட்டும் கர்த்தாவே அறுந்து
போகாத கயிற்றால்;
கட்டும் கர்த்தாவே நீர்
கட்டும் கர்த்தாவே நீர்
கட்டும் எங்களை அன்பால்
தேவன் ஒருவராம்!
வேந்தரும் ஒருவராம்!
சரீரம் ஒன்றுதானே!
பாடுவோம் அதனால்!

Bind us together, Lord
Bind us together, Lord,
Bind us together with cords,
That cannot be broken;
Bind us together, Lord,
Bind us together, Lord,
Bind us together with love.
There is only one God!
There is only one King!
There is only one body!
That is why I sing.

**(25)**

கற்பாறையின்மேல் கட்டினவன் புத்தியுள்ளவன் *(3)*
பெருமழை பெய்தது *(2)*
பெருமழை பெய்து நீர் உயர்ந்தது *(3)*
அந்த வீடு நிலைத்து நின்றது.
மணலின்மேல் கட்டினவன் புத்தியற்றவன் *(3)*

பெருமழை பெய்தது *(2)*
பெருமழை பெய்து நீர் உயர்ந்தது *(3)*
அந்த வீடு அழிந்துபோனது.
கற்பாறையான இயேசுவின்மேல் கட்டுவாயானால் *(3)*
உன் ஜெபம் கேட்கப்படும்.
உன் ஜெபம் கேட்கப்பட்டு மேன்மையடைவாய் *(3)*
நீ என்றென்றும் நிலைத்திருப்பாய்.

**(26)**

துதி, கனம், மகிமையுமக்கே,
ஓ! எல்லாமுமே! ஓ எல்லாமுமே!
துதி, கனம், மகிமையுமக்கே,
ஓ! நீரே ராஜாவே!
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரமே, மிக ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்
ஓ! நீரே இராஜாவே.

**(27)**

தூய இதயம் சிருஷ்டியும் தேவா,
நிலையான ஆவி புதிதாக்கும்;
தூய இதயம் சிருஷ்டியும் தேவா,
நிலையான ஆவி புதிதாக்கும்.
உமைவிட்டு எனைத் தள்ளாதிரும்,
உம் ஆவியை எனைவிட்டெடுக்காதீர்;
மீட்பின் மகிழ்ச்சி மீண்டும் எனக்களியும்,
நிலையான ஆவி புதிதாக்கும்.

Create in me a clean heart, O God
And renew a right spirit within me
Create in me a clean heart, O God
And renew a right spirit within me
Cast me not away from thy presence.

Take not Thy Holy Spirit from me
Restore unto me the joy of Thy salvation
And renew a right spirit within me.

**(28)**

தெய்வ அன்பே, நித்ய அன்பே!
என்மூலம் ஊற்றும்;
கல்வாரியின் அன்பையே
கேட்கிறேன் கர்த்தா,
நிரம்பிப் ப்ரவாகித்து
வழிந்தோடச் செய்யுமே;
தெய்வ அன்பே, நித்ய அன்பே!
என்மூலம் ஊற்றும்.

**(29)**

தேவன் நமக்காய்த் தம் மைந்தனைத் தந்தார்,
சிலுவையில் மாண்டார், என்னை விடுவித்தார்,
திரும்ப வருவார், என்னே மகிமையாய்!
அற்புத அன்பே இதே!

**(30)**

நான் இயேசுவை நேசிக்கிறேன்,
நான் இயேசுவை நேசிக்கிறேன்,
நான் அவர் அருகில் நித்தம் தங்கியிருப்பேன்,
நான் இயேசுவை நேசிக்கிறேன்.

I love Him better every day
I love Him better every day
Close by His side
I will abide
I love Him better every day.

**(31)**

நீங்கிற்றே, நீங்கிற்றே, நீங்கிற்றே,
என் பாவ பாரமெல்லாம் நீங்கிற்றே;
நீங்கிற்றே, நீங்கிற்றே, நீங்கிற்றே,
என் பாவ பாரமெல்லாம் நீங்கிற்றே;
சர்வ பாவங்களும்
சுத்திபண்ணும் இரத்தத்தால்

Rolled away, rolled away, rolled away
Every burden on my heart rolled away
Rolled away, rolled away, rolled away
Every burden on my heart rolled away
All my sin had to go, 'Neath the crimson flow..
Rolled away, rolled away, rolled away
Every burden on my heart rolled away

**(32)**

நேசிக்கச் சிறந்தவர் கிறிஸ்தேசு,
நேசிக்கச் சிறந்தவர் கிறிஸ்தேசு,
ஜெபிக்கும்போது கேட்பாரே,
தவிக்கும்போது காப்பாரே;
ஆம்! நேசிக்கச் சிறந்தவர் கிறிஸ்தேசு.

The best friend to have is Jesus,
The best friend to have is Jesus,
He will help you when you fall,
He will hear you when you call;
Oh, the best friend to have is Jesus.

**(33)**

நேற்றும் இன்றும் என்றும் மாறார்
இயேசு இரட்சகர்;

எல்லாம் மாறினும் இயேசு மாறார்
மகிமை அவர்க்கே.

Yesterday, today, forever, Jesus is the same,
All may change, but Jesus never—glory to His name!
Glory to His name! Glory to His name!
All may change, but Jesus never—glory to His name!

**(34)**

முதன்முதலாய் தேவ அரசும்,
நீதியையும் தேடுங்கள்;
அப்போது யாவும் கூடக்கொடுக்கப்படும்,
அல்லேலு...அல்லேலூயா!
கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்,
தேடுங்கள், கண்டடைவீர்,
தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும்,
அல்லேலு...அல்லேலூயா!

Seek ye first the Kingdom of God
And His righteousness
And all these things shall be added unto you
Allelu, alleluia.
*Alleluia, alleluia, alleluia, alleluia*
*Alleluia, alleluia, alleluia.*
Man shall not live by bread alone
But by every word
That proceeds from the mouth of God
Alleluia, alleluia

Ask and it shall be given unto you
Seek and ye shall find
Knock and the door shall be opened unto you
Allelu, alleluia.

**(35)**

வாசிக்கச் சிறந்த புத்தகம் வேதம்
வாசிக்கச் சிறந்த புத்தகம் வேதம்
அன்றாடம் நீ வாசித்தால்
குன்றாமல் நடத்துமே
ஆம்! வாசிக்கச் சிறந்த புத்தகம் வேதம்.

The best book to read is the Bible (2)
If you read it every day
It will help you on your way
Oh the best book to read is the Bible

**(36)**

வேதத்திலே, வேதத்திலே,
எப்பக்கம் பார்த்தாலும் இரக்கத்தைக் காண்பாய்,
துக்கம் துயரத்திலும் தூயர் வாக்கிதுவே
சோராமல் சொந்தமாய் நம்புவாயாக.

The grand old book, the grand old book,
You may find the verse of comfort wherever you may look
In sorrows, in pains His promises are claimed,
so keep on believing in the grand old book

**(37)**

ஜீவ அப்பம் புசிக்கின்றேன்
ஜீவ ஊற்றில் குடிக்கின்றேன்
குடிப்போர்க்கினி தாகம்
என்றும் வராதென்றார் இயேசு
என்ன? தாகம் வராதா? ஆம் தாகம் வராது
என்ன? தாகம் வராதா? ஆம் தாகம் வராது.
குடிப்போர்க்கினி தாகம்
என்றும் வராதென்றார் இயேசு

I'm feeding on the living bread,
I'm drinking at the fountain head;
And who so drinketh, Jesus said,
Shall never, never thirst again.
What, never thirst again?
No! never thirst again.
What, never thirst again?
No! never thirst again.
And whoso drinketh, Jesus said,
Shall never, never thirst again.

**(38)**

ஜீவிக்கிறார் இயேசு ஜீவிக்கிறார்,
என் உள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்,
என்னோடொன்றாய் ஆவியில் இணைந்து
என்றென்றும் ஜீவிக்கிறார்.

**(39)**

Come bless the Lord, all ye servants of the Lord
Come bless the Lord, all ye servants of the Lord,
Who stand by night, in the house of the Lord,
Lift up your hands, in the Holy place,
And bless the Lord, and bless the Lord.

O taste and see that the Lord is good -
Blessed is the man who trusts in Him.

He lifted me up from the miry clay,
And set my feet on the rock to stay,
He put a song in my heart to sing
A song of praise, a song of praise.

**(40)**

God will make a way
Where there seems to be no way
He works in ways we cannot see
He will make a way for me
He will be my guide
Hold me closely to His side
With love and strength for each new day
He will make a way He will make a way

By a roadway in the wilderness
He'll lead me
And rivers in the desert will I see
Heaven and earth will fade
But His word will still remain
He will do something new today.

**(41)**

He is my everything
He is my all
He is my everything
Both great and small
He gave His life for me
Made everything new
He is my everything
Now how about you?

Like honey in the rock
Sweet honey in the rock

For He tastes
Like honey in the rock.
Oh taste and see
For the Lord is good
For He tastes
Like honey in the rock

**(42)**

My Jesus, My Savior
Lord there is none like You
All of my days, I want to praise
The wonders of Your mighty love
My Comfort, My Shelter
Tower of refuge and strength
Let every breath, all that I am
Never cease to worship You

Shout to the Lord, all the earth let us sing
Power and majesty, praise to the King.
Mountains bow down and the seas will roar
At the sound of Your name
I sing for joy at the work of Your hands
Forever I'll love you, forever I'll stand
Nothing compares to the promise I have in You

**(43)**

There is none like You
No one else can touch my heart like You do

I could search for all eternity long
And find there is none like You

Your mercy flows like a river wide
And healing comes from Your hands
Suffering children are safe in Your arms
There is none like You

**(44)**

The steadfast love of the Lord never ceases
His mercies never come to an end
They are new every morning
New every morning.

Great is Thy faithfulness, O Lord.
Great is Thy faithfulness.